# திருக்கோணேஸ்வரம்

## தொன்மையும் வண்மையும்



சைவப்புலவர் - பண்டிதர்

இ. வடிவேல்




SOUTH ASIAN BOOKS
S 44, 2nd FLOOR,
C.C.S.M. Complex
COLOMBO 11.

உ

ஓம் சிவாயநம.

# திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும்



## திரிகோணமலைத் தேவாரம்

நிரைகழ லரவம் சிலம்பொலி அலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்தும் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடலோதம் நித்திலங் கொளிக்கும்
கோணமாமலை அமர்ந்தாரே.

★★★★


ஆக்கம்

சைவப்புலவர் - பண்டிதர்

இ. வடிவேல் அவர்கள்

திருக்கோணமலை



1992



# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | :- | திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும். |
| நூலாசிரியர் | :- | ஞானசிரோன்மணி - பண்டிதர் இ. வடிவேல். |
| வெளியீடு | :- | திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை. |
| முதற்பதிப்பு | :- | 1995 வைகாசி. |
| பக்கம் | :- | 130 |
| பிரதிகள் | :- | 1000 |
| அச்சகம் | :- | ஜெய்ஷான் பிரின்ட், 98. பி. இரத்தினம் வீதி, கொழும்பு - 13. |
| விலை | :- | ரூபா 80/- |

# ஆசியுரை

திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்
தேவஸ்தான ஆதீனகர்த்தா - வேதாகம மாமணி

## பிரதமகுரு ஸ்ரீ சோ. இரவிச்சந்திர குருக்கள் அவர்கள்

சர்வ வல்லமையுடைய ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் பதம பாதங்களை இதயத்தில் ஆவர்த்தனம் செய்து எல்லாம் வல்ல மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமானுடைய திரு வடிகளைத் தியானம் செய்து ''கோணேஸ்வரம் தொன்மை யும் வண்மையும்'' என்னும் இந்த அரிய ஆராய்ச்சி நூலை யும், நூலாசிரியர் சைவப்புலவர் — பண்டிதர். திரு. இ. வடி வேல் ஐயா அவர்களையும் மனப்பூர்வமாக இதயசுத்தியுடன் முதற்கண் ஆசீர்வதிக்கின்றேன்.

இந் நூலைப் படித்துப்பார்த்தபோது நூலில் அடங்கி யுள்ள அரும்பெரும் விஷயங்களைக் குறிப்பிடுவதற்கு முன் நூலையும், நூலாசிரியரையும் ஆசீர்வதிக்கும்படி எனது அடி யுள்ளத்திலிருந்து ஏதோ ஒரு சக்தி உந்துகிறதை உணர்ந்தேன்.

பண்டிதர் அவர்கள் இதற்குமுன் நான்கு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். எல்லா நூல்களும் ஆலயங்களைப்பற்றியும் இறைத்தத்துவங்களைப்பற்றியும், சாஸ்திர, தோத்திர, புராண, இதிகாசங்களைப்பற்றியும் ஆத்மீக நெறிகளையுமே கூறுவதாக அமைந்துள்ளது இந்நூலாசிரியரின் நுண்மாண் நுழைபுலம் தெய் வீக சம்பந்தப்பட்ட விஷயங்களையே அணுகி அணைந்து அனுப வித்துக்கொண்டிருப்பதை அவருடைய நூல்களில் காணக் கூடியதாயிருக்கின்றது.

திருஞானசம்பந்தர் தேவாரத் திருப்பதிகம் பாடித் துதித்த தெட்சணகயிலாயமாகிய திருக்கோணேஸ்வரம் என்னும் திவ்விய சிவக்ஷேத்திரத்தோடு அத்துவிதமாகக் கலந்துள்ள இந்நூலா

சிரியரின் இதயத்தில் மலர்ந்த ஆராய்ச்சி அறிவையும், அனுபவ உணர்வினையும் இந்நூலில் உள்ளங்கை நெல்லிக்கனி போலக் காணக்கூடியதாயிருக்கிறது.

வரலாற்றுப் பெருமைமிக்க திருக்கோணேச்வரத்திலிருந்து அன்னியரால் அழிக்கப்பட்ட மூன்று ஆலயங்களின் வடிவமைப்பையும். அவைகள் இருந்த இடங்களையும் புராண, இதிகாச சரித்திர ஆதாரங்களோடு கண்டறிந்து ஆசிரியருடைய அந்த ராத்மாவில் பிரகாசிக்கும் அற்புதமான அகக்காட்சியையும் ஒருங்கிணைத்துத் தொன்மைவாய்ந்த மூன்று ஆலயங்களையும் பிரத்தியட்சமாக இந்து மக்களுக்கு அருள்விருந்தாக வழங்கியுள்ளார்.

இந்நூல் ஓர் அற்புதப் படைப்பு. ஆச்சரியமான படைப்பு. கடல்கோளினால் அழிந்துபோன லெமோறியாக்கண்டத்து இந்து சமய, நாகரீக வரலாறுகளைத் தொட்டெடுத்து குளக்கோட்டு மன்னனுடைய திருப்பணி வரலாறுகளையும், போத்துக்கீசர் முதலிய அன்னியர்களால் அழிவுசெய்யப்பட்ட கோணேசர் கோவில் வரலாறுகளையும், தற்போதமைந்துள்ள கோணேசர் ஆலயத்தின் புதிய வரலாறுகளையும் காய்தல் உவத்தலின்றி நடு நின்று ஆய்வுசெய்து படைக்கப்பட்டுள்ள இந்நூல் வருங்கால மக்களுக்கு மிகவும் பயனுள்ள பொக்கிஷமாகும்.

இந்நூலைப் படைத்தளித்த பண்டிதர் = சைவப்புலவர். திரு. இ. வடிவேலனார் அவர்கள் திருக்கோணமலையில் கோயில்கொண்டருளியுள்ள ஸ்ரீ பத்திரகாளி அம்பாளுடைய கிருபாகடாட்சத்தினாலும், மாதுமையம்பாள் சமேத கோணேசப்பெருமானுடைய அருட்சக்தியினாலும் பல்லாண்டு வாழ்க. ''திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும்'' அனைவருக்கும் பயன்படும் அரும்பொருளாய் ஓங்குக

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

# ஆசியுரை

திருக்கோணமலை அருள்மிகு ஸ்ரீ முத்துக்குமார சுவாமி
தேவஸ்தான பிரதமகுரு - வேதாகம மாமணி

## பிரம்மஸ்ரீ இரா. இராஜேஸ்வரக் குருக்கள் அவர்கள்

கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை யமர்ந்த கோணேசர் கோயில் திருஞானசம்பந்தராலும் அருணகிரிநாத சுவாமிகளாலும் பாடல்பெற்ற சிறப்புமிக்க சிவஸ்தலம். இதன் தொன்மையையும், வண்மையையும்பற்றி சைவப் புலவர் - பண்டிதர். இ. வடிவேல் அவர்கள் பலகாலம் முயன்று ஆய்வுசெய்து, அதன்மூலம் தமது அகக்கண்ணில் கண்ட காட்சிகளை எமக்கு, கண்ணுக்கும், காதுக்கும் எட்டாத பல உண்மைச் சம்பவங்களைத் திரட்டி இந்நூலில் தந்துள்ளார்.

இந்நூலாசிரியர் திரு. இ. வடிவேல் அவர்கள் கோணேஸ்வரத்தின் தொன்மையைக் காண்பதில் ஒரு யோகியாகவும், அதன் வண்மையைக் காட்டுவதில் ஒரு போகியாகவுமிருந்து வரலாற்றுக்கு அப்பாற்பட்ட தொன்மையும், உண்மையும், தெய்வீகச் சிறப்புள்ள வண்மையுமுடைய இக் கோணேஸ்வரத்தின் புராண வரலாறுகள், கல்வெட்டுக்கள், கற்சாசனங்கள், ஏட்டுச்சுவடிகள் போன்றவற்றை நுணுக்கமாக ஆராய்ந்து மறைந்துபோனவற்றையும், மறைக்கப்பட்டவற்றையும் துணிச்சலோடும் தக்க ஆதாரங்களோடும் வெளிக்கொணர்ந்த பண்டிதர் அவர்களைச் சைவ நல்லுலகம் பாராட்டாமல் இருக்க முடியாது.

இவர் அரைநூற்றாண்டிற்கு மேலாக கோணேஸ்வரத்தோடு ஐக்கியப்பட்டிருந்த அனுபவ அறிவினாலும், தெய்வீக உணர்வினாலும், அன்னியரால் அழிக்கப்பட்ட மூன்று கோயில்களையும் தமது மனக்கண்ணிலே படம் பிடித்து எமக்கு அத

னைக் காட்டியுள்ளார். சிவபூமியெனச் சிறப்பித்துப் பேசப்படும் திருக்கோணமலையே தெட்சிண கைலாயம் என்பதையும் நிரு பித்து, போத்துக்கேயரால் அழிக்கப்பட்ட ஆலயங்களைச் சைவ உலகிற்கு அறிமுகம் செய்துள்ளார். கோணேஸ்வரத்தை அழித் தமையாற் போலும், போத்துக்கேயரது நாடு பல தடவை களில் இயற்கை அழிவுகளை எதிர்நோக்குகின்றது. கோணே சப்பெருமான் அமர்ந்தருளியுள்ள சிவ க்ஷேத்திரத்தை அழிப்ப வர்களையும், அழிக்க நினைப்பவர்களையும் தெய்வம் என்றோ ஒருநாள் தண்டித்தே தீரும்.

கி பி. 1624 ஆம் ஆண்டு கோணேசர் கோயில் போத்துக் கீசரால் அழிக்கப்பட்டது 1963 ஆம் ஆண்டு புதிய ஆலயம் அமைக்கப்பெற்று மகாகும்பாபிஷேகம் நிறைவேறியது. கும்பா பிஷேகத்தின் பின் முதன்முதலாக இவ்வாலயத்தின் வரலாற்றி லேயே மகோற்சவம் (கொடியேற்றம்) செய்த பெருமை எனது தந்தையார் பிரம்மஸ்ரீ. லெ. இராஜாமணிக் குருக்கள் அவர் களையே சாரும். அவருடைய மகனாகிய யான் இந்நூலுக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமைப்படுவதோடு, இந்நூலாசிரியர் சைவப்புலவர் - பண்டிதர் இ. வடிவேல் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து இன்னும் மறைபொருளாகவுள்ள எமது ஆலய வர லாற்றுப் பொக்கிஷங்களை வெளிக்கொணர மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமானையும், முத்துக்குமரனையும் பிரார்த்தித்து என் மனமுவந்த ஆசிகளை வழங்குகிறேன்.

'' லோகா சமஸ்த சுகினோ பவந்து ''

# அணிந்துரை

ஓய்வுபெற்ற பிரதி அதிபர்

## திருமதி. பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கம் அவர்கள்

(தலைவி; திருக்கோணமலை இந்து மகளிர் மன்றம்)

சைவப்புலவர் - பண்டிதர். திரு இ. வடிவேல் அவர்கள் எழுதிய ''திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும்'' என்னும் நூல் ஆசிரியரது ஐந்தாவது படைப்பாக வெளிவருகிறது என்பதை எண்ணும்போது உண்மையாகவே மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

கற்பனை இருந்தால் கதை எழுதிவிடலாம். அதனை ஆசிரியர் தன் விருப்பப்படி எழுதிவிடலாம். ஆனால் வரலாறுகள் அப்படியல்ல. உண்மைச்சம்பவங்களாக, ஆதாரபூர்வமாக எழுதப்படவேண்டும். இதற்கு ஆராய்ச்சி தேவை. உடல் உழைப்போடு, மனமும் தீர்கபுத்தியும், விவேகமும் ஒன்றுபட்டு உழைத்தாற்தான் இப்படியான ஒரு சிறந்த ஆராய்ச்சி நூலை எழுத முடியும்

இந்து சமயத்துக்கு, திருக்கோணமலையைச் சார்ந்த இந்து சமய ஆராய்ச்சிக்கு ஆசிரியர் ஆற்றும் தொண்டு மகத்தானது.

திருக்கோணமலையின் தொன்மைபற்றி எழுதும்போது ஆசிரியர் அவர்கள் அஞ்சா நெஞ்சத்துடன் பல உண்மைகளை அப்பட்டமாக எழுதியுள்ளார். அன்னாரின் துணிவு வரவேற்கத்தக்கது

கி.பி. 1624 ஆம் ஆண்டு கோணேசர் ஆலயத்தை இடித்தழித்த போர்த்துக்கேய தளபதி கொன்ஸ்ரன்டைன் டீசா பற்றிய குறிப்புக்களும், சேர் எமெசன் ரெனன்ற் எழுதிய இலங்கைச்சரித்திரம் இரண்டாம்பாகம் 484 - 485 பக்கங்களில

காணப்படும் செய்திகள், கி.பி. 1890 இல் ஹென்றி டப்ளியூ கேவ் எழுதிய இலங்கை என்னும் நூலில் காணப்படும் குறிப்புகள், திருக்கோணமலையை நேரில் பார்வையிட்ட கத்தோலிக்க மதபீடத்தின் முதன்மை பெற்றவர்களில் ஒருவரான பரிசுத்த பிரான்சிஸ் சவேரியாரின் ''இலங்கையிற் கத்தோலிக்கமதம் வளர்ந்த வரலாறு'' என்ற நூலில் ''கீழைத்தேச மிலேச்சர்களின் உரோமாபுரி திருக்கோணமலை'' என்று காணப்படும் குறிப்புகள் ஆதியன திருக்கோணேஸ்வரத்தின் தொன்மைபற்றி விளங்காதவர்களுக்கும் விளங்கக்கூடிய விதத்தில் தெளிவாக்கப் பட்டுள்ளது. இவற்றை விளக்கக்கூடிய விசேட படங்களும் நூலில் இடம்பெற்றிருப்பது சிறப்பம்சமாகும்.

கி.பி. 1979 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஸ்ரீ லங்கா அரசுகள் அமைத்த கட்டிடங்களையும், அதேயாண்டில் இலங்கை இராணுவத் தரைப்படை பிரிவொன்று தமது வழிபாட்டுக்காகக் கட்டிப் பின்னர் பெரிதாக எழுப்பிய பௌத்த விகாரை புத்தர் சிலை என்பனவற்றையும் முற்றாக அகற்றிவிட்டால் நமது அகக்கண்ணுக்கும், புறக்கண்ணுக்கும் தோற்றமளிக்கும் மலைப்பகுதியே கோணேஸ்வரமாகும்'' என்று ஆசிரியர் எழுதிய குறிப்பைப் படிக்கும் போது ஆசிரியரின் உள்ளக் குமுறலை மட்டுமல்ல எமது உள்ளக் குமுறலையும் உணரமுடிகிறது.

கந்தளாய்க்குளம் கட்டிய குளக்கோட்டு மன்னன், அதற்கு உதவிபுரிந்த அரசி ஆடகசௌந்தரி போன்றோரின் வரலாறுகள் தற்போது திரிபுபடுத்தப்பட்டு சிங்கள மன்னர்கள் கட்டியதாகக் கூறப்படும் செய்தியாதியன மனவேதனைக்குரியன.

புவனேகவீரபாண்டியன் பொறித்த வெற்றிச்சின்னமான இரு கயல்மீன் இலச்சனை (தற்போது கோட்டை வாயிலின் இருபக்கத் தூண்களிலுமுள்ளவை) கோட்டையினுள்ளே சுவரில் வைத்துக் க்ட்டப்பட்டிருக்கும் இடிக்கப்பட்ட கோணேசர் ஆலயத்தின் கல்வெட்டுக்கள் போன்ற எடுத்துக்காட்டுகள் நூலுக்கு அழகூட்டுகின்றன.

போர்த்துக்கேய சரித்திர நூலாசிரியர் டீ குவைறோஸ் பாதிரியார் அவர்களின் கூற்றாகிய ''பூரிஜெகன்னாத்திற்கும் இராமேஸ்வரத்திற்கும் போய் தெரிசனம் செய்து வரும் யாத்திரிகர்களிலும் பார்க்க மிக அதிகமானோர் இவ்வாலயத்தைத் தரிசிக்க வருகின்றனர்'' என்பனபோன்ற குறிப்புகளும் ஆதாரத்துடன் விளக்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கத்தின் புதைபொருளாராய்ச்சித்துறை நிறுவனத்தின் தலைவராயிருந்த திரு. பரணவிதான அவர்கள்

தமது ஆராய்ச்சியின்போது வேறெங்கோ ஓரிடத்தில் கண்டெடுக்கப்பட்ட தங்க ஏட்டில் கோகர்ணவிகாரைபற்றி இருந்த குறிப்புக்களை ஒரு ஆங்கிலத் தினசரியில் பல வருடங்களுக்கு முன் வெளியிட்டிருந்தார். அச்செய்தியை இலங்கை அரசாங்கம் இருட்டடிப்புச் செய்துவிட்டது ஏன்? என்பதை வாசகர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். திரு. பரணவிதான அவர்கள் உண்மையை வெளிப்படுத்தியதை அரசாங்கம் வரவேற்கவில்லை. இன மதத் துவேஷமே இதற்குக் காரணமாயிருந்தது. என்று ஓரிடத்தில் குறிப்பிட்டிருப்பதும், இலங்கை சுதந்திரமடைந்த பின் ஆட்சியாளர்களின் தந்திரோபாயங்களுக்கும், கௌரவங்களுக்கும் தன்மானத்தையும் சுயசிந்தனையையும் இழந்த சைவப் பெரியார்களின் தாராள மனப்பான்மையால் சைவாலயங்களின் வரலாறுகள் குழப்பநிலை அடைந்திருக்கின்றன. கதிர்காமத்துக்கும், வதுளைக் கதிரேசன் கோவிலுக்கும் மற்றும் பல இந்துக் கோயில்களுக்கும் நேர்ந்த கெதி திருக்கோணேஸ்வரத்துக்கும் வரவேண்டுமா? என்ற நிதர்சன உண்மைகளைக் கூற ஆசிரியரைவிட வேறு எவருக்கும் துணிவு வராது.

டாக்டர் பாலேந்திரா, திரு. மு. சிவப்பிரகாசம், திரு. செ. குணசிங்கம். பி. ஏ. (வரலாற்றுதுறைப் பேராசிரியர்) ஸ்ரீமான் வே. அகிலேசபிள்ளை போன்றோரின் குறிப்புகளும் இந்நூலில் அடங்கியுள்ளன.

கோவிலின் வண்மைபற்றி நிறைய இந்நூலில் இடம்பெற்றுள்ளது. ஆசிரியர் இயற்றிய பாடல்கள் பல ஆலயத்தின் வண்மையைக் கூறவல்லவை. இவற்றை வாசகர்களையே படித்துச் சுவைக்க விட்டுவிடுகிறேன்.

மொத்தத்தில் ''திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும்'' ஒரு சிறந்த நூல். வரலாற்று உண்மைகள் மறைக்கப்படாமல் தெளிவாக்கப்பட்டுள்ளன. 1831ஆம் ஆண்டு நவம்பர் 21ஆம் திகதி இலங்கை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கோணேசர் கல்வெட்டு பற்றிய ஒரு ஆங்கிலச் செய்தியும் நூலின் ஈற்றில் தரப்பட்டுள்ளது.

கோணேஸ்வரத்தின் தொன்மையும் வண்மையும் கூறும் நூல்களும், அகச்சான்றுகளும் என்ற தலையங்கத்தின் கீழ் முப்பத்தொரு நூல்களின் பட்டியலும் தரப்பட்டுள்ளது. இது மிகவும் சிறந்த ஒரு ஆராய்ச்சி நூல் என்று கூறி பண்டிதர் — சைவப்புலவர் திரு. இ. வடிவேல் அவர்கள் இன்னும் பல வருடங்கள் சுகதேகியாக வாழ்ந்து இப்படியான இன்னும் பல சிறந்த நூல்களைத் தரவேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன்.

உ
சிவமயம்

# அணிந்துரை

*K. Chitravelu*
(Retired)
(Admn : Officer / Registrar, High Court)

சைவ சமுதாயத்தின் நன்மதிப்பிற்குரிய சைவப்புலவர், திருமுறைச் செல்வர் பண்டிதர் திருவாளர் வடிவேல் அவர்களின் ''திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும்'' என்னும் நூல் சைவ உலகிற்கும், குறிப்பாகத் திருக்கோணமலை மாவட்ட சிவனடியாருக்கும் கிடைத்த ஓர் அரிய படைப்பு. ஏற்கனவே, முன்னோடியாக ''கோணேசர் கோவில் வரலாறு'' என்னும் நூலை ஆக்கி, அதனூடே இத்திருத்தலத்தின்கண் அமைந்திருக்கும் மூர்த்திகள், கோவில்கள் பற்றியும், மற்றும் சில சரித்திரபூர்வ விபரங்களையும் சுருக்கமான முறையில் கூறியிருக்கின்றார் பண்டிதர் அவர்கள். இந்நூலை உற்று நோக்கியவிடத்து ஆசிரியரின் உள்ளத்தில் ''கோணேஸ்வரம்'' ஆழமாகக் குடிகொண்டிருப்பதையும், அதன் ஒளிமயம் இத்தோடு நின்றுவிடாமல் வெகு விரைவில் சுடர்விட்டுப் பிரகாசிக்குமென்பதையும் உணரக்கூடியதாயிருந்தது. அவ்வுணர்வு வீண்போகவில்லை! இன்று ''திருக்கோணேஸ்வரம்'' தொன்மையையும், வண்மையையும் உறுதுணையாகக்கொண்டு, சைவத் தமிழ் கூறும் நல்லுலகில் தன் ஒளிக்கதிர்களைப் பரப்பி விட்டது.

திருக்கைலைப் பெருமானின் திருவுளப்படி வாயுதேவனால் கையிலை மலையினின்றும் பெயர்த்தெடுக்கப்பட்டு, இங்கு ஸ்தாபிக்கப்பட்ட திரிகூட மலைச்சிகரமே தட்சிண கையிலாயம் என்று போற்றப்படும் திருக்கோணேஸ்வரம். இது ''தட்சிண கையிலாய மகாத்மியம்'' என்னும் சமஸ்கிருத நூலின் கூற்று. இந்நூலில் இதைச் சுட்டிக்காட்டி, ஆதாரமாக இன்னும் பல புராண, இதிகாச, திருப்பதிக செய்யுட் கூற்றுகளையும் தொகுத்தெடுத்து விளக்கியுள்ளார் பண்டிதர் அவர்கள். மேலும், அறிவாளர்களின் கருத்துக்களை ஆராய்ந்து, உத்தர தட்சிண கையிலாய சேத்திரங்களின் ஒருங்கமைப்பு பற்றி,

பூகோள, பௌதீக, விஞ்ஞான ரீதி வழியாக ஒற்றுமை காண, பண்டிதர் அவர்கள் பின்பற்றிய வழி துறைகள் பாராட்டத் தக்கனவாகும்.

அடுத்தபடியாக, பண்டிதர் அவர்கள் சேகரித்த சரித்திர வரலாறுகள், அறிஞர்களின், அறிக்கைகள் மற்றும் கற்சாசனங்களின் விபரங்கள், திருக்கோணேஸ்வரத்தின் தொன்மையையும், போர்த்துக்கீசரால் அழிக்கப்படமுன்னர், இத்திருத்தலம் கொண்டிருந்த சிறப்பையும் ஆணித்தரமாக உறுதிப்படுத்துவதைப் பண்டிதர் அவர்கள் தெளிவாக விளக்கியிருக்கின்றார்கள். போர்த்துக்கேய பாதிரியார் குவைறோஸ் அவர்கள், தமது அறிக்கையிற் குறிப்பிட்ட மூன்று வானளாவிய கோபுரங்களுடன் கூடிய ஆலயங்களுடன், ஆதி காலத்தில் இத்திருத்தலம் கொண்டிருந்த அற்புதமான நிலை ஆகியவை, பண்டிதர் அவர்களின் அகக் கண்ணிற்தோன்றிய வர்ணனையில் படங்களுடன் அழகாகப் பிரதிபலிக்கப்படுகின்றன.

இத்துணை ஆதாரங்களையும், சரித்திர வரலாறுகளையும் பெற்றிருக்கும் திருக்கோணேஸ்வரத் தலத்திற்கு நேர்ந்துகொண்டிருக்கும் தடைகளும், இடையூறுகளும், பண்டிதரின் மனதில் கலக்கம் உண்டாக்குவதை அவதானிக்கக்கூடியதாயிருக்கின்றது. அன்னார் இவை தொடர்பாக நடக்கும் சில வஞ்சகமான், நேர்மையற்ற செயல்களைத் துணிகரமாக வெளிப்படுத்தியிருக்கின்றார். சரித்திர வரலாறுகளையும், சான்றுகளையும் புறக்கணித்தும், திரித்துக்கூறியும், திரிபு, மருவுதல் என்ற போர்வையில் புராதன இந்து மதத் தலங்களின் பெயர்களை மாற்றியும், அவற்றிற்குரிய இடங்களை ஆக்கிரமித்துக்கொள்ள முற்படும் சக்திகளை என்னென்று சொல்வது? இந்த நயவஞ்சக செயல்களை அறிந்தும் அறியாததுபோல நடிக்கும் அரசின் அசட்டைத்தனம்தானென்ன? இம்மாதிரியான கொள்கை அழிவுக்குத் தான் வழி கோலும்.

'' நாடொறு நாடி முறை செய்யா மன்னவன்
நாடொன்று நாடு கெடும் ''

என்பது பொய்யாமொழி

தூய சிந்தனையோடும், அயராத முயற்சியோடும் தம் வாழ் நாளை இம்மாபெருங் கைங்கரியத்தில் தனிப்பட்ட முறையில் அர்ப்பணித்துக்கொண்டிருப்பவர் எமது பண்டிதர் அவர்கள். அன்னாரின் '' திருமலை மாவட்டத் திருத்தலங்கள் '' என்னும் முந்திய நூல், ஈழத்தின் சைவ மத மறுமலர்ச்சிக்கொரு

தூண்டுகோலாக அமைந்துள்ளது. இந்து கலாச்சாரப் பாலை வனமாகிய திருமலை மாவட்டத்தில் (Hindu Cultural Desert) இவ்வரிய படைப்பின் பயனாக சைவமக்கள் மத்தியில் பசுமை யான, தெய்வத் தன்மையான சிந்தனைத் தளிர்கள் அரும்பி யிருக்கின்றனவென்றால் மிகையாகாது. இப்போது கிடைத் திருக்கும் ''திருக்கோணேஸ்வரம் - தொன்மையும் வண்மை யும்'' என்னும் அணிகலன் மாவட்டத் திருத்தலங்களின் சிகர மாகிய கோணேஸ்வரத்திற்கு சூட்டிய மணிக்கிரீடமாக அமை கிறது. முன்னரே குறிப்பிட்டபடி அடியார்களின் அகக் கண் முன்னே, இடித்து அழிக்கப்பட்ட திருக்கோணேஸ்வரம் மீண் டும் முற்றும் நிறைந்த வனப்புடனும், சிறப்புடனும் தோன்றி, தாயினும் நல்ல தலைவரின் திருத்தலம் இதுவேயென்றும், இதுவன்றி வேறொன்றும் இங்கில்லையென்றும், அனைவர் மனத்திலும் அசையாத நம்பிக்கையும், உறுதியும் ஏற்பட வழி வகுத்துவிட்டது இவ்வரிய பொக்கிஷம்.

ஈற்றில் ஒரு கருத்து ; பண்டிதர் அவர்கள், சைவ மக்களின் வழிபாட்டுத்தலங்கள் பற்றி, குறிப்பாக முக்கிய தலங்களான திருக்கோணேஸ்வரம், தம்பலகமம் ஆதி கோணநாயகர் ஆல யம் எதிர்நோக்கும் இடையூறுகள் பற்றி குறிப்பிட்டிருக்கின் றார். சரித்திர வரலாறுகளும், சான்றுகளும் மறைக்கப்படும் இந்நேரத்தில், மேலும், இவை தொடர்பான ஆராய்ச்சிப் படைப்புக்களும், விளக்கங்களும் வலுவடையவேண்டியது அத் தியாவசியமாகின்றது. ஏற்கனவே, இவ்வரும் பணியை மேற் கொள்ளவேண்டிய பெரும் பொறுப்பு இயல்பாகவே இறையரு ளால், தானாகவே பண்டிதர் அவர்களின் அகம் புகுவதா யிற்று. தொடர்ந்தும், இத்திருத்தலங்கள் சார்பாக, சைவ சமுதாயம் எதிர்நோக்கும் இன்னல்களைக் களையும் பொறுப் பைப் பண்டிதர் அவர்களே அரனின் ஆணையாக மேற்கொள்ள வேண்டும் இதுவரை அவர்கள் புரிந்த அருஞ்சேவைக்கு நன்றிக் கடன் செலுத்துவதோடு, அன்னாரின் வழிகாட்டலுக்கும், பணிப்புக்கும் அமைந்தவாறு செயலாற்ற திருக்கோணேஸ் வர பண்டைக்காலச் சரித்திர ஆராய்ச்சிப் பணியகம்'' நிறுவி வேண்டிய நிதி, மற்றும் சகல உதவிகளையும் நல்க, திருக் கோணேசராலய சபையும், திருத்தம்பலகாம ஆதிகோண நாயகர் ஆலய சபையும் ஒருங்கிணைந்து, தயக்கமின்றி முன் வரவேண்டுமென்பதே.

''இதனை இதனால் இவன் முடிக்குமென்றாய்த்
ததனை யவன் கண்விடல்''

சுபம்

உ

சிவமயம்

# அணிந்துரை

**திரு. வல்லிபுரம் தங்கராஜா அவர்கள்**
**தலைவர், திருக்கோணமலை மாவட்ட**
**இந்து இளைஞர் பேரவை**

ஒரு நூல் மனிதன் சிந்தனை செய்வதற்கு துணைநிற்கும் இயந்திரம் என்பது அறிஞர் கருத்தாகும் சைவப்புலவர் பண்டிதர் இ. வடிவேல் அவர்களின் "திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும்" என்னும் நூல் இக் கூற்றினை நிரூபிக்கும் விதத்தில் அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது. நீண்ட காலமாக திருக்கோணமலையில் வாழ்ந்து திருக்கோணேஸ்வர ஆலயப் பரிபாலனத்தில் முக்கிய இடத்தை வகித்த இந்நூலாசிரியர் தனது அயராத உழைப்பினாலும் தான் மேற்கொண்ட ஆராய்ச்சியினாலும் இப் படைப்பினை வெளியிடுவதை எம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது.

இந் நூலைப் படிப்பவர்கள் இந்நூலில் பல சிறந்த அம்சங்களைக் காண முடியும். திருக்கோணேஸ்வரத்தின் தொன்மையினை விளக்கும் பாது பண்டிதர் அவர்கள் காய்தல் உவத்தலின்றி முடிந்த முடிவுகளிற்கு முன்னுரிமையளிக்கும் விஞ்ஞானியைப் போலவும் உள்ளதை உள்ளபடி எடுத்துக்காட்டும் கண்ணாடியைப் போலவும் குறுக்கு விசாரணை மூலம் சாட்சிகளிடமிருந்து உண்மையைப் பெற முயற்சிக்கும் சட்டத்தரணி போலவும் பல்வேறு கருத்துரைகளிற்கு மத்தியிலும் உண்மையினை பிரித்தறிய முற்படும் நீதிபதி போலவும் செயற்பட்டிருப்பது நூலின் நம்பகத் தன்மையை அதிகரித்துள்ளது.

வரலாற்று நூல்களைப் படைப்போர் பல்வேறு ஆதாரங்களை அடிப்படையாக வைத்துச் செயற்படுவர். அவற்றுள் இலக்கிய சம்பந்தமானவை, கல்வெட்டுக்கள், சாசனங்கள், உலோகம்

நாணயம் சம்பந்தமானவை கலை சம்பந்தமானவை என சில வற்றை இங்கு குறிப்பிடலாம். அது மாத்திரமல்ல காப்பியங் களும் புராணங்களும் ஒரு சமுதாயத்தின் சமய கலாச்சார வரலாற்றினுக்கு முக்கிய சாதனமாயமையும் என்பது பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். இந்த வகையில் சைவப்புலவர் பண்டிதர் இ. வடிவேல் அவர்களின் '' திருக் கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும் '' என்னும் நூலை உற்று நோக்குமிடத்து இந்நூலில் குறிப்பிட்டுள்ள புராணவரலாறுகள், குளக்கோட்டு மன்னன் காலத்து கல் வெட்டுக்கள், கற்சாசனங்கள், ஏட்டுச்சுவடிகள், அன்னியர் ஆட்சிக்கால சரித்திர வரலாறுகள், பேராசிரியர் வே. அகிலேச பிள்ளை, திரு. செ. குணசிங்கம் போன்ற நம்நாட்டுப் பேரறி ஞர்களின் ஆராய்ச்சிக் குறிப்புக்கள், எமது நாட்டைத் தரிசித்த போர்த்துக்கேய தேச பாதிரியார் குவைறோஸ் போன்ற பிற நாட்டு நல்லறிஞர்கள் எழுதிய நூல்களில் கோணேஸ்வரம் பற்றி இடம்பெற்றுள்ள குறிப்புகள் இவ்வாக்கத்தினை வாச கர்கள் ஓர் ஆராய்ச்சி நூலாக ஏற்பதற்கு வழிவகுத்துள்ளது.

இத்தகைய படைப்புக்கள் எமது எதிர்காலச் சந்ததியினர் நம் முன்னோர் அளித்த அருஞ் செல்வங்களை ஆதாரபூர்வ மாக அறிந்து கொள்ளவும் அவற்றை கருத்துடனும் உரிமை யுடனும் பேணிப்பாதுகாக்கவும் பெரிதும் உதவும் என்பதில் சந்தேகமில்லை. இக் காரணத்திற்காக திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை இந்நூலினை வெளியிட முன்வந்துள்ளது. '' மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் '' என்னும் குறிக்கோளை தாரக மந்திரமாக கொண்டு இயங்கும் இப் பேரவை இந்து சமய கலாச்சார துறைகளில் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றி வருகின்றது என்பது யாவரும் அறிந்ததே.

இறுதியாக சைவப்புலவர் பண்டிதர் இ. வடிவேல் அவர் கள் எழுதிய '' திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வண்மை யும் '' நிச்சயமாக சைவ மக்கள் மனதில் ஓர் விழிப்புணர்ச் சியை ஏற்படுத்தும் என்பதிலும் திருக்கோணேஸ்வரம் பற்றிய வரலாற்றினை திரிபுபடுத்தி இலாபம் பெற எண்ணும் சகலரை யும் செவ்வனே சிந்திக்க வைக்கும் கருவியாய் அமையுமென்ப திலும் எவ்வித ஐயப்பாடும் இல்லை என்பது எனது கருத்தா கும்.

# சாற்று கவிகள்

அறுமுகவன் அடிபரவும் அருட்புலவன்
பண்டிதர் :- அ. ஆறுமுகம் அவர்கள் (பண்ணாகம்)

1. தெட்சண கைலாயம் தேவாரப் பாடலுறு
சுத்தசிவ புண்ணியத் தொல்பதியை - எத்தனைபேர்
என்னென்ன வண்ணமெலாம் ஏத்தி உரைத்துமதை
இன்னும் அளவிட் டிலர்.

2. கற்றுணர்ந்தோர் கல்வி நிலையங்கள் ஆதரவு
அற்றவரை ஆதரிக்கும் இல்லங்கள் - வற்றா
அருள்பொழியும் ஆலயங்கள் ஆயவையும் பேசும்
திருக்கோண மாமலையின் சீர்.

3. கோணேஸ் வரத்தொன்மை வண்மைக் குறிகொண்ட
மானேறு நூலை வகுத்துரைத்தார் - மாண்நீறு
பூசிச் சிவாயநம போற்றி யெனத்தினம்சர்
வேசனைப் போற்றுவடி வேல்.

4. குணமுடையார் வாழ்திருக் கோணமலைச் சைவ
மணங்கமழச் செய்யுமருள் வள்ளல் - பணமிடையார்
ஆயினும் நூல்கள் அளிக்கும் வடிவேலர்
தூய பணி தொடர்க வே.

5. அன்பும் அருளும் அறமும் மிகப்பேணும்
இன்பத் திருமலையீர் இந்நூலை - வந்தித்து
வாங்கிப் படித்துணர்ந்து வாழ்வாங்கு வாழ்ந்திடுவீர்
ஈங்குநலம் எல்லாம் இயைந்து.

# முகவுரை

ஒரு நாட்டின் வரலாற்றினை, அல்லது மன்னர்கள், புலவர்கள், அறிஞர் முதலானோரின் வரலாறுகளைக் காலத்துக்குக் காலம் அட்டவணைப்படுத்திச் சாசனங்களாக எழுதிவைக்கும் வழக்கத்தைத் தமிழ்மக்கள் பின்பற்றத் தவறிவிட்டனர் மேலை நாட்டவர்களிடம் இந்த வழக்கம் இருந்துவருகின்றது இதன் அவசியத்தையுணர்ந்த தமிழரிஞர்கள் மிகச் சிரமப்பட்டுப் பழைய வரலாறுகளைத் தேடியாராய்ந்து கிடைத்தவைகளை நேர்சீர் செய்து வரலாற்றுச் சாசனங்களை எழுதிவருகிறார்கள்.

திருக்கோணேஸ்வரம் ஒரு வரலாற்றுச் சுரங்கம் கடந்த பல வருடங்களாக கோணேஸ்வரம் பற்றி அறிவதற்குக் கிடைத்த நூல்களிற் கூறப்பட்டுள்ளனவற்றையும், ஆங்காங்கே முதியவர்கள் செவிவழிச் செய்தியாக அறிந்துவைத்திருந்த விஷயங்களையும், கற்சாசனங்கள், கல்வெட்டுக்கள் கூறுவனவற்றையும், பிறநாட்டவர்களும், பிறமதத்தவர்களும் கூறிய கருத்துக்களையும் ஒருமுகப்படுத்தி ''ஆனையழகைக்'' காண்பது போல ''திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும்'' என்ற சிறு நூலை வருங்காலச் சந்ததியினருக்குப் பயன்படும் வகையில் ஒரு சாசனமாக எழுதியுள்ளேன். தொன்மையுள் மிகப் பழைய வரலாறுகளும், வண்மையுள் மேன்மைச் சிறப்புக்களும் பேசப்படுகின்றன.

ஒரு ஸ்தலத்தின் வரலாற்றினை எழுதும்போது அவ்வத்தலத்துப் புராணங்களை ஆதாரமாகக்கொண்டும் எழுத வேண்டுமென காஞ்சிப் பெரியவர் ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளினார்கள். சுவாமிகளுடைய கருத்தை அருள் ஆணையாகக்கொண்டு புராண வரலாறுகளை இந்நூலில் இடம்பெறச் செய்துள்ளேன்.

திருக்கோணமலை இந்துக் கல்லூரியின் முன்னாளதிபர் திரு. எஸ். அம்பலவாணர் (Bsc) அவர்கள் 1982ம் ஆண்டு கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவிற்கு விசேட விருந்

தினராக அழைக்கப்பட்டு வந்திருந்தபோது '' திருக்கோணேஸ்வரத்திற்கும் மேருபருவதத்துக்கும் இடைப்பட்ட பூப்பிரதேசத்தைச் சிவபூமி என்று '' திருமூலர் திருமந்திரத்திற் கூறியிருப்பதாகத் தமது பேருரையிற் குறிப்பிட்டார். மேருமலைக்கும் திருக்கோணமலைக்கும் இடைப்பட்ட பூப்பரப்பை புவியியல்ரீதியாகவும், விஞ்ஞானரீதியாகவும் ஆய்வுசெய்ய வேண்டும் என்று அன்று அவர் கூறினார். அவருடைய கூற்று இந்நூலை எழுதுவதற்கு எனக்கு ஒரு உந்துசக்தியாக உதவியது. அப்பெரியாருடைய கூற்றையும் ஆய்வுசெய்து இந்நூலிற் சேர்த்துள்ளேன்.

1981 ஆம் ஆண்டு தமிழ் நாட்டுக்குச் சென்றிருந்தபோது '' தென்னிந்திய வரலாற்றுப் பேரவைச் செயலாளர் '' திரு. ரி. பி. ஜெகந்நாதன் (3-டீ2 பைபாஸ் ரோடு, சேலம். 638182) அவர்களைச் சந்தித்து, தெட்சணகயிலாயம் எனப்படுவது எது? எனபதுபற்றி அவருடன் உரையாடச் சந்தர்ப்பங் கிடைத்தது. திருக்காளத்தி, திருச்சிராமலை இரண்டையும் அவர் தெட்சணகயிலாயம் என்று விளக்கிக் கூறினார். திருக்கோணமலைதான் தெட்சணகயிலாயம் என்பதை நிறுவி முன்னரே நான் எழுதி வைத்திருந்த ஆய்வுக்கட்டுரையொன்றை அன்னாரிடம் சமர்ப்பித்தேன். இவ் விஷயம் விரிவாக இந்நூலிற் கூறப்பட்டுள்ளது. அப்பெரியார் பௌராணிகர் மாத்திரமல்ல பௌதிகவிஞ்ஞான அறிவுபடைத்தவர். அவர் என் கருத்தை ஏற்றுக்கொண்டு மகிழ்ச்சியும் தெரிவித்தார். அவருடைய அங்கீகாரத்தையும் இந்நூலை எழுதுவதற்கு ஆதாரமாக எடுத்துக்கொண்டேன்.

கடந்த ஐம்பதாண்டுகளாக இடைவிடாது கோணேஸ்வரத்தைத் தரிசித்து போத்துக்கீசர் கோணஸ்வரத்தை அழிப்பதற்குமுன் குளக்கோட்டு மன்னன் கட்டிய கோவில்களும், ஆலயச் சூழலும், ஸ்தலத்தின் திருவருட் பொலிவும், தெய்வசாந்நித்தியமும் எப்படி இருந்திருக்கும் என்பதை அகக்காட்சியில் காட்டியருளவேண்டுமென்று மாதுமையம்பாள் சமேத கோணேசப்பெருமானை இரந்திரந்து வேண்டி வழிபட்டு வந்தேன். எம்பெருமானின் அருள்வெளிப்பாட்டில் அகத்தே கண்ட திருக்கோணேஸ்வரத் தொன்மை, வண்மைக் காட்சிகளையும் இந்நூலில் சேர்த்துள்ளேன். இந்நூலில் கி.பி. 1831 ஆம் ஆண்டு பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கோணேசர் கல்வெட்டுப்பற்றிய விரிவான ஆங்கில அறிக்கை ஒன்றையும் எனது ஆக்கமாகிய

திருக்கோணேசர் போற்றித் திருப்பதிகம், திருக்கோணேசர் அருள்வேட்டற் பதிகம், தென்கயிலைக் கோணேசர் இருவிழிக் கும் ஒளியீந்த திருப்பதிகம் என்பனவற்றையும் பிற்சேர்க்கை யாகச் சேர்த்துள்ளேன்.

பௌராணிக மகாஞானியாகிய ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமி களின் புராணச் சிந்தனையென்னும் தீபத்தையும், விஞ்ஞானப் பேராசிரியராகிய ஸ்ரீ. எஸ். அம்பலவாணர் (Bsc) அவர்களின் விஞ்ஞானச் சிந்தனையென்னும் தீபத்தையும், வரலாற்றுத் துறை ஆராய்ச்சியாளராகிய ஸ்ரீ. ரி. பி. ஜெகந்தாதன் அவர் களின் வரலாற்றுச் சிந்தனையென்னும் தீபத்தையும் எனது இதயமாகிய தாளியில் ஏற்றிவைத்துக் கோணேசப் பெருமானு டைய திருவருட்பேறாகிய நெய்யை நிரப்பி, தத்துவ கலாநிதி - ராதாகிருஷ்ணன் அவர்கள் கூறிய

'' நம்பிக்கை ஏற்படுவது கஷ்டமாக இருக்கலாம் ஆனால்
நம்பிக்கையின் அவசியத்திலிருந்து மட்டும் நாம் தப்ப
முடியாது''

என்னும் தத்துவக் கோலினால் தீபங்களைத் தூண்டித் தூண்டிப் பிரகாசிக்கச்செய்து இந்நூலினைச் சிறியேன் விளக்கஞ் செய் துள்ளேன்.

'' பிழுக்கை வீழினும் பால்கொள்ளும் '' பெருமனம் படைத்த சான்றோர்களின் அன்பையும், ஆதரவையும் மன்னிக் கும் பண்பையும் பணிவுடன் ஏற்று இச்சிறுநூலை மாதுமை யம்பாள் சமேத கோணேசப்பெருமானுடைய திருவடிகளில் சமர்ப்பணம் செய்து அமைகின்றேன்.

இந்த நூலைப் பதிப்பிப்பதற்குத் திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் மதிப்பார்ந்த பொதுச் செயலாளர் திரு. செ. சிவபாதசுந்தரம் அவர்களின் உதவியை நாடினேன். பேரவையின் செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப் பட்ட தீர்மானத்தின்படி செயலாளர் அவர்கள் இந்நூலைப் பதிப்பிக்க முழுமனதுடன் ஒப்புதல் தந்தார். எல்லாம்வல்ல கோணேசப்பெருமான் அருளால் கனவு நனவாவதை நினைந்து திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை உறுப் பினர்களுக்கும் மதிப்பார்ந்த பொதுச் செயலாளர் அவர்களுக்கும் திரிகரண சுத்தியோடு நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.

திருக்கோணேஸ்வரத்திலிருந்து போத்துக்கீசரால் அழிக்கப் பட்ட மூன்று திருக்கோயில்களின் வடிவமைப்புக்களை புராண இதிகாச வரலாற்றுத் தரவுகளை ஆதாரமாகக்கொண்டு

அடியேன் கற்பனைசெய்து கூறிய சொல்வண்ணங்களைத் தமது கைவண்ணத்தால் ஆலயங்களாக ஒவியப்படுத்தி உதவிய திருமதி. சௌந்தரலெட்சுமி சுப்பிரமணியம் அவர்களுக்கும் ஆசியுரை, அணிந்துரை, சாற்றுகவி முதலியவற்றை நல்கிய சான்றோர்களுக்கும், அழகுற அச்சேற்றி உதவிய ஜெய்ஷான் அச்சகத்தார் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி உரியதாகுக.

"பாக்கியபதி"
15, வித்தியாலயம் ஒழுங்கை,
திருக்கோணமலை.

ஞானசிரோன்மணி,
சைவப்புலவர், பண்டிதர்
**இ. வடிவேல்**

# வெளியீட்டுரை

தேவாரம் பாடப்பெற்ற தெய்வத்திரு நகராம் திருக் கோணமலையின் வரலாற்றுச் சிறப்பும், கலாசாரப் பாரம் பரியமும், அதனோடு இணைந்த ஏனைய பல்வேறு அம்சங் களும் எமது சிந்தனைக்குத் தோன்றாத் துணையாக இருந்து வருவது எம்மையெல்லாம் ஆட்கொண்டருளும் திருக்கோணேஸ் வரப் பெருமானின் திருவருட் பெருங் கருணையே என்றால் அது மிகையாகாது.

இத்தகைய அருட் சிறப்பையும், வரலாற்றுப் பெருமை யையும், பழம்பெரும் பாரம் பரியத்தையும், கொண்டு விளங் கும் இயற்கை வனப்பு மிக்க அழகாபுரியான திருக்கோணமலை யின் வரலாற்றைத் திரித்துக் கூறியும் எழுதியும் பல ஆதார மற்ற விடயங்களைத் தற்போது சிலர் வெளியிட்டு வருகின்ற இவ்வேளையிலே, எமது மாவட்டத்திலுள்ள சிறந்த சைவத் தமிழ்ப் பெரியாரும் நாடறிந்த சைவ அறிஞருமான சைவப் பெருந்தகை பண்டிதர், சைவப்புலவர், சைவசிகாமணி, ஞான சிரோன்மணி திரு. இ. வடிவேல் அவர்கள் தன்னுடைய அய ராத தளராத ஆராய்ச்சிக் கண்ணோட்ட முயற்சியால் உந்தப் பட்டு திருவருட் பேற்றினால் ''கோணேஸ்வரம் தொன்மை யும் வண்மையும்' என்ற இந்த அரிய நூலை எழுதி எமக்குத் தந்துள்ளார் என்றால் அது எம்மவர்கள் செய்த பாக்கியம் என்றே நாம் கருதுகின்றோம். அதுவும் குறிப்பாக வாழையடி வாழையாக இந்த மண்ணிலே உதிக்கின்ற இளைஞர்கள் தங்க ளுடைய மாண்புறு தலத்தின் தொன்மையையும் வரலாற்றை யும் மற்றவர்களுக்கு அஞ்சாமல் இடித்துக் கூறுவதற்கு இந்நூல் வகை செய்துள்ளதென்றால் அது தவறாகாது என நினைக் கின்றோம்.

பண்டிதர் அவர்கள் ''திருக்கோணமலை மாவட்டத் திருத்தலங்கள்'' திருக்கோணேஸ்வரம் ''திருமுறைப்பண் ணிசை திறனாய்வு'' போன்ற பல நூல்களை எழுதியுள்ளார் கள். இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் ''கோணேஸ

வரம் தொன்மையும் வண்மையும் '' மிளிர்கின்றது என்றால் அது புகழ்ச்சியாகக் கூறுவதாக இருக்க முடியாது என நினைக்கின்றோம்.

நைட்டிகப் பிரமச்சாரியாய் இருந்து தமிழுக்கும், சைவத்துக்கும் தொண்டாற்றும் தியாக மனப்பான்மையோடு வாழ்ந்து வரும் பண்டிதர் ஐயா அவர்கள் திருக்கோணமலை மண்ணுக்குப் பெருமை சேர்க்கும் ஒருவர் என்பதாலும், அவர் எமது திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் காப்பாளர்களில் ஒருவர் என்பதாலும் அவரால் எழுதப்பட்ட இந்நூலை எமது பேரவையின் சார்பில் வெளியிட்டு வைப்பதில் நாம் மகிழ்ச்சியும் மன நிறைவும் அடைகின்றோம். எமது பேரவையால் வெளியிடப்படுகின்ற இவ்வெளியீட்டை தமிழ் கூறும் நல்லுலகு வரவேற்கும் என்ற நம்பிக்கை எமக்கிருக்கின்றது. எமது நம்பிக்கையை எம்மவர்கள் நிறைவேற்ற வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் இந்நூலை பேரவையின் சார்பில் உங்களுக்கு மகிழ்வுடன் சமர்ப்பிக்கின்றோம்.

வணக்கம்

'' சிவஞானச் செல்வர் ''

**செல்லப்பா சிவபாதசுந்தரம்**

(மதிப்பார்ந்த பொதுச் செயலாளர்)

திருக்கோணமலை மாவட்ட
இந்து இளைஞர் பேரவை,
393, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | திருக்கோணமலை சிவபூமி | — 01 |
| 2. | திருக்கோணேஸ்வரத்தின் புராண ... | — 04 |
| 3. | தெட்சணகயிலாயம் எது ? | — 08 |
| 4. | திருக்கோணமலையின் புவியியல்நிலை | — 10 |
| 5. | லெமோறியாக் கண்டத்தின் பேரழிவும், ... | — 12 |
| 6. | கோணேசர் கோயில்கள் பற்றிய புராண ... | — 16 |
| 7. | கோணேசர் கோயில்கள் பற்றிய சரித்திர ... | — 19 |
| 8. | போத்துக்கீசர் அழிப்பதற்கு ... | — 25 |
| 9. | கோணேஸ்வரத்தின் வண்மை | — 39 |
| 10. | குளக்கோட்டு மன்னனும், திருப்பணிகளும் | — 42 |
| 11. | கோணேஸ்வரத்தின் எச்சங்களும், ... | — 52 |
| 12. | திருக்கோணேசர் கற்சாசனங்களும், ... | — 56 |
| 13. | கோணேஸ்வரமும் தம்பலகாமம் ஆதி ... | — 73 |
| 14. | கோணேஸ்வரத்தின் தொன்மையும், ... | — 76 |
| 15. | கோணேசர் கல்வெட்டு பற்றிய ... | — 81 |
| 16. | திருக்கோணமலைத் திருப்பதிகம் ... | — 86 |
| 17. | திருக்கோணமலைத் திருப்புகழ் ... | — 89 |
| 18. | திருக்கோணேசர் போற்றித் திருப்பதிகம் | — 91 |
| 19. | திருக்கோணேசர் அருள் வேட்டற் பதிகம் | — 94 |
| 20. | கோணேசர் இருவிழிக்கும் ஒளியீர்ந்த ... | — 97 |
| 21. | நிறைவுரை | — 102 |

உ

ஓம் சிவ சிவ

# திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும்

## காப்பு

தும்பிக்கையான் தூய துணையடிமேல் எக்காலும்
நம்பிக்கை உண்டே நனி.

''நம்பிக்கை ஏற்படுவது கஷ்டமாக இருக்கலாம் ஆனால் நம்பிக்கையின் அவசியத்திலிருந்து மட்டும் நாம் தப்ப முடியாது''

*(தத்துவ கலாநிதி - ராதாகிருஷ்ணன்)*

## திருக்கோணமலை சிவ பூமி

இலங்கையின் கிழக்கே கடற்கரையோரமாக அமைந்துள்ள மலைத் தொடர்களையும், இயற்கைத் துறைமுகத்தையும் தன்னகத்தேயடக்கிய பிரதேசம் திருக்கோணமலை. இத்திருக்கோணமலையில் கடலினுள்ளே நீண்டு உயர்ந்து நிற்கும் குன்றில்; வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொடக்கம் இந்துக் கோயில்கள் மூன்று இருந்தன. அவைகள் உலக இந்துக்களின் வழிபாட்டுத் தலமாக விளங்கிய காரணத்தால் அக்குன்றும்; அங்கிருந்த ஆலயங்களை உள்ளடக்கிய பிரதேசம் முழுவதும் புனித இந்து ஸ்தலமாகத் திருக்கோணேஸ்வரம் என்ற பெயரோடு விளங்கிப் பிரபல்லியமடைந்திருந்தது. அது ஈழநாட்டின் சிவஸ்தலமாகவும் இருந்துவந்தது.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் திருக்கோணேஸ்வரம் இலங்கை மக்களின் சிந்தனைக்கும் சர்ச்சைக்குமுரிய இடமாக்கப் பட்டது. பத்திரிகைச் செய்திகள் இந்துக்களின் உள்ளங்களைப் புண்படுத்திக் கலக்குகின்றன. பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டிய நாட்டின் தலைவர்கள் உண்மைகளை மறைக்கிறார்கள். உண்மைகளை மறைக்கும்படியான நிர்ப்பந்த நிலைக்குள்ளாக்கியிருக்கின்றார்கள். அரசியல் தலையீடுகள் சத்தியத்தை அசத்தியமாக்குகின்றன. நேர்மையும், உண்மையும் நிறைந்த தலைவர்கள் கூட ஊமை கண்ட கனவுபோல உண்மையை உரைக்கத் தயங்குகிறார்கள். கோணேஸ்வரத்தில் கோகர்ணவிகாரை, இராஜசிங்காக் கோட்டை என்ற மாயாஜாலப் படைப்புக்களால் எழுந்த புரளிகள்தான் இவை.

கோணேஸ்வரம் மிகவும் சிறப்புடைய சிவஸ்தலம் என்று நிறுவுவதற்கு நியாய பூர்வமான ஆதாரங்கள் இருக்கின்றன. இதிகாச வரலாறுகள், புராண வரலாறுகள் கால நிர்ணயத்துடன் இருக்கின்றன. பாரதநாட்டுச் சிவஸ்தலங்களுக்குக் கல்வெட்டுகள் இருப்பதுபோல, ஸ்லபுராணங்கள் இருப்பதுபோல, மன்னர்களின் ஆட்சித்தொடர்புடைய மானியவரலாறுகள் இருப்பதுபோல, மக்களின் வழிபாட்டு வரலாறுகள் வழிவழியாய் இருப்பதுபோல, திருக்கோணேஸ்வரத்திற்கும் இருக்கின்றன. இவைகளை அறிந்திருந்தும் அறிவிலிகள்போல வாய்கூசாமல் புதுப்புராணம் பாடுபவர்களும், புதிய இதிகாசம் படைப்பவர்களும், புதுமையான அகழ்வாராய்ச்சி செய்கின்றவர்களும், சரித்திர வரலாறுகளைக் காய்தல் உவத்தலின்றி நடுநிலையில் நின்று சிந்திக்கத் தெரியாதவர்களும் சிவஸ்தலமெது? அல்லாதது எது? என்று தீர்மானிக்க முயல்வது மதியீனமேயாகும்.

திராவிட நாகரீகத்தையும், இந்து சமயத்தையும் பற்றி வரலாற்று ரீதியாகச் சிந்தித்து ஆய்வுசெய்ய முற்படும் ஆராய்ச்சியாளர்கள் இலங்கையிலிருந்து, அதாவது குறிப்பாகத் திருக்கோணமலையிலிருந்து ஆராயத்தொடங்குவது சாலப் பொருத்தமானதெனக் கருதுகின்றேன். கடல்கோளகளால் அழியப்பெற்ற லெமோறியாக் கண்டத்தினதும், அதன் ஒரு பகுதியாகிய குமரிக் கண்டத்தினதும் எஞ்சிய நிலப்பரப்புக்களில் இலங்கையும் ஒன்றாகும். ஜாவா, சுமத்திரா, இந்துநேஷியா, போர்ணியோ, நியூகினி, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, மடகாஸ்கர் என்பனவும் லெமோறியாக் கண்டத்தின் அழியாது எஞ்சியுள்ள பகுதிகளேயென்பது ஆராய்ச்சியாளர்களின் ஒத்த முடிபாகும். இங்கு வாழ்கின்ற மக்களின் ஆதி வரலாறுகளையும், அவர்களின் மொழி, மதம் சம்பந்தமான கோட்பாடுகளையும் பற்றிப் பின்னர் காண்போம்.

ஈழநாடாகிய இலங்கைக்கும், பாரதநாட்டிலுள்ள மேரு பருவதத்திற்கும் இடைப்பட்ட பூப்பிரதேசம் முழுவதையும் சிவபூமியென்று இற்றைக்கு 8000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருமூலநாயனார் திருமந்திரத்தில் குறிப்பிடுகின்றார்.

> ''மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
> கூருமிவ் வானின் இலங்கைக் குறியுறுஞ்
> சாரும் திலைவனத்து தண்மா மலையத்தூடு
> ஏறுஞ் சுழுமுனை இவை சிவபூமியே''

(திருமந்திரம். 2701)

அண்டத்திலும், உடம்பாகிய பிண்டத்திலும் இயல்பாகவே யமைந்துள்ள சுழுமுனை, இடைகலை, பிங்கலை என்ற நாடிகளின் அமைப்பைக் கூறி யோகசாஸ்திரத்தை விளக்குகின்ற திரு

மூலர் பூமண்டலத்திலுள்ள மேருமலையையும், இலங்கையையும் இவற்றுக்கு இடைப்பட்ட நிலப்பரப்பையும் பற்றிக் குறிப்பிடு கின்றார். அண்டத்தின் நடுவாகப் பொன் மலையாகிய மேரு விளங்குகின்றது. (மேரு நடுநாடி - அண்டத்தின் நடுரேகை) (Equator) இவ்வானவெளியிலுள்ள அண்டகோளத்தின் நடுக் கோட்டில் இலங்கையும் பொருந்தியிருக்கின்றது. பூமத்தியரேகை யும் பூமியின் அட்சரேகையும் கூடும் இடத்திலிருப்பது இலங்கை. இலங்கையையும் மேருவையும் இணைத்துச்செல்லும் நடுக்கோடு தில்லைச் சிற்றம்பலத்திற்கும் பொதிகைமலைக்கும் ஊடாகச் செல்கின்றது. இதனால் மேருவுக்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட பூமியைச் சிவபூமி என்கிறார் திருமூலநாயனார்.

திருமந்திரத்தில் ''பூதல மேரு புறத்தான தெக்கணம்'' என்று 2702 ஆம் பாடலிலும்,

''இடை பிங்கலை யிமவானோ டிலங்கை

நடுநின்ற மேரு நடுவாஞ் சுழுமுனை'' என்று 2708 ஆம் பாடலிலும் தில்லைச் சிற்றம்பலத்திற்கு வடக்கே மேருவும், தெற்கே இலங்கையும் அமைந்திருப்பதாகத் திருமூலர் கூறுகின் றார். இவற்றுக்கு இடைப்பட்ட பூமி சிவபூமியாகும்.

திருத்தொண்டர் புராணத்தில் ''மாதவஞ்செய் தென்திசை யின் மாண்புரைக்குங்கால்'' என்ற பாடலில் தில்லைச் சிற்றம் பலம், திருவாரூர், திருக்காஞ்சி, திருவையாறு, திருத்தோணி புரம், திருக்காளத்தி முதலியன சிவஸ்தலங்கள் என்று அருளி யிருப்பதைக் காண்க. இவைகளெல்லாம் இலங்கைக்கும் மேரு வுக்கும் இடைப்பட்ட பூமியிலுள்ள சிவஸ்தலங்களாகும்.

இலங்கையிலுள்ள சிவஸ்தலமாகிய திருக்கோணேஸ்வரம் வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொடக்கம் சிவஸ்தலமாயிருந்து வருவது பற்றித் தலபுராணங்கள் கூறுவதை இனிக் காண்போம். வடமொழி நூலாகிய தெட்சணகயிலாய மகாத்மியத்தில், ''வாயுசேஷ விவாதோ'' என்ற சுலோகத்தின்படி மேருமலை யின் திரிகூட சிகரமே இலங்கையிலுள்ள திருக்கோணமலை என்பது வெளிப்படை. இது சிவசாந்நித்தியச் சிறப்பு வாய்ந்த ஈழநாட்டிலுள்ள தெட்சணகயிலாயமாகும். (கோணேஸ்வரம்). உலகத்திலுள்ள 1008 சிவக்ஷேத்திரங்களில் இதுவுமொன்று. தேவார, திருப்புகழ் பாடல்கள் பெற்ற திருக்கோணமலையே தெட்சணகயிலாயம் எனப்பட்டது. இது உத்தரகயிலாயத்திலி ருந்து வாயு பகவானால் பிடுங்கி வீசப்பட்ட மூன்று சிகரங்க ளுள் ஒன்று என்பதனை

''முன்னர் வீழ்ந்திடு சிகரி காளத்தியாய் மொழிவர்
பின்னர் வீழ்ந்தது திரிசிரா மலையெனும் பிறங்கல்
அன்னதற் பின்னர் வீழ்ந்தது கோணமா வசலம்
இன்னமூன்றையும் தட்சண கயிலை யென்றிசைப்பர்''

என்னும் செவ்வந்திப்புராணச் செய்யுளால் அறிக.

# திருக்கோணேஸ்வரத்தின் புராண வரலாறுகள்

தெட்சணகயிலாயம் எனப்படும் திருக்கோணேஸ்வரத்திற்குத் திரிகூடம் மச்சேசுவரம் என்னும் பெயர்களுமுண்டு. இக்காலத்தில் இதனைத் திரிகோணமலை, திருக்கோணமலை என்றும் வழங்குகின்றனர். இந்த ஸ்தலத்தின் அதியற்புதங்களைத் தெட்சணகயிலாய மகாத்மியம், தெட்சணகயிலாய புராணம், திரிகோணாசலபுராணம், கோணமலை அந்தாதி, கோணேசர் கல்வெட்டு என்னும் பழம்பெரும் நூல்கள் விளக்கிக் கூறுகின்றன. தெட்சணகயிலாய மகாத்மியம், வேதவியாசரால் பாடப்பட்டது. தெட்சணகயிலாய புராணம், சிங்கைச் செகராசசேகரனின் வேண்டுகோட்படி, சைவராச பண்டிதர் கட்டளையிட, பிரமஸ்ரீ பண்டிதராசரால் அருளிச் செய்யப்பட்டது. திரிகோணாசல புராணம், திரிகோணமலை, ஸ்ரீ. மா. முத்துக்குமாரபிள்ளை அவர்களால் இயற்றப்பட்டதென அறியக்கிடக்கின்றது. கோணமலை அந்தாதி, திரு. சி. ஆறுமுகப் புலவரால் இயற்றப்பட்டது. கோணேசர் கல்வெட்டு எனப்படும் கோணேசர் சாசனம் கவிராஜரால் அருளிச் செய்யப்பட்டது. இவைகள் ஏட்டுப்பிரதிகளிலிருந்து சுமார் நூறு வருடங்களுக்கு முன் நூல் வடிவில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. ஏட்டுச் சுவடிகளில் எப்பொழுது எழுதப்பட்டன என்பது தெரியவில்லை.

செவ்வந்திப் புராணத்தில் கூறப்பட்ட நிகழ்ச்சியைத் தெட்சணகயிலாய புராணம் பின்வருமாறு கூறுகின்றது. உத்தரகயிலையிலே ஆதிசேடனுக்கும், வாயுவுக்கும் ஏற்பட்ட கௌரவப் போராட்டத்தில் ஒருவரையொருவர் வெல்லத் தத்தமது வலிமையைக்காட்ட முற்பட்டனர். ஆதிசேடன் தனது ஆயிரம் பணா முடிகளினால் மேரு சிகரங்களை மூடிக்கொண்டான். வாயு தேவன் ஆதிசேடனின் பணாமுடிகளை விலக்கி அவைகளால் மூடப்பட்டிருந்த மேருவின் மூன்று சிகரங்களைப் பெயர்த்து வீசினான்.

> ''துணைக்கை கூப்பினர் ஓடினர் சொல்லினர் சேடன்
> அணைக்கும் ஆயிரம் பணாமுடிக் கோர்முடி அகற்றப்
> பணைக்குமச் சிகரந்தனைக் கையுறப் பறித்துக்
> கணைக்கு நேர் கண்ணி பங்கன் முன்வைத்ததக் காலே''
>
> (திருமலைச்சருக்கம். 67)

''புகழ்ந்த வாயுவைக் கயிலையின் தென்புறம் பொலிந்து
நிகழ்ந்தவித் திரிகூடமாம் சிகரத்தை ஏந்தி
மகிழ்ந்து யாமிதில் வருகுவம் தென்கடல் மருங்கே
நிகழ்ந்த ஈழத்தின் வடகரை நிறுத்து நீயென்றான்''
(திருமலைச்சருக்கம். 69)

''தாழுமாழ் கடல் வரங்கொலோ இலங்கையின் தவமோ
சூழு நாவலந்தீவுளோர் புண்ணியத் தொடர்பதோ சுழித்த
வாழியுத்தர திசையினுங் கொடுவந்து வைத்த
பாழி மாருதப் பயன்கொலோ வென்பர்கள் பலரும்''
(திருமலைச்சருக்கம். 93)

மேலே கூறப்பட்ட பாடல்களாலும் உத்தரகயிலாயமெனப்படும் மேருவின் சிகரங்களிலொன்றாகிய திரிகூட பர்வதமே தெட்சண கயிலாயமாகிய திருக்கோணேஸ்வரம் என்பது புலனாகின்றது.

திருக்கோணேஸ்வரத்திலமர்ந்து அருள்பாலிக்கும் கோணேசப் பெருமானைத் தியானமூர்த்தியாக இதயத்திலிருத்தி வழிபட்டு அருள்பெற்றவர் அகத்திய முனிவர்.

''ஸ்ரீநாத வேதாந்த விஷேஷ வர்த்தின்
கிருஷ்ணாதி நாக்ஞாத விசுத்த வஸ்த்தோ
திரிகூட கைலாச நிவாச தேவ
மாம்பாகி கோணேச சதா சரண்ய''

நாதரூபியாய் மறைகளின் முடிவாயுள்ளவரே! கிருஷ்ணன் முதலிய தேவர்களால் அறியப்பட்ட புனித பரம்பொருளே! திரிகூட கைலாயத்தில் வீற்றிருப்பவரே! எப்போதும் சரணமடையத் தக்கவரே! என்னைக் காப்பாற்று கோணேஸ்வரா என்று அகத்திய முனிவர் வழிபட்டு அருள்பெற்ற வரலாற்றைத் தெட்சண கயிலாய மகாத்மியம் கூறுகின்றது.

இந்தக் கருத்தினைத் திருக்கரைசைப் புராணம் கங்கைச் சருக்கத்தில் 23 ஆம் பாடலாலும் அறியலாம்.

''அடையுமாமுனி வெள்ளிமால்வரையதனி லங்கொரு
முடியதாய்க்
கடவுள்வாழ் திரிகோணையங்கிரி கண்டு சிந்தை மிகக்
களித்து
இடைவிடாதிருபோதும் நல்லடையிட்டு நாண்மலரிட்டு வண்
தொடை குலாவிய வாலசந்திரர் சூடினாரடி சூடினான்''

வெள்ளியங்கிரி எனப்படும் மேருவின் சிகரங்களில் ஒன்றாகிய திரிகோணமலையில் எழுந்தருளியுள்ள கோணேசப் பெருமானை அகத்தியர் பூசித்த வரலாறு இப்பாடலில் கூறப்படுகின்றது.

''நின்றவிக் கடவுட் குன்றை நினைந்தொரு
வலஞ்செய்வார் பொற்
குன்றினுஞ் சென்று நூறு கொடுமுடி சூழ்வதொக்கும்
பொன்தனி வடிவு காணப் புறத்திடு மச்சமென்ன
அன்றரன் கயிலைக்கொப்ப அமைந்ததிக் கயிலை
கண்டாய்''

(தெரிசனாமுத்திச் சருக்கம். 12)

உததரகயிலையில் உமாதேவி சமேதராக் எழுந்தருளியுள்ள கைலாசபதியே தெட்சண கயிலையாகிய கோணேஸ்வரத்தில் மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமானாக எழுந்தருளி யுள்ளார் என்பதைத் தெட்சணகயிலாய புராணம் அறுதியிட்டுக் கூறுகின்றது. இதனைத் திருஞானசம்பந்தர் அருளிச்செய்த திரி கோணமலைத் தேவாரப் பதிகத்திலும் காணலாம்.

ஸ்ரீமான் முத்துக்குமாரபிள்ளை அவர்கள் இயற்றிய திரி கோணாசல புராணத்துக்குச் சிறப்புப்பாயிரம் எழுதிய ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள்

''வடவரைக் குடுமியுண் மாருதி பெயர்த்த
கொடுமுடி மூன்றனுட் கொணர்வுறுஉ மொன்றென
மன்னிய ஈழ மண்டல மதற்கு
சென்னி போன்றொளிர்ந்து சிரபுரமமர்ந்த
ஞானபோனகம் பெறு நான்மறைப்பிள்ளை
தானினி தருளிய தமிழ்ப்பதிகம் பெறீஇக்
கூற்றடு மிறைவன் குலமனைக் கொடியுடன்
வீற்றிருந் தருள் தருஉம் விழுச்சிறப் பெய்திய
கோணமாமலை யெனும் குலவிய தலம்''

என்று பாடியுள்ளார். இப்பெரியாரின் கருத்தும், புராண வர லாறுகளும் உத்தரகயிலையின் கொடுமுடிகளிலொன்று தெட் சணகயிலாயமாகிய திருக்கோணேஸ்வரம் என்பதைப் புலப் படுத்துகின்றது.

''இலங்கைநகர்க் கரசான இராவணனும் கடமுனியும்
இராமன்தானும்
அலங்கலந்தார் வரராமதேவனும் ஆங்கவன் சேயு
மடையார் போற்றும்
பொலங்கழற்காற் கயவாகு மேனையரும் அரன்திருத்தாள்
போற்றிமேலா
நலங்கிளர் பேறடைந்தகதை புராணமுறையாய்ச் சிறியே
நவில்லுற்றேன்''

என்று திரிகோணாசலபுராணம் பாடிய ஆசிரியர் அப்புராணத் தில் எடுத்துக் கூறும் முக்கிய விடயங்களை இப்பாடல் மூலம்

கூறுகின்றார். தெட்சணகயிலாய புராணத்திலும் இவ்விஷயங்கள் ஆங்காங்கே கூறப்படுகின்றன. இவற்றுள் வரராமதேவனும், அவனுடைய மகன் குளக்கோட்டு மன்னனும் திருக்கோணேஸ்வரத்தில் செய்த திருப்பணிகள் முக்கிய இடம் பெறுகின்றன.

''முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்
பின்னே பறங்கி பிரிக்கவே — மன்னாகேள்
பூனைக்கண் செங்கண் புகைக்கண்ண னாண்டபின்
தானே வடுகாம் விடும்''

என்ற கற்சாசனப் பாடலும், கோணேசர் கல்வெட்டு என்னும் கோணேசர் சாசனமும், திருக்கோணேஸ்வரம் பற்றி ஆராய்ச்சி செய்யும் வரலாற்று ஆசிரியர்களுக்கு மிகவும் வேண்டப்படும் சான்றுகளில் முக்கியமானவைகளாகும்.

ஒரு ஸ்தலத்தின் வரலாறுகளை அவ்வத்தலத்தின் புராணங்கள் கூறும் சம்பவங்கள்ள ஆதாரமாகக்கொண்டும் ஆராய வேண்டுமென்று காஞ்சிப் பெரியவர் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் கூறியிருக்கின்றார்கள். அறிவியலாளர்களின் சிந்தனைக்கு இது உபகாரமாயுதவும் என்பது அவர்களுடைய திருவுள்ளம் போலும்.

இதுகாறும் பௌராணிகர்களின் கருத்துக்கள் சிலவற்றை ஆதாரமாகக்கொண்டு மேருமலையின் சிகரங்களிலொன்று திருக்காளத்தியென்றும், மற்றது திருச்சிராமலையென்றும், மற்றொன்று தெட்சணகயிலாயமாகிய திருக்கோணேஸ்வரம் என்றும் கண்டோம். இதனை அறிவியலாளர்கள் ஏற்றுக்கொள்வது எங்ஙனம்? நம்புவார்களா?

''நம்பிக்கை ஏற்படுவது கஷ்டமாக இருக்கலாம் ஆனால்
நம்பிக்கையின் அவசியத்திலிருந்து மட்டும் நாம் தப்ப
முடியாது''

(தத்துவகலாநிதி ராதாகிருஷ்ணன்)

இதனை ஏற்றுக்கொள்வது அறிவியலாளர்களுக்குக் கஷ்டமாகத்தானிருக்கும். பௌராணிகர்களின் சிந்தனையிற் பிறந்த கருத்துக்களை அறிவியல்லாளர்களின் சிந்தனையோடு இணைத்து இனிக் காண்போம்.

# தெட்சணகயிலாயம் எது?

1981 ஆம் ஆண்டு இந்தியாவுக்குப் போயிருந்தபோது திருக் காளத்திக்கும், திருச்சிராமலைக்கும் சென்றிருந்தேன். செவ்வந் திப் புராணத்தில் கூறப்பட்ட விஷயம் எனது சிந்தனையை அருட்டிக்கொண்டிருந்தது. திருக்காளத்தி, திருச்சிராமலை, திருக் கோணமலை ஆகிய மூன்று தலங்களினதும் மலைவளம், மண் வளம், தாவர வளம் முதலிய இயற்கை அமைவிலுள்ள ஒற் றுமை வேற்றுமைகளை அறியவேண்டுமென்பது எனது அவா. இதனால் அங்கு நான் அவதானித்தவற்றையும், அங்குள்ள சில அறிஞர்களோடு உரையாடிப்பெற்ற அறிவியல்க் கருத்துக்களை யும் இங்கு தருகின்றேன்.

1. மூன்று தலங்களிலுமுள்ள மண்வளத்தில் கந்தகச் சத்து அதிகமாகக் காணப்படுகின்றது. இதனால் அவ்வத்தலங் களிலுள்ள மக்கள் இது கந்தகப் பூமி என்கிறார்கள்.

2. மலைப் பாறைகளின் பௌதிகச் செறிவுகள் ஒரே பாங்கில் காணப்படுகின்றன.

3. இம்மூன்று மலைகளிலுமுள்ள மரம், செடி, கொடிவகைகள் ஒரே இனத்தைச் சார்ந்திருக்கின்றன.

4. மலைகளின் பாறைச்சிதைவுகளில் மாற்றம் காணப்படு கின்றது. காளத்திப் பாறைகள் சிறிய சிறிய அளவில் சிதைந்து காணப்படுகின்றன. திருச்சிராமலைப் பாறைகள் சற்றுப் பெரியவைகளாகச் சிதைந்துள்ளன. திருக்கோண மலைப் பாறைப் பிளவுகள் பெரும் பெரும் பாறைகளாகவே காணப்படுகின்றன.

5. சுகாத்திய நிலை ஏறக்குறைய ஒரேமாதிரியாகவே இருக் கின்றது.

6. திருக்கோணமலை கடலால் சூழப்பட்டும், ஏனைய இரண்டு இடங்களும் தரையால் சூழப்பட்டும் இருக்கின்றபோதிலும் மூன்று மலைகளினதும் கற்பாறைகள் வண்ணத்தாலும், வடி வத்தாலும், பௌதிகச் செறிவினாலும் ஒத்தவைகளாகவே காணப்படுகின்றன.

மேலே கூறப்பட்ட அறிவியல் கருத்துக்களைத் தொகுத்து திருச்சிரா மலையிலுள்ள காசி மடத்தில் தங்கியிருக்கும்போது இம்மூன்று தலங்களைப்பற்றிப் பௌராணிகர்கள் கூறியவற்றை

யும் இணைத்து ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். அக்கட்டுரையுடன் ''தென்னிந்திய வரலாற்றுப் பேரவைச்'' செயலாளர் திரு. ரி. பி. ஜெகந்நாதன் (3-டீ 2 பைபாஸ் ரோடு சேலம். 638182) அவர்களைச் சந்தித்து இந்தத் தலங்கள் சம்பந்தமாக உரையாடிக் கருத்துப் பருமாறிக் கொண்டோம். இந்தச் சந்திப்புக்குச் சில காலத்துக்கு முன்னர் திருக்காளத்தி, திருச்சிராமலையாகிய இரண்டு தலங்களையும்பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையொன்றை இந்திய வானொலி மூலம் (திருச்சி) ஒலிபரப்புச் செய்திருந்தார்களாமென்று கூறினார். இந்தச் சந்தர்ப்பத்தில் திருக்கோணமலையையும் சேர்த்து மூன்று தலங்களுக்குமாக யான் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையை அவரிடம் கொடுத்தேன். அவர் அதனைப் படித்த பின்னர் ''தென்னிந்திய வரலாற்றுப் பேரவையில்'' இதனைத் தான் சமர்ப்பிப்பதாகக் கூறிக் கட்டுரையை ஏற்றுக்கொண்டார்.

எனது கட்டுரையில் இம்மூன்று மலைகளும் மேருசிகரத்தோடு பௌதிக ரீதியாகத் தொடர்புடையன என்றும் அறிவியல் கருத்தின் அடிப்படையிலும், பௌராணிகர்களின் கருத்தின்படியும் திருக்கோணமலைதான் தெட்சணகயிலாயம் என்பதை நிறுவியிருந்தேன்.

காளத்திமலையிலுள்ளவர்கள் காளத்திதான் தெட்சணகயிலாயம் என்கிறார்கள். திருச்சிராமலைவாசிகள் திருச்சிராமலைதான் தெட்சணகயிலாயம் என்கிறார்கள். திருக்கோணமலையைப் பௌராணிகர்கள் இதுதான் தெட்சணகயிலாயம் என்று புராணங்களில் கூறியுள்ளார்கள். இம்மூன்று மலைகளும் மகாமேருவுக்குத் தெற்கே அமைந்துள்ளபோதிலும், மேருவுக்கு அதிதெற்கேயிருப்பது திருக்கோணமலையாதலால் திருக்கோணமலையே தெட்சணகயிலாயம் என்பது சாலப் பொருத்தமானதென்பதே எனது அபிப்பிராயமாகும். உத்தரகயிலைக்கு நிகராக திருக்கோணாசலம் புராணங்களில் பேசப்படுவதாலும், இராவணன் கயிலாயமலையை எடுத்த வரலாற்றுக்கு ஆதாரமான பிரத்தியட்சச் சான்றாக ''இராவணன்வெட்டு'' என்ற பாறைப் பிளவு திருக்கோணமலையில் இருப்பதாலும், ''எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்'' என்று திருஞானசம்பந்தர் திருக்கோணமலைப் பதிகத்தில் இச்சம்பவத்தைப் பாடியிருப்பதாலும் பிறவற்றாலும் திருக்கோணமலையே தெட்சணகயிலாயம் என்பது பொருத்தமாகும்.

---

# திருக்கோணமலையின் புவியியல் நிலை


இனிப் பூகோளரீதியாகத் திருக்கோணமலை அமைந்துள்ள இயற்கை நிலையையும், அதனோடு தொடர்பான மலைத் தொடர்கள் தரைத்தொடர்புகள் என்பனவற்றையும் அவற்றின் பேரழிவுகளையும் கூறுவாம். பூப்பரப்பின் மூன்றிலிரண்டு பங்கு சமுத்திரமாகவும், மூன்றிலொரு பங்கு மலைகளாகவும் தரைகளாகவும் அமைந்திருக்கின்றது. சமுத்திரங்கள் பெயர்களால் பிரிக்கப்பட்டிருந்தாலும் நீராலிணைக்கப்பட்டிருப்பதுபோல பூமியின் தரைப்பரப்பு கண்டங்களாகவும், தீவுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தாலும் நிலப்பரப்பானது சமுத்திரத்தின் அடியிலுள்ள பாறைத் தொடர்புகளாலும், நிலத்தாலும் கண்டங்களோடு இணைக்கப்பட்டிருக்கின்றது.

திருக்கோணமலையைத் திரிகோணமலையென்று கூறுவதுமுண்டு. ஒருபுறம் கடலும் மற்றைய மூன்று பக்கங்களிலும் மலைகள் சூழ்ந்திருப்பதால் பொதுவகையால் திரிகோணமலையெனப்பட்டது. இம்மலைத் தொடரானது கோணேசர்மலை, கந்தசாமிமலை, வெள்ளாட்டிமலை, மத்தளமலை, பாதாளமலை, புறாமலை, களனிமலை முதலிய பல மலைகளால் தொடுக்கப்பட்டிருக்கின்றது. கோணேசர் மலையானது முக்கோண வடிவில் கடலினுள் நீண்டு கிடப்பதால் சிறப்புவகையால் இது திரிகோணமலையெனப்பட்டது. மலைகளுக்கிடையே சமுத்திரம் உட்புகுந்திருப்பதால் திருக்கோணமலையில் உலகப் பிரசித்தி பெற்ற இயற்கைத் துறைமுகமும் அமைந்திருக்கின்றது. இந்த இயற்கைத் துறைமுகத்தின் நுழைவாயிலுள்ள மலையைப் பாதாளமலையென்பர். இம்மலையடிவாரத்தில் சமுத்திரத்தின் ஆழத்தை அளவிடமுயன்ற பிரித்தானியக் கடற்படைத் தளபதி (பிரித்தானியர் இலங்கையை ஆண்ட காலத்தில்) ஆழத்தை அளவிடமுடியாதெனக் கூறியதாக அறிகிறோம். கோணேசர்மலையின் அடிவாரத்தில் ஆழ்கடலில் ஆராய்ச்சி செய்தவர்கள் அம்மலையின் பாறைத் தொடர்புகள் கடலினுள் நீண்டு தொடர்ந்து செல்வதாகக் கூறுகின்றனர். இவ்வாறே தொடர்ந்து செல்லும் ஆழ்கடற் பாறைகளும், கடலின் அடியிலுள்ள நிலப்பரப்பும் சுமார் ஏழாயிரம் சதுரமைல் பரப்பில் பரந்திருந்ததும், கடல்கோள்களால் பேரழிவுக்குள்ளாகியதுமாகிய லெமோறியா என்ற கண்டமாகும். பேராசிரியர், ஹேக்கலின் கூற்றின்படி இந்துமகா சமுத்திரத்தில் பூமத்தியரேகையின் இருபுறங்களிலும் நிலப்பரப்

-பைக்கொண்ட பெருங்கண்டமான லெமோறியா என்கின்ற பழந்தமிழகம் இன்றைய ஆபிரிக்கா, மடகாஸ்கர், அவுஸ்ரேலியா இந்தியா, இலங்கை, தென்கிழக்கு ஆசியத்தீவுகளான பர்மா, சுமத்திரா, போர்ணியோ, ஜாவா, பீஜித்தீவு முதலிய தீவுகளையும் உள்ளடக்கி நின்ற பெருநிலப் பகுதியாகும். மனித குலத்தின் தொட்டிலாகிய இப்பகுதி கடலினுள் மூழ்கியதென்று அவர் கூறுகின்றார்.

லெமோறியாக் கண்டந்தான் மானிட ஜாதியின் உற்பத்தி ஸ்தானம் என்றும் நாகரீகத்தின் பிறப்பிடமென்றும் திராவிட நாகரீகம் இங்கிருந்துதான் உலகின் பல பாகங்களுக்கும் பரவியதென்றும் லெமோறியாக் கண்டத்தின் அழிவுக்குப் பின்பு திராவிட நாகரீகம் கிழக்கேயும், வடக்கேயும், மேற்கேயும் பரவியதென்றும் மொழி ஆராய்ச்சி வல்லுனர்கள் கூறியுள்ளார்கள்.

லெமோறியாக் கண்டத்தில் தோன்றி வளர்ந்த மக்கள்தான் முதலில் நாகரீகம் பெற்றவர்கள் என்பதை அலெக்சான்டர் கோதிரடோய் (**Alexander Kondratoy**) என்னும் சோவியத்நாட்டு அறிஞர் தமது ''முக்கடற்புதிர்'' (**Riddles of Three Oceans**) என்னும் நூலில் சான்றுகளுடன் மெய்ப்பித்துக் காட்டுகிறார்.




## லெமோறியாக் கண்டத்தின் பேரழிவும் கோணேஸ்வரத்தின் தொன்மையும்

லெமோறியா என்று அழைக்கப்படும் பெருநிலப்பரப்பில் குமரிக்கண்டம் உபகண்டமாயிருந்தது. அக்கண்டத்தோடு தொடர்புபட்டிருந்த அவுஸ்திரேலியா கி. மு. பதினெட்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தனிக்கண்டமாகப் பிரிந்துசென்றது. இலங்கை கி. மு. இரண்டாயிரத்து முன்னூறில் இந்தியாவிலிருந்து பிரிந்தது என்று மெகஸ்தனீஸ் எழுதிய (Dutts Civilisation Ancients India) என்ற நூலின் முதலாம் பாகம் 219ம் பக்கத்தில் கூறியிருப்பதை பேராசிரியர் வி. ஜி. இராமச்சந்திரன் அவர்களும் ஒப்புதல் கூறியுள்ளார்கள். காலத்துக்குக்காலம் நிகழ்ந்த கடல்கோள்களால் குமரிக்கண்டம் தனது நிலப்பரப்பை மெல்ல மெல்ல இழந்து நின்றது. அங்கே வாழ்ந்தவர்கள் திராவிடர்கள்தான் என்பது ஐயந்திரிபற நிலைநாட்டப்பட்டுள்ளது. கி. மு. 5000 ஆண்டு தொடக்கம் இருபத்திரண்டு நூற்றாண்டுகளில் குமரிக் கண்டத்திலிருந்த பாண்டிநாடு மெல்ல மெல்ல ஆழ்கடலில் அமிழ்ந்திவிட்டது. முதற் சங்ககாலத்தில் தமிழகத்தின் தலைநகராயிருந்த தென்மதுரையையும், இரண்டாம் சங்கத்தின் தலைநகராயிருந்த கபாடபுரத்தையும் கடல் கொண்டுவிட்டது.

''பஃறுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள''

என்பது நூல்கள் கூறும் அகச்சான்றாகும். கடல் கொள்ளப்பட்ட குமரியாற்றங்கரையில் ''புஷ்பஹானி'' என்னும் தெய்வத்திற்குக் கோவில் இருந்தது. அது கடல்கோளால் அழிந்தது, இக்கடல்கோளில் ஏழ்தெங்கநாடும், ஏழ்பனைநாடும் முதலிய நாற்பத்தொன்பது நாடுகள் அழிந்தன என்று மணிமேகலை கூறுகின்றது. கடலாற் கொள்ளப்பெற்ற ஒரு நிலப்பகுதி இந்தியாவின் தெற்கேயிருந்தது. இக்கால ஆராய்ச்சியாளர் இதனை லெமோறியாக் கண்டம் என்பர். இந்நிலப்பரப்பு எழுநூற்றுக் காவதம் என்றும், இதில் ஏழ்தெங்கநாடு, ஏழ்மதுரைநாடு, ஏழ் முன்பாலைநாடு, ஏழ்பின்பாலைநாடு, ஏழ்குணகரைநாடு, ஏழ் குன்றநாடு, ஏழ்குறும்பனைநாடு என நாற்பத்தொன்பது நாடுகளும் மற்றும் குமரி, கொல்லம் முதலிய பல மலைநாடுகளும் இருந்தன என்றும் சிலப்பதிகார உரையாசிரியர் கூறுகின்றார். இக்கண்டத்துக்குப் பஃறுளியாறு தெற்கெல்லையாகவும் குமரியாறு வடக்கெல்லையாகவும் இருந்தன. குமரிக்கோடு எனவரு



கோணேசர்மலையில் திருக்கோணேஸ்வரத்திலிருந்து மூன்று ஆலயங்களின் தொலைக்காட்சி
கி. பி. 1624 இல் போத்துக்கீசர் கோவில்களை அழிப்பதற்கு முன்னிருந்த தோற்றம்.



குளக்கோட்டு மன்னன் திருப்பணிகள் செய்த கோணேசர் கோவில்
கி. பி. 1624 இல் போத்துக்கீசர் கோவிலை அழிப்பதற்கு முன்னிருந்த தோற்றம்.

வதால் குமரிமலை ஒன்றும் இருந்ததாகக் கொள்ளலாம். இந் நிலப்பகுதிக்குத் தென்மதுரை தலைநகராக இருந்தது என்பதும் தென்மதுரையிற் தலைச்சங்கம் இருந்ததென்பதும் சிலப்பதிகார அகச்சான்றாகும்.

லெமோறியாக் கண்டத்தில் வாழ்ந்த திராவிட மரபினரின் வம்சாவளிக் கால எல்லைகளை வரலாற்று ரீதியாகவும், விஞ் ஞான ரீதியாகவும், அட்டவணைப்படுத்திய பேராசிரியர் ஸ்ரீநி வாசராகவர் அவர்கள் கி. மு. 30000 ஆண்டுமுதல் கி. மு. 1715 ஆம் ஆண்டுவரையுள்ள காலப்பகுதிக்குள் தென்மதுரைத் தமிழ்ச்சங்கம், கபாடபுரத் தமிழ்ச்சங்கம், வடமதுரைத் தமிழ்ச் சங்கம், லெமோறியாக் கண்டத்தின் பேரழிவு, குமரிக்கண்டத் தின் அழிவு, முதலியவற்றை இலக்கியம், வரலாறு, ஐதீகம், விஞ்ஞான உண்மைகள் ஆகியவற்றின் அடிப்படையில் விரிவாக அட்டவணைப்படுத்தித் தந்துள்ளார். அவ்வட்டவணையை விரி வஞ்சி மட்டுப்படுத்தித் தந்துள்ளேன். இந்திய தீபகற்பமும், இலங்கையும் லெமோறியாக் கண்டத்தின் எஞ்சிய நிலப்பரப்புக் கள் என்பதை நிறுவுவதற்கும், இலங்கையில் திருக்கோணமலை யின் பழமையையும், முக்கியத்துவத்தையும் உணர்த்துவதற்கும் இவை உதவும். இதனால் லெமோறியாக் கண்டம் பற்றி மேல் நாட்டு ஆய்வாளர்களின் கருத்துக்களையும் இங்கு கூறுதல் இன்றி யமையாததாகின்றது.

1. பேராசிரியர் ஹெக்கல் (Prof Hekkal) தமது ''படைப் பின் வரலாறு'' ( History of Creations) என்ற நூலில் லெமோறியா (கோந்துவளநாடு) மனித இனத்தின் தொட்டில் எனக் கூறுகின்றார்.

2. ஸ்கொட் எலியட் (Scort Elliot) தமது ''மறைந்த லெமோறியா'' (Lost Lemuria) என்ற நூலில் மனித னின் மிகமிகப் பழமையான நாகரீகம் தென்னிந்தியா வில் தான் இருந்தது. அதன் விரிவான நிலப்பகுதி தான் கடலில் மூழ்கிய லெமோறியா என விளக்குகி றார்.

3. திரு டோபினார்ட் (Topinard) தென்னாசியாவின் மிகப் பழமையான பகுதி தென்னிந்தியாதான் எனச் சொல் கிறார்.

4. பேராசிரியர் ராலே (Prof Raleieh) ''உலக வரலாறு'' (History of the World) என்ற நூலில் பெருவெள்ளத் துக்குப் பின்னர் (பிரளயம்) இந்தியாவில் மனித இனம் முதன்முதல் தோன்றியது என்கிறார்.

5. பிரித்தானியச் சங்கத்தின் தலைவரான சேர் ஜோண் எட்வன்ஸ் (**Sir John Edwans**) மனிதன் தென்னிந்தியா வில் தான் தனது தோற்றத்தையும் வளர்ச்சியையும் பெற்றான் என்கிறார்.

இவர்களும் அகழ்வாராய்ச்சியாளர்களும் லெமோறியாக் கண்டத் தில் வாழ்ந்த நாகரீக மக்களாகிய திராவிட இனத்தவர்களே தென்னிந்தியாவிலிருந்து கி. மு. 4000 ஆண்டு முதல் வாணிபத் தின் பொருட்டு கடல்மார்க்கமாகவும், தரைமார்க்கமாகவும் எகிப்து, பேஷியா, மொசப்பட்டேமியா, ஆபிரிக்கா முதலிய நாடுகளுக்குச் சென்று தமது கலாச்சாரம், மதம், மொழி என் பனவற்றைப் பரப்பினார்கள் என்று கூறுகின்றார்கள்.

மொசப்பட்டேமியா, ஆபிரிக்கா, எகிப்து முதலிய பிறநாடு களிலிருக்கும் பிள்ளையார், சிவன், முருகன் சிற்பங்கள்; தமிழர் கள் தமது வழிபாட்டுக்காக அங்கங்கே வழிபாட்டுத் தலங்களை அமைத்தார்கள் என்பதையும், தமது நுண்கலைகளை அங்கு பரப்பினார்கள் என்பதனையும் எடுத்துக் காட்டுகின்றது. அமெ ரிக்காவிலுள்ள கொலராடோ ஆற்றங்கரையில் கி. மு. 8000 ஆண்டுகளுக்கு முன்பிருந்த சிவன் கோவில் கண்டுபிடிக்கப்பட் டுள்ளது. பிலிப்பையின்ஸ் மக்கள் சிவனை ''சிவப்பன்'' என்னும் பெயரால் வழிபட்டனர். இந்தோனேஷியாவில் சிவன் கோவில் கள் இருந்தன. சிவனை வணங்குவோர் இன்னும் அங்கு வாழ் கிறார்கள். ஜப்பானியரின் பழங்காலத் தெய்வம் ''சிவோ'' எனப்பட்டது. கொறியாவில் வீதிதோறும் சிவன் கோவில்கள் இருந்தன. எகிப்துநாட்டு ஆற்றங்கரைகளில் சிவலிங்கங்கள் கண் டெடுக்கப்பட்டுள்ளன. சயாம்நாட்டு முடிசூட்டு விழாவில் திரு வெம்பாவையின் ஈற்றடியைப் பாளி எழுத்தில் எழுதிப் படித் தார்கள். எனவே திராவிட நாகரீகமும் அவர்கள் பின்பற்றிய இந்து மதமும் தொன்மைவாய்ந்தது என்பது புலனாகின்றது.

லெமோறியாக் கண்டத்தின் பேரழிவுக்குமுன் இந்தியாவும், ஈழநாடும் (இலங்கை) குமரிக்கண்டத்தின் ஒரு நிலப்பகுதியாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

நாகரீகம் மிக்க திராவிட மக்கள் கலை, கலாச்சாரம் வாணி பம் என்பனவற்றில் மேம்பட்டவர்களாயிருந்ததுபோல மதக் கோட்பாடுகளிலும் சிறந்து விளங்கியிருப்பார்கள் என்பதில் சந் தேகமில்லை. ஆதலால் இந்துமத சாஸ்திரங்களையும், வழிபாட் டுக்குச் சிறந்த ஆலயங்களையும் லெமோறியாக் கண்டத்தில் அமைத்திருப்பார்கள். அந்தப் பண்பாடே பிற்காலத்தில் இந்தி யாவிலும், ஈழத்திலும் பல சிவாலயங்கள் தோன்றுவதற்குக்

காரணமாயிருந்திருக்கும். ஈழநாட்டில் அமைந்த சிவஸ்தலங்களில் ஒன்றுதான் திருக்கோணமலையிலுள்ள திருக்கோணேஸ்வரமாகும். குமரிக்கண்டத்தின் பேரழிவினால் இப்போதுள்ள இலங்கையின் பெரும் பகுதி கடலில் மூழ்கியபோது திருக்கோணமலைக் குன்றுகளின் தொடர்ச்சியாயிருந்த மலையிலுள்ள ஆதிச் சிவாலயமும் கடலில் மூழ்கிவிட்டதாக ஐதீகமுண்டு. இவ்வரலாறுகளை அப்படியே ஏற்றுக்கொள்வதில் தயக்கம் ஏற்படலாம்.

> ''நம்பிக்கை ஏற்படுவது கஷ்டமாக இருக்கலாம் ஆனால்
> நம்பிக்கையின் அவசியத்திலிருந்து மட்டும் நாம் தப்ப முடியாது''
>
> (தத்துவ கலாநிதி - ராதாகிருஷ்ணன்)

திருக்கோணேஸ்வரத்தைச் சுற்றியுள்ள ஆழ்கடலில் ஆராய்ச்சி செய்த திரு. மைக் வில்சன், டாக்டர் சேர் ஆதர்கிளாக், திரு. ரொட்னி ஜெங்க்லஸ் என்னும் ஆழ்கடல் ஆய்வாளர்கள் மிகப் பழமைவாய்ந்த ஆலயம் கடலின் அடியில் அமிழ்ந்திருப்பதாகக் கண்டறிந்தார்கள். பிரம்மாண்டமான மணியும், விளக்குகள், தூண்கள், கோயில் தளங்கள் என்பன கடலினடியிலிருப்பதாகப் பத்திரிகைகளிற் பிரசுரித்தார்கள். இந்தக் கோவில் கடல்கோளினாலழிந்த கோவிலாக இருக்கலாம்.

# கோணேசர் கோயில்கள் பற்றிய புராண ஆதாரங்கள்

திருக்கோணேஸ்வரத்தில் குளக்கோட்டுமன்னன் திருப்பணிகள் செய்த கோணேசர் கோவில் வரலாறுகள் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்கின்றது.

''சித்த சித்தீசனென்று செப்புதற் கரியவாய
தத்துவமுடிவாய்ச் சீவ சாட்சியாய்க் காட்சிமேய
முத்தனா யமலஞான மூர்த்தமாய் யாவுமான
அத்தனைக் கோணைவாழும் அரன்தனை அகத்துள்
வைப்பாம்''

(திரிகோணாசலபுராணம்)

சிவசாந்நித்தியம் நிறைந்த திரிகூடம் எனப்படும் தெட்சணகயிலாய மலையிலிருந்த ஆதிக் கோவில்கள் கடல்கோள்களால் அழிந்துவிட்டபோதிலும் அவ்வாலயங்களிலிருந்த சிவசாந்நித்தியம் அழியவில்லை; அழிவதுமில்லை. இறைவனுடைய திருவருட் செயல்கள் சிவபக்தி நிறைந்த செம்மல்களின் உள்ளத்தில் கருவுற்று மீண்டும் ஆலயங்களைத் தோற்றுவிக்கச் செய்யும். எடுத்துக்காட்டாக கி. பி. 1624 - ஆம் ஆண்டு போர்த்துக்கீசரால் கோணேசர் கோவில் அழிக்கப்பட்டபின் சிவசாந்நித்தியத்தின் திருவருட் செயல்கள் சிவபக்தர்களின் உள்ளத்தில் கருவுற்றிருந்து கி. பி. 1963 இல் கோணேஸ்வரத்தில் புதிய ஆலயத்தைத் தோற்றுவித்தது. இவ்வாறே கடல்கோள்களால் நிகழ்ந்த ஆலயப் பேரழிவுக்குப் பல்லாண்டுகளுக்குப்பின் அக்காலத்தில் வாழ்ந்த ஆஸ்திகப் பெருமன்னர்கள் கோணேஸ்வரத்தில் ஆலயங்களை அமைத்திருப்பார்கள். அவ்வாலயங்களில்தான் குளக்கோட்டுமன்னன் புனருத்தாரணத் திருப்பணிகள் செய்தார் என்பதை

''திருந்து கலிபிறந் தைஞ்ஞூற் றொருபதுடன்
இரண்டாண்டு சென்றபின்னர்
புரிந்திடப மாதமதில் ஈரைந்தாந் தேதி திங்கள் புணர்ந்த
நாளில்
தெரிந்தபுகழ் ஆலயமாஞ் சினகரமும் கோபுரமும் தேரூர்
வீதி
பரிந்துரத்ன மணிமதிலும் பாவநாசச்சுனையும்
பகுத்தான் மேலோன்''

என்னும் கோணேசர் கல்வெட்டு இருபத்திரண்டாம் பாடலாலும்

''அன்னதோர் அமையந்தன்னில் அரசனும் உவந்தெம்
கோமான்
மன்னுமிம் மலையின்மீது மணிமதில் வனப்பு வாய்ந்த
பொன்னியல் கோவிலாதி புகல் திருப் பணிகள் யாவும்
நன்மதி யமைச்சனோடும் செய்கென நவின்றா னன்றே''

என்னும் திரிகோணாசலபுராணம் திருப்பணிப் படலம் 21 ஆம் பாடலாலும் அறியக் கிடக்கின்றது. அன்றியும் தெட்சணகயிலாய புராணத்திலுள்ள பின்வரும் பாடல்கள் குளக்கோட்டு மன்னன் செய்த திருப்பணிகளை விரிவாகக் கூறுகின்றன.

''தேனிலவும் பொன்னிதழிச் செழுமலரும் பகீரதியும்
கூனிலவு முடித்தசடைக் கோணமலைப் பெருமானை
வானுலகும் மண்ணுலகும் வந்துதொழத் திருப்பணிகள்
தானுலகிற் செயநினைத்துத் தமனியப்பொற்
கிணறுற்றான்
(திருநகரச்சருக்கம். 55)

''என்றுமகா மண்டபமும் எழின் முதன்மை மண்டபமும்
குன்றனைய கோபுரமும் கோயில் பல சாலைகளும்
நன்றிபெற அமைத்தருளி நாயகிக்குப் பொற்கோயில்
வென்றிதரும்படி சமைக்க வேண்டுமென உரைசெய்தான்''
(திருநகரச்சருக்கம். 59)

''உரைசெய்தபடி தவறா துயர்ந்த மதிகுலத்தவர் பொன்
வரைசெய்த தெனக் கோயில் மண்டபஞ்சூழ்
மதில்செய்தார்
பிரைசெய்த அமுதமொழிப் பிடியன்ன மென்னடையைத்
தரைசெய்த புண்ணியம்போற் தாபித்தான் மனுவேந்தன்''
(திருநகரச்சருக்கம். 60)

''செய்தபடிக் காயிரம்பொன் தென்கயிலை மீதிருக்கும்
ஐயர்தமக் களித்தருளி யலங்கார நிலங்கொண்டு
வையகமெண் ணெயில்சூழ மணிக்கோயில் இயற்றியதில்
துய்யதிரு மாயனையும் தாபித்தான் தொடைமார்பன்''
(திருநகரச்சருக்கம். 62)

''தொடைபுனை வேதியர்முதலாந் தொல்லோர்க்கு
மெல்லோர்க்கும்
படியில் வினைப்பவந் தீர்க்கும்படி பாவநாசமென்னும்
தடமதுகண் டதற்கருகே தனிமுதல்வ நீராடும்
இடமருவு மண்டபமும் இயற்றுவித்தான் செயதருமன்''
(திருநகரச்சருக்கம். 63)

மேலே தரப்பட்ட தெட்சணகயிலாயபுராணம், திருநகரச்சருக்கம் 55 ஆம் பாடல் குளக்கோட்டுமன்னன் திருக்கோணேஸ்வரத்தில் கோணேசப்பெருமானுக்குக் கோயில் எடுத்ததையும், 59 ஆம், 60 ஆம் பாடல்கள் மாதுமையம்பாளுக்குக் கோயில் அமைத்ததையும், 62 ஆம் பாடல் திருமாலுக்கு ஆலயம் எழுப்பியதையும், 63 ஆம் பாடல் பாவநாசச்சுனையும் அருகே தீர்த்த மண்டபமும் தேரூர் வீதிகள், மதில்கள் என்பன அமைத்ததையும் கூறுகின்றன. பிரசித்திபெற்ற பிரம்மாண்டமான மூன்று கோவில்களைக் குளக்கோட்டுமன்னன் கட்டுவித்தானென்று புராண வரலாறுகள் கூறுகின்றன.



# கோணேசர் கோயில்கள் பற்றிய சரித்திர ஆதாரங்கள்

மேற்கூறிய புராண வரலாறுகளை அறிவியலாளர்களின் சரித்திர ஆதாரங்களில் இனிக்காண்போம்.

1. கி. பி. 1624 ஆம் ஆண்டு கோணேசர் கோவிலை இடித்தழித்த போர்த்துக்கீசத் தளபதியாகிய கொன்ஸ்ரன்டைன் டீசா என்பவன் போர்த்துக்கல் அரசனுக்கனுப்பிய அறிக்கையொன்று லிஸ்பன் நகரத்திலுள்ள ''அஜுடா'' நூல்நிலையத்தில் இருக்கின்றது. அந்த அறிக்கையில் (51 ஆம் பக்கம் VIII - 40) மனுராசா அல்லது மாணிக்கராசா என்னும் மன்னன் இலங்கையை ஆண்டானென்றும், அவன் கி. மு. 1300 ஆம் ஆண்டுக்கு முன் கோணேசர் கோயிலைக் கட்டினான் என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

2. கி. பி. 1624 இல் கோணேசர் கோயிலை இடித்தழித்தவன் கொன்ஸ்ரன்டைன் டீசா. அவனுடைய மகன் ஜெறொட்றிக்கோ டீசா கி. பி. 1679 ஆம் ஆண்டு வெளியிட்ட ஒரு நூலில் ''மலையின் உச்சிக்குச் செல்லும் செங்குத்தான வழி தொடங்குமிடத்தில் ஒரு கோவிலும், மற்றையது செங்குத்தான பாதையின் மத்தியிலும், மிகவும் சிறப்புவாய்ந்த பெரிய கோயில் உச்சிமலையிலும் இருந்தது. இவைகள் மூடநம்பிக்கையுள்ள பெருந்தொகையான யாத்திரிகர்களால் வணங்கப்பட்டு வந்தன'' என்று எழுதியுள்ளார்.

3. கலாநிதி போல் ஈ. பீரிஸ் என்பவர் எழுதிய இலங்கை என்னும் நூலின் இரண்டாம் தொகுதி 168 ஆம் பக்கத்தில் கூறப்படுவதாவது: கி. பி. 1624 ஆம் ஆண்டில் கோடை காலத்தில் (சித்திரைமாதம்) டீசா என்பவன் கோணேசர் கோவிலை அழிக்குங் காரியத்தில் ஈடுபட்டான். கோணேசர்மலை பட்டணத்தோடு தொடர்புபட்டுக் கடலுக்குள் நீண்டு கிடக்கின்றது. அப்பகுதியில் மூன்று கோயில்கள் இருந்தன. ஒன்று மலையடிவாரத்திலும், அடுத்தது மலையின் நடுப்பகுதியிலும் இருந்தது. கடல் மட்டத்திலிருந்து 400 அடி உயரமான மலையுச்சியில்தான் மிகப் பிரபல்யமான மூன்றாவது கோவில் இருந்தது. இங்கிருந்த கோவில்களை அழித்து முக்கோணவடிவமான கோட்டையைப் போர்த்துக்கீசர் கட்டினார்கள்.

4. போர்த்துக்கீச சரித்திர நூலாசிரியராகிய டீ. குவைறோஸ் பாதிரியார் எழுதிய நூலின் இரண்டாம் பாகம் 236 ஆம் பக்கத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கின்றது. ''கிழக்கின் ரோமாபுரியாக கோணேசர் கோவில் விளங்குகின்றது. பூரி ஜெகந்நாத் ஆலயத்திற்கும், இராமேஸ்வரத்திற்கும் போய்த் தெரிசனம் செய்துவரும் யாத்திரிகர்களிலும் பார்க்க மிக அதிகமான யாத்திரீகர்கள் இவ்வாலயத்தைத் தரிசித்து வருகின்றார்கள். திருக்கோணமலைத் துறைமுகத்தின் தரைப்பகுதியிலிருந்து கடலுக்குள் நீண்டிருக்கும் மலையின் மேல் இலங்கை மன்னர்கள் மூன்று கோயில்களைக் கட்டியிருந்தார்கள். அவற்றில் இரண்டு கோவில்கள் மலையின் இரண்டு அந்தங்களிலும் மற்றது இடைநடுவிலும் கட்டப்பட்டிருந்தது. கடலுக்குள் நீண்டிருக்கும் மலைப்பகுதியின் மிக உயரத்திலிருந்த ஆலயமே இந்தியநாட்டு இந்துக்களாலும் மிக முக்கியத்துவம் கொடுத்துப் போற்றி வணங்கப் பட்டுவந்த ஆலயமாகும்''

5. சேர் எமேசன் ரெனற் என்பவர் எழுதிய இலங்கைச் சரித்திரம் இரண்டாம் பாகம் 484—485 ஆம் பக்கங்களில் பின் வரும் விபரங்கள் காணப்படுகின்றன. ''கி. பி. 1639 ஆம் ஆண்டில் டச்சுக்காரர்கள் திருக்கோணமலையைக் கைப்பற்றிக் கோணேசர் கோவிலில் மிகுதியாகவுள்ள கற்களையும் தூண்களையும் இடித்து ஆலயத்தின் ஏனைய பொருட்களையும் எடுத்துக் கோட்டைகட்டப் பயன்படுத்தினார்கள். இங்குள்ள சில இடங்களுக்கு டச்சுப் பெயர்கள்ளயும் சூட்டினார்கள். இவ்வாறு இவர்கள் கொள்ளையடித்து ஆலயத்தைச் சிதைத்துப் பொருட்களைச் சூறையாடியபோதிலும் இந்துக்கள் இவர்களுக்கு ஒளித்து மறைந்து இந்த இடத்தில் தங்கள் வணக்கத்தைச் செலுத்தி வழிபட்டுவந்தார்கள்.

6. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கி. பி. 1890 ஆம் ஆண்டு மத்திய மாகாண அரசாங்க அதிபராயிருந்த ஹென்றி டபிள்யு. கேவ் என்பவர் எழுதிய இலங்கை என்னும் சரித்திர நூலில் திருக்கோணேஸ்வரத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். திருக்கோணமலையில் கடலுக்குள் நீண்டிருக்கும் குன்று மிகப் பழமைவாய்ந்ததும், மனத்தைக் கவரக்கூடிய வரலாற்றுச் சம்பவங்களைக் கொண்டதுமாகும். குறிப்பிட்ட குன்று கடலினுள்ளிருந்து எழுந்து 400 அடி உயரத்தில் அழகுற நிமிர்ந்து நிற்கின்றது.

இந்துக்களின் வரலாற்றுச் செல்வங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. புத்தர் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுக ளுக்கு முன்னிருந்தே இந்துக்கள் இதைப் புனித இடமாகப் போற்றிவந்துள்ளார்கள். தங்களைப் பிராமணர் என்று சொல்லிக்கொள்ளும் ஒரு சாரார் (ஆரியர்) தென்னிந்தியக் கலைச் சிற்பங்களைக் கொண்டு விளங்குகின்ற தூபி, கோபுரம் என்பனவற்றை யுடையதாக ஆலயங்களைக் கட்டியிருந்தார்கள். இவ்வால யம் ஆயிரங்கால் மண்டபத்தையும் கொண்டிருந்தது. போத் துக்கீசர் இக்கோயில்களை இடித்தழித்தபின் இப்பொழுது அந்த இடம் வெற்றிடமாகக் காட்சியளிக்கின்றது. போத் துக்கீசரின் அக்கிரமத்துக்கு எடுத்துக்காட்டாக இப்பொழுது விளங்குகின்றது. இதனைப் பார்த்தால் யாரும் வருத்தப் படாமலிருக்க முடியாது. ஒரு சிறு காரணமுமில்லாமல் இவ்வாலயம் அழிக்கப்பட்டுவிட்டது. எனினும் இந்துக்கள் அந்த வெற்றிடத்தைச் சிவவழிபாட்டுத் தலமாக மதித்து வழிபட்டு வருகின்றார்கள். தெய்வ நிந்தனைக்குரியதும், வருத்தத்திற்குரியதுமான செயலைப் பதினேழாம் நூற்றாண் டில் போத்துக்கீசர் செய்தபோதிலும் இன்னமும் அந்த இடம் புனிதமும், மேன்மைக்குரிய வழிபாட்டுத் தலமாகவும் இருந்துவருகின்றது. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் திருக் கோணமலையைப் பற்றியும் இங்கிருந்த கோணேசர் கோவி லைப் பற்றியும் திரு. நெவில்ஸ் என்னும் ஆய்வாளர் தொகுத்த விடயங்கள் பிரித்தானிய அரசின் நூதனசாலை யில் இருப்பதாக அறிகிறேன். இவைகளைத் தேடி எடுத்துத் திருக்கோணமலை வரலாற்றுடன் -சேர்க்க அறிஞர்கள் கடமைப்பட்டுள்ளார்கள்.

போத்துக்கீசர் - ஒல்லாந்தராகிய அன்னியர் ஆட்சிக்காலத்தில் இப்போதிருக்கும் ''பிறடெறிக் கோட்டை'' அவர்கள்வசமிருந்த தால் இந்துக்களின் மத சுதந்திரமும், வழிபாட்டுச் சுதந்திரமும் மறுக்கப்பட்டுவந்தன. பிரித்தானிய ஆட்சியாளர்கள் திருக்கோ ணேஸ்வரத்தின் தொன்மையையும், வண்மையையும், தெய்வீகச் சிறப்பையும் உணர்ந்து இந்துக்களுக்கு மத சுதந்திரத்தையும், வழிபாட்டுச் சுதந்திரத்தையும் வழங்கியிருந்தார்கள். திருக்கோ ணேஸ்வரத்தில் போத்துக்கீசர் செய்த அனர்த்தங்களுக்கும், அட்டூளியங்களுக்குமுரிய. பிரதிபலனை அனுபவித்துக்கொண்டி ருக்கிறார்கள்.

கி. பி. 1787 ஆம் ஆண்டு பெரும் பூமியதிர்ச்சியினால் போத் துக்கல் நாட்டில் பேரழிவு நிகழ்ந்தது.

கி. பி. 1988 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் லிஸ்பொன் நகரில் ஏற்பட்ட தீவிபத்தினால் பேரழிவு ஏற்பட்டது,

கி. பி. 1988 ஆம் ஆண்டு ஆக்ஸ்ட் 25 ஆம் திகதி போத்துக்கல் நாட்டின் இருதயமாக விளங்கும் நகரமொன்றில் நிகழ்ந்த மற்றுமோர் தீவிபத்தில் அனேக உயிர்ச்சேதங்களும், பொருட்சேதங்களும் ஏற்பட்டது. இதுபோன்ற மாபெரும் தீவிபத்து இதற்குமுன் நிகழ்ந்ததில்லையென வானொலிச் செய்திகள் கூறின. ''சிவச்சொத்து குலநாசம்'' என்பது இந்துக்களின் நம்பிக்கை. ஆதலால் போத்துக்கீசர் செய்த அனர்த்தங்களின் பிரதிபலனைத்தொடர்ந்து அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

மத வழிபாடு அரசியல் சூதாட்டங்களுக்கும், பொருட்சூறைகளுக்கும் அப்பாற்பட்டது. யாராயிருந்தாலும், எந்த வழிபாட்டுத் தலமாயிருந்தாலும் புனித ஆலயங்களுக்கு ஊனம் விளைவிப்பவர்கள் இன்னல்களை அனுபவித்தே தீரவேண்டும். திருக்கோணேஸ்வரம் சிவசாந்நித்தியம் நிறைந்த புனித ஸ்தலம். இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது கோணேசர்மலை மீது ஜப்பானியர் குண்டுகளை அள்ளி வீசினார்கள். திருக்கோணேஸ்வரம் தெய்வசாந்நித்தியம் நிறைந்த புனித தலமாதலால் கோணேசர் மலைமீது நிறுவப்பட்டிருந்த விமான எதிர்ப்புப் பீரங்கிகளுக்கு இலக்குவைத்து வீசப்பட்ட குண்டுகளில் ஒன்றேனும் கோணேசர்மலையில் விழவில்லையென்பது தெய்வீக அற்புதமாகும்.

''எப்பாலு மமர்க்களமா யிருந்த ஞான்று
எமக்குமது வருமோவென் றேங்கி யேங்கி
அப்பாவி மக்களெலாம் அஞ்சி நிற்ப
அறிவுடையோர் சிலர் திரண்டே யபிடேகத்தை
ஒப்பாக முன்னடவா முறையே செய்தே
உனைவேண்ட ஒளிகாட்டிச் சகுனங்காட்டி
யப்பானின் குண்டுவிழக் கடலுட் சேர்த்தாய்
அமல திருக்கோணேச அருள்தாவையா.''

என்று திருக்கோணமலைக் கோணேசர்மீது கலைப்பித்தன் பாடிய அருள்வேட்டற் பாடலில் மேற்படி சம்பவம் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இக்கூற்றை அறிவியலாளர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். உலகின் பல ப்ாகங்களிலும் தீவிபத்து, வெள்ளப்பெருக்கு, நிலநடுக்கம்,, நிலச்சரிவு, கடற்பெருக்கு, விமான விபத்துக்கள், கொடிய தொற்றுநோய்களால் உயிரழிவு, பட்டிணிச்சாவு என்று

இந்தவகையான பேரழிவுகள் நிகழுகின்றனவே அந்தந்த நாடுகளிலுள்ளவர்களும் கோயிலையழித்தல், கொள்ளையடித்தல் முதலிய குற்றங்களைச் செய்தவர்களா? என்று கேட்க நியாயமுண்டு. நிதானமாகச் சிந்தித்து ஆராய்ந்து பார்த்தால் அந்தந்த இடங்களிலுள்ளவர்கள் தர்மநீதியிலிருந்து தவறிக் கேடுகள் செய்த நிகழ்வுகளின் உட்கிடக்கையும், சுவடுகளும், பின்னணியும் புலப்படும். அப்போது காரண காரிய விளைவுகளை ஊகித்து அறிந்துகொள்ளலாம்.

7. ஈழத்தில் குறிப்பாகத் திருக்கோணமலையில் சிவநெறி தழுவி நின்ற செந்தமிழ் மக்கள் வாழ்ந்தார்கள் என்ற உண்மையை வணக்கத்துக்குரிய வல்பொல இராகுல என்பவர் எழுதிய ''இலங்கையின் பௌத்த வரலாறு'' என்னும் நூலின் (பக்கம் 44) வாயிலாக அறியலாம். கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் சிங்களவரின் முன்னோர் என்று கருதப்படும் விஜயன் வருவதற்கு முன்பே இங்கு சைவம் தழைத்தோங்கியிருந்தது, என்பதற்குரிய சான்றுகளை அந்நூல் தருகின்றது. விஜயனின் வருகைக்கு முன்னரும், பின்னரும் ஈழநாட்டில் சைவம் சிறப்புற்றிருந்ததென்பது வணக்கத்துக்குரிய வல்பொல ராகுல என்பவரின் கூற்றாகும்.

திருக்கோணமலை, ஈழநாட்டில் தமிழர்கள் ஆதியிற் குடியேறிய முதன்மையான இடங்களில் ஒன்று. **(The Trincomalee was One of the First Tamils - Settlements in Ceylon. Encyclopaedia Britanica - vol. 22, Page 477)** பௌத்தம் ஈழநாட்டிற்குப் பரவ முன்னரும் பரவிய பின்னரும் இங்கு சைவசமயம் சிறப்புற்று விளங்கியதென்பது வரலாற்றுண்மையாகும். ஆகவே விஜயன் வருவதற்கு முன்னரும், விஜயனின் காலமான கி. மு. 5 ஆம் நூற்றாண்டிலும் திருக்கோணமலையில் கோணேசர் ஆலயம் ஈடு இணையற்று இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.


8. கத்தோலிக்க மதபீடத்தின் முதன்மை பெற்றவர்களுள் ஒருவராகிய பரிசுத்த பிரான்சிஸ் சவேரியர் திருக்கோணமலையை நேரில் பார்வையிட்டபின் ''இலங்கையில் கத்தோலிக்க மதம் வளர்ந்த வரலாறு'' என்ற நூலில் எழுதியிருப்பதாவது. ''கீழைத்தேச மிலேச்சர்களின் உரோமாபுரி திருக்கோணமலை. உலகின் பல பாகங்களிலுமிருந்து வந்த இந்துக்கள் திருக்கோணமலையிலிருக்கும் கோணேசரை வழிபட்டனர்.'' என்ற பேருண்மையை எடுத்துக் கூறியுள்ளார். கத்தோலிக்கருக்கு உரோமாபுரி எப்படியோ இந்துக்களுக்கு திருக்கோணமலை என்று கூறியிருப்பது மிக முக்கியத்துவம்

வாய்ந்த குறிப்பாகும். போத்துக்கீசர் இலங்கைக்கு வந்த பின் அக்காலத்திலிருந்த கத்தோலிக்க குருமார் இந்துக்களை மிலேச்சர் என்று குறிப்பிடுவதும் இந்துக் குருமார் மேல் நாட்டுப் புறச்சமயத்தவர்களை மிலேச்சர் என்று குறிப்பிடுவதும் புறச்சமய வெறுப்புணர்ச்சியாலெழுந்த வார்த்தைகள்.


9. ''இலங்கையில் திருக்கோணமலையைத் தமது அதிகாரத்திற்குள் வைத்திருந்த போர்த்துக்கீசத் தளபதிகளில் திருக்கோணேஸ்வரத்தை அழித்த கொன்ஸ்ரன்டைன் டீசா வரைந்த கோணேசர் கோவில் படங்களும் கோவில் இருந்த இடத்தின் நீள, அகல எல்லைக் குறிப்புகளும் காணப்படுகின்றன. டீசாவால் அழிக்கப்பட்ட கோவில்கள் அமைந்த நிலத்தின் நீளம் 600 பாகம். அகலம் 80 பாகம், என்றும் அது ஒடுங்கி ஒடுங்கிச் சென்று 30 பாகமாக அமைந்திருந்ததென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது''.

திருக்கோணேஸ்வரம் பற்றி இவைபோன்ற பல வரலாற்றுக் குறிப்புகளை டாக்டர். டபிள்யு. பாலேந்திரா அவர்கள் லிஸ்பொனிலிருந்து பெற்றுத் தமது அறிக்கையில் வெளியிட்டுள்ளார்கள். அன்னாரின் அரிய சேவைகள் என்றென்றும் போற்றப்பட வேண்டியவை. மேற்கூறிய வரலாற்றுக் குறிப்பின்படி இப்போது ஆலயம் அமைந்திருக்கும் கோட்டைப்பகுதி முழுவதும் ஆலயப் புனிதப் பிரதேசமாயிருந்ததென்பதை அறியக்கூடியதாயிருக்கின்றது. எனவே இற்றைக்கு நாலு நூற்றாண்டுகளுக்கு முன் இப்பொழுது பிறடெறிக்கோட்டை அமைந்திருக்கும் நிலப்பரப்பு முழுவதும் கோணேசர் கோவிலுக்கு உரியதாயிருந்ததென்பதைப் போத்துக்கீசரின் பதிவேடுகள் உறுதிப்படுத்துகின்றன.

இதுகாறும் கூறியவற்றால் போத்துக்கீசர் கோணேஸ்வரத்திலிருந்த கோவில்களை அழிப்பதற்கு முன்பு திருக்கோணமலையின் இயற்கையமைப்பும், கோணேஸ்வரத்திலிருந்த மூன்று கோவில்களும், அவைகள் இருந்த இடங்களும், பாவநாசத் தீர்த்தம், மண்டபங்கள், வீதிகள் என்பனவும், அங்கிருந்த தெய்வீகச் சூழலும், ஆலயங்களில் நடைபெற்றுவந்த பெருவிழாக்களும், அடியார்கள் பக்தர்களின் வழிபாட்டு நெறிகளும், எவ்வாறு இருந்திருக்கும் என்பதைக் கோணேசப் பெருமானின் திருவருட் துணைகொண்டு அவன் காட்டக்கண்ட அகக்காட்சியை இங்கு தருகின்றேன்.




திருக் கோணமலையை போத்துக்கீசர் கைப்பற்றியபின் போத்துக்கீச அரசனுக்கு வரைந்தனுப்பிய கோணேசர் மலையுடன் கூடிய திருக்கோணமலைப்படம்




போத்துக்கீசத் தளபதி கொன்ஸ்ரன்டைன் டீசா லிஸ்பொனிலுள்ள
போத்துக்கீச அரசனுக்கு கோணேசர் கோவிலை அழிப்பதற்கு முன் வரைந்து
அனுப்பிய கோணேசர் கோவில் படம்

# போத்துக்கீசர் அழிப்பதற்கு முன்னிருந்த கோணேஸ்வரம்

புனித க்ஷேத்திரமாயிருந்த திருக்கோணேஸ்வரம் தற்போது முற்ற வீதியாகவும், கடைவீதிகளுட்பட மக்களின் குடியிருப்பாக வும் விளங்கும் மூன்று மைல் சுற்றளவுள்ள திருக்கோண மலைப் பட்டினம் அமைந்துள்ள தரைப்பகுதியோடு தொடர்பு பட்டுக் கடலினுள் நீண்டுகிடக்கும் மலைப்பகுதியாகும்.

போத்துக்கீசரும், டச்சுக்காரரும் கட்டிய முக்கோணவடிவ மான கோட்டைக்குள் ஆங்கிலேயர்கள் தமது ஆட்சிக்காலத்தில் கட்டிய கட்டிடங்களையும், இலங்கை சுதந்திரமடைந்தபின் கி.பி. 1979 ஆம் ஆண்டுக்குப்பின் ஸ்ரீலங்கா அரசுகள் அமைத்த கட் டிடங்களையும், அதேயாண்டில் இலங்கை ராணுவத் தரைப் படைப் பிரிவொன்று தமது வழிபாட்டுக்காகக் கட்டிப் பின்னர் பெரிதாக எழுப்பிய பௌத்த விகாரை, புத்தர் சிலை என்பனவற் றையும் முற்றாக அகற்றிவிட்டால் நமது அகக் கண்ணுக்கும், புறக்கண்ணுக்கும் தோற்றமளிக்கும் மலைப்பகுதியே கோணேஸ் வரமாகும். இந்த நிலப்பகுதியின் நீள, அகல, உயரங்களையும் அங்கிருந்த கோயில்களையுங் குறித்து போத்துக்கல் மன்ன னுக்கு கொன்ஸ்ரன்டைன் டீசா எழுதியனுப்பிய குறிப்புகளை யும், கோவில்களின் வரைபடங்களையும் முன்னர் குறிப்பிட்டுள் ளேன். இந்த நிலப்பரப்பையும், மலையின் உயர்வு தாழ்வுத் தரைத்தோற்றத்தையும் கற்பனைக் கண்கொண்டு பாருங்கள். திருக்கோணமலைப் பட்டணத்தோடு தொடர்புபட்ட தற்போ துள்ள முற்றவெளிச் சமதரையை வடக்கேயும் தெற்கேயும் கடல் சூழ்ந்து நெருக்கிக்கொண்டிருக்கின்றது. அந்தச் சமதரையில் வாழ்ந்த குடிமக்களைக் கடலலைகள் நெருக்குகின்றன என்பதை

''கொடிதெனக் கதறும் குரைகடல் சூழ்ந்து கொள்ளமும்
நித்திலம் சுமந்து
குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றும்
கோணமாமலை''

என்று திருஞானசம்பந்தர் திருக்கோணமலைத் தேவாரத் திருப் பதிகத்தில் குறிப்பிடுகின்றார். இந்தச் சமதரையிலிருந்து முன் னேறி கோணேசர்மலையின் அடிவாரத்தை நெருங்கும்போது மலையின் வடக்கேயும் தெற்கேயும் தோன்றும் உயர்ந்த பாறை கள் படிப்படியாக உயர்ந்து செல்வதைக் காணலாம். இந்தப்

பாறைகளுக்கு இடைப்பட்ட நிலப்பரப்பு விரிந்த சமதரையாகக் காட்சியளிக்கின்றது. இந்தச் சமதரையின் தென்திசையில் பிடியன்ன நடையாளாகிய மாதுமையம்பாளின் பிரம்மாண்டமான கோவில் கட்டப்பட்டிருந்தது. வானுயர எழுந்த கோபுரத்தையுடைய இவ்வாலயத்துக்கு வடகிழக்கே பாவநாசத் தீர்த்தக் கேணி அமைந்திருந்தது. நீள் சதுர வடிவமான இந்தக் கேணி கருங்கற்களாலான அனேக படித்துறைகளையுடையதாய்க் கடல் மட்டத்துக்குக்கீழ் ஆழமுடையதாயிருந்தது. இதனால் இப்பாவநாசத் தீர்த்தம் எக்காலத்திலும் வற்றாத நீர்நிறைந்ததாயிருந்தது. மக்கள் நீராடுவதற்கு இதனைப் பயன்படுத்திய காரணத்தினால் விசேட காலங்களில் சுவாமி தீர்த்தமாடுவதற்கும், ஆலயங்களிலுள்ள மூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்வதற்கும் தனியாகப் பாவநாசக் கிணறு அமைக்கப்பட்டிருந்தது. போத்துக்கீசரின் அக்கிரமங்களுக்குத் தப்பிய இந்தத் தீர்த்தக் கிணற்றில்தான் இப்போது மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமான் தீர்த்தோற்சவத்தில் தீர்த்தமாட எழுந்தருளுகின்றார். பாவநாசத் தீர்த்தக்கேணிக்கு வடக்குப் பக்கமாக தீர்த்த மண்டபம் அமைந்திருந்தது. சுவாமி தீர்த்தமாடிய பின் இந்த மண்டபத்தில்தான் எழுந்தருளியிருப்பார். ஆதலால் இதனை ஆஸ்தான மண்டபம் என்றும் கூறுவர்.

கோணமாமலையில் மாதுமையம்பாளின் ஆலயம் அமைந்திருந்த இடம் விரிந்து பரந்த பெரிய சமநிலமாயிருந்த காரணத்தால் இவ்வாலயத்தைச் சுற்றியே தேரோடும் வீதியும் அமைந்திருந்தது. ஆலய அமைப்பு விதிகளுக்கு ஏற்றவகையில் மணி மதில்களும், மண்டபங்களும், மடங்களும் இங்குதான் வசதியாக அமைந்திருந்தன. கோணேஸ்வரத்தைத் தரிசிக்கவரும் உள்நாட்டு, வெளிநாட்டு அடியார்களின் உபயோகத்துக்காகப் பாவநாசத் தீர்த்தத்தைச் சுற்றி ஐந்து கிணறுகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் இப்போது மூன்று கிணறுகள்தான் இருக்கின்றன. போத்துக்கீசருக்குப் பின்வந்த ஆட்சியாளர்கள் இரண்டு கிணறுகளை மூடிவிட்டார்கள். தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பாவநாசத்தில் தீர்த்தமாடிச் சமையாசார முறைப்படி ஆலயத்துக்குச் சென்று வழிபடுவதைக் காணலாம்.

தெட்சண கயிலாய க்ஷேத்திரத்தின் மகிமையும், இறைவனுடைய புகழுமே மக்களுடைய வாயிலிருந்து ஒலித்துக்கொண்டிருக்கும். ஒருபுறம் புராண படனமும், மறுபுறம் மங்கள வாத்தியங்களின் ஒலியும், வேதபாராயணம், திருமுறைப் பாராயணம், என்பவற்றின் ஒலியும் எழுந்து இந்த இடம் எப்பொழுதும் தெய்வ சாந்நித்தியம் நிறைந்த புனித சூழலாகவே காணப்படும்.

கோணேசப் பெருமானுடைய இரதோற்சவம் இங்கிருந்து தான் தொடங்கும் மலையின் உச்சியிலிருந்த ஆலயத்திலிருந்து எழுந்தருளிவந்த கோணேசப்பெருமானார் மாதுமையம்பாளு டைய ஆலயத்தைச் சுற்றிவந்து இரதத்தில் ஆரோகணம் செய்து மலையடிவாரத்தைத் தாண்டி இப்போது பட்டணமாக மாறி யிருக்கும் குடியிருப்புப் பகுதியை வலமாகச் சுற்றிக் கந்தசுவாமி மலையடிவாரத்திலுள்ள மனையாவெளிக் குளம், வில்வபத்திரக் கோணேசர்கோவில் குளம், (பிற்காலத்தில் தக்கியாக்குளம்) (இந்தக் குளம் தூர்க்கப்பட்டு அவ்விடத்தில் உள்ளூராட்சி திணைக் கள கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.) சிவன் கோவிலுக்கருகில் அமைந்திருக்கும் செங்கற்பண்ணைக் குளம், வீரகத்திப்பிள்ளை யார் கோவிலுக்கருகில் இருக்கும் தாமரைக் குளம் என்பன வற்றை மருவியிருந்த வீதிவழியாகவந்து வடதிசைக் கடற்கரை யோரமாகவுள்ள வீதிவழியாகக் கோணேஸ்வரத்தையடைவார். மேற்கூறிய குளங்களின் சமீபமாக இப்போதிருப்பது போன்று ஆலயங்கள் இருக்கவில்லை. அந்தந்தக் குளங்களினருகே குடிமக் கள் தற்காலிகப் பந்தல்களையமைத்து சுவாமியை வரவேற்றுச் சமயாசார முறைப்படி வழிபாடு செய்தார்கள்.

பிரமாண்டமான கோபுரத்தையுடைய மாதுமையம்பாளின் கோவில் கிழக்கு நோக்கிய வாயிலையுடையதாயிருந்தது. கற்பக் கிரகத்தில் அம்பாளுடைய சிலா விக்கிரகமும், ஏனைய பரிவார மூர்த்திகளின் ஆலயங்களும் ஆகம சாஸ்திர முறைப்படி அமைந் திருந்தன. தற்போது கச்சேரியும், ஏனைய அரசாங்கப் பணி மனைகளும் இருக்கின்ற இடத்தில் மாதுமையம்பாளின் ஆலயம் இருந்தது. தெட்சணகயிலாய புராணத்தில் திருநகரச் சருக்கம் 59ஆம் 60ஆம் பாடல்களில் கூறப்பட்டுள்ள மாதுமையம்பாளின் ஆலயம் இதுவாகும்.

மாதுமையம்பாளின் ஆலயத்துக்கும் பாவநாசத் தீர்த்தம் இருக்கும் இடத்திற்கும் மத்தியில் மலையில் ஒரு நெடும்பாதை ஏறிச் செல்கின்றது. அப்பாதை இப்போதும் இருக்கின்றது. அப்பாதைவழியே ஏறிச் செல்லும்போது மலையில் மற்றுமொரு சமதரை அமைந்திருப்பதைக் காணலாம். தற்போதுள்ள காவல் துறையினரின் குடியிருப்பும், கிளிவ் கொட்டேச்சும், இரண்டா வது உலகமகா யுத்த காலத்தில் விமான எதிர்ப்புப் பீரங்கி பொருத்தப்பட்டுள்ளதுமான நிலப்பகுதியே இந்தச் சமதரை யாகும். மேலே கூறப்பட்ட கட்டிடங்களையெல்லாம் அகற்றி விட்டுக் கற்பனைக் கண்கொண்டு பார்க்கும்போது இந்தச் சமதரை தெளிவாகத் தெரியும். இந்த நிலத்தின் தெற்குப் பக் கத்தில் பிரித்தானிய ஆட்சியாளர்கள் நிலத்தை அகழ்ந்து பிரம்

மாண்டமான நீர்த்தொட்டியொன்றை நிலத்தினடியில் அமைத்திருக்கிறார்கள். இப்போதும் அது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த நீர்த்தொட்டியை அமைப்பதற்காக் நிலத்தை அகழ்ந்தபோது சுமார் ஐந்து அடி உயரமான ஸ்ரீ நாராயண மூர்த்தி, மகாலெட்சுமி என்பவர்களின் சிலாவிக்கிரகங்கள் கிடைக்கப்பெற்றன. இவை இரண்டும் ஊனப்பட்ட நிலையில் கோணேசர் கோவிலில் இருக்கின்றன.

குளக்கோட்டுமன்னன் கோணேஸ்வரத்தில் திருப்பணிகள் செய்தபோது எழுப்பப்பட்ட ஸ்ரீநாராயணமூர்த்தியின் கற்கோவில் இந்த இடத்தில்தான் இருந்துது. தெட்சணகயிலாய புராணம் திருநகரச் சருக்கம் 62 ஆம் பாடலில் கூறப்பட்ட ஸ்ரீநாராயணர் கோவில் இதுவாகும். கிழக்குநோக்கிய இவ்வாலயம் பிரம்மாண்டமாய் உயர்ந்த கோபுரத்தை உடையதாயிருந்தது. கருவறையில் ஸ்ரீமகாலெட்சுமி சமேத நாராயணமூர்த்தியின் சிலாவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. ஸ்ரீகோணேஸ்வரச் க்ஷேத்திரத்தின் தெய்வீக சாந்நித்தியத்தினால் ஸ்ரீநாராயணரும் மகாலெட்சுமியும் அந்த இடத்திலேயே மண்ணில் மறைந்திருந்தார்கள். மண்ணைத் தின்று மகிழச்செய்யும் மாயவன் மண்ணில் மறைந்திருப்பதை அறியாமல் நிலத்தை அகழும்போது ஆயுதங்களால் தாக்குண்டு சிலாவிக்கிரகங்கள் சிதைந்தனவோ? அன்றி அக்கிரமக்காரப் போர்த்துக்கீச வெறியர்கள்தான் உடைத்துப் புதைத்தார்களோ? இறைவனுக்குத்தான் வெளிச்சம். அந்த வெறியர்களுக்குப் பொன்னும், மணியும் கோட்டை கட்டுவதற்குக் கருங்கற்களுந்தான் முக்கியமாகத் தேவைப்பட்டன.

இவ்வாலயம் அமைந்திருந்த சமதரை மாதுமையம்பாள் கோவில் அமைந்திருந்த சமதரையிலும் பார்க்கப் பரப்பளவில் சற்றுக் குறைவானது. இந்தச் சமதரையில் கிழக்கே செங்குத்தான மலைப்பாறைச் சரிவும் வடக்கேயும் தெற்கேயும் சற்றே சரிந்த மலைச்சாரலும், மேற்கே முரட்டுப்பாறைத் தொடர்களை உடையதாகவும் இருந்தது. இந்தப் பாறைத் தொடரின் அந்தத்திலேதான் ஸ்ரீலங்கா அரசாங்கம் தரைப்படை வீரர்களின் வழிபாட்டுக்கென கி. பி. 1979 ஆம் ஆண்டில் ஒரு விகாரையைக் கட்டிப் பின்னர் புத்தர் சிலையையும் நிறுவிக் கோகர்ண விகாரை இங்கேதானிருந்ததென்று பத்திரிகைகள் மூலம் பிரசாரம் செய்து வரலாற்றையும் இதிகாசத்தையும் திரிபுபடுத்தியிருக்கிறார்கள். இலங்கை அரசாங்கத்தின் புதைபொருளாராய்ச்சித் துறை நிறுவனத்தின் தலைவராயிருந்த திரு. பரணவிதான அவர்கள் தமது ஆராய்ச்சியின்போது வேறெங்கோ ஓரிடத்தில்

கண்டெடுக்கப்பட்ட தங்க ஏட்டில் கோகர்ண விகாரைபற்றி யிருந்த குறிப்புக்களை ஒரு ஆங்கிலத் தினசரியில் பல வருடங் களுக்கு முன் வெளியிட்டிருந்தார். அச்செய்தியை இலங்கை அரசாங்கம் இருட்டடிப்புச் செய்துவிட்டது. ஏன்? என்பதை வாசகர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். திரு. பரணவித்தான அவர்கள் உண்மையை வெளிப்படுத்தியதை அரசாங்கம் வர வேற்கவில்லை. இன, மதத் துவேஷமே இதற்குக் காரணமா யிருந்தது.

கோணேஸ்வரத்தின் தொன்மைபற்றி ஆய்வுசெய்யும் சிந்த னைக்குக் கிடைத்த தொன்மையான திருவுருவம் ஸ்ரீலெட்சுமி நாராயணர். கி. பி. 1624 ஆம் ஆண்டு போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட திருக்கோணேஸ்வரத்திலிருந்த மூன்று ஆலயங் களில் ஒன்று ஸ்ரீநாராயணர் கோவில். அவ்வாலயம் இருந்த இடத்தில் லெட்சுமி, நாராயணர் திருவுருவங்கள் சிதைந்த நிலையில் நிலத்தினடியில் புதைந்து கிடந்து எடுக்கப்பட்டன. கோணேஸ்வர ஆலய பரிபாலன சபையின் தலைவராயிருந்த டாக்டர் சி. சித்திரவேலு அவர்கள் இந்தச் சிதைந்த திருவுரு வங்களை சிற்பாசாரியரைக்கொண்டு சீராகப்பொருத்திப் புதி தாகத் திருப்பணி செய்யப்பட்ட கோணேசர் கோவிலில் வைப் பித்தார்.

காஞ்சிப் பெரியவாள் ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள் லோக க்ஷேமார்த்தமாகச் சிந்தித்து அருளிய கருத்தொன்றினை இவ் விடத்தில் கூறுதல் பொருத்தமாயிருக்குமெனக் கருதுகிறேன். கர்நாடக மானிலத்தில் விஜயநகர சாம்ராச்சியத்தை நடாத்திய கிருஷ்ணதேவராயரால் அமைக்கப்பட்ட இருபத்தேழடி உயர மான நரசிங்கமூர்த்தியின் சிலையை கி. பி. 1565 ஆம் ஆண்டு பீஜப்பூர் சுல்த்தான் விஜயநகர்மீது படையெடுத்தபோது தீமூட் டிச் சிதைப்பித்தான். சிதைக்கப்பட்ட அச்சிலா விக்கிரகத்தை பல்லாண்டுகளுக்குப் பின் இந்திய அரசு புதைபொருளாராய்ச்சி நடத்தித் தேடியெடுத்துச் சிற்பாசாரியரைக்கொண்டு பொருத்தி பாதுகாத்து வைத்திருக்கின்றது.

ஆகமநூல் கூற்றின்படி பெரும் வழிபாட்டிலிருந்த தெய்வ உருவங்கள், ஆலயங்கள் என்பன சிதைந்தால் அங்கு வாழுகின்ற மக்களுக்குப் பெரும் துன்பங்கள் ஏற்படுமென்று கூறப்படுகிறது. அவ்வூர் மிகவும் பின்தங்கி மக்கள் துன்ப துயரங்களுக்கு ஆளாகி ஏழ்மை நிலையில் இருப்பதற்கு இதுவே காரணமென்று நம்பு கிறார்கள். நம்பிக்கை வீண்போவதில்லை. தொன்மைவாய்ந்த ஆலயங்கள், அங்கு வழிபடப்பட்டு வந்த திருவுருவங்கள் என்

பன முழுமையாகத் திருப்பணி செய்யப்பட்டு சீரமைக்கப்படும் போது உலகம் முழுவதும் க்ஷேமமாயிருக்குமென்பது சங்கராச் சாரிய சுவாமிகளுடைய கருணை உள்ளம்,

இதனைக் கருத்திற் கொண்டு கோணேஸ்வர ஆலயமும் திருவுருவங்களும் பேணப்படவேண்டும். இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் இந்துக்களும் எதிர்காலச் சந்ததியும் கோணேஸ் வரத்தின் தொன்மையையும், தெய்வீகச் சிறப்பையும் ஆழ்ந்து சிந்தித்து திரிகரண சுத்தியோடு தொண்டாற்ற முன்வரவேண் டும். மதவெறி கொண்டவர்களின் செயற்பாட்டிற்கு இந்துக்கள் இடமளிக்கக்கூடாது. திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்றை முன்னெடுத்துச் சென்று குளக்கோட்டு மன்னன் காலத்திலிருந்த கோணேஸ்வரத்தை மீண்டும் உருவாக்கவேண்டும். ''நின்றுணும் சமணும் இருந்துணும் தேரும் நெறியல்லாதன புறங்கூற'' என்று திருக்கோணேஸ்வரத் திருப்பதிகத்தில் கூறப்பட்டுள்ள திருஞானசம்பந்தரின் திருவாக்கின் உட்பொருளை உணர்ந்து சைவ உலகம் செயல்படவேண்டும்.

ஸ்ரீலெட்சுமி, நாராயணமூர்த்தியின் ஆலயமிருந்த இடத்தி லிருந்து வடக்குப் பக்கமாக கோணேசமலையின் சாரலில் ஓர் பாதை செல்கின்றது. பாதையின் கிழக்குப்பக்கம் மலையின் உயர்ந்த சரிவும், மேற்குப்பக்கம் தாழ்ந்த சரிவும் உடையதாக இருந்தது. உச்சிமலையிலிருந்த கோணேசப் பெருமானின் பேரா லயத்துக்குச் செல்ல இந்தப் பாதைதான் உபயோகிக்கப்பட்டு வந்தது. இப்போதும் இப்பாதையே பயன்பட்டு வருகின்றது. கி. பி. 1963 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்ட புதிய கோணேசர் கோவிலுக்குரிய மடம் இப்பாதையருகிலேயே இருக் கின்றது. பாதைகள் இப்போதிருப்பதைப் போன்று தார் ஊற் றப்பட்ட கற்பாதைகளாயிருக்கவில்லை. மலையின் இயற்கை அமைவுக்கேற்ப வீதிகள் தாழ்ந்தும் உயர்ந்தும் சென்றதால் வேண்டிய இடங்களில் கருங்கற் படிகள் அமைக்கப்பட்டிருந்தன. இப்பாதை இராவணன்வெட்டை அடையும்போது இராவணன் வெட்டியதாலேற்பட்ட குறுகிய ஆழமான பள்ளத்தைக் கடந்து செல்ல நேர்ந்ததால் குளக்கோட்டு மன்னன் அந்த ஆழமான பள்ளத்தை நிரப்பும் திருப்பணியும் செய்தானென்று தெட்சண கயிலாய புராணம் கூறுகின்றது.

> ''வேந்தனும் மந்திரியும் போய் விமலர் திருப்பணிக்காக
> வாய்ந்த மலை முறித்தசிலை வரும் படிக்கு வழிவேண்டிக்
> காய்ந்த அரக்கன் தலைநாள் உடைத்தவழிக் கடலடைத்துப்
> போந்தபடி கட்டியதன் புறமேறித் தெரிசித்தான்''.

(திருநகரச் சருக்கம்: 57)

''அரக்கர்தங் குலத்திற் தோன்றி அமரர்தங் குலங்க
ளெல்லாம்
வெருக்கொளத் துயரஞ் செய்யும் விறன்மிகு மிராவணேசன்
தருக்கொடு தலைநாள் வந்து தன்கைவாட் படையால்
வெட்டும்
பெருக்குறு கடல்வாய் தன்னைப் பேணிமுன் னடைத்தல்
செய்தான்''.

என்று திரிகோணாசலபுராணம் திருப்பணிசெய் படலம் 25ஆம் பாடலிலும் காணப்படுகின்றது. இந்த இராவணன்வெட்டைக் கடந்து மலையுச்சியை அடையும்போது அங்கு ஒரு சமதரையைக் காணலாம். இந்த இடத்தில்தான் மாதுமையம்பாள் சமேத கோணேசப்பெருமானுக்கு ஒப்புயர்வற்ற பெருங்கோவில் கட்டப் பட்டிருந்தது.. இந்த ஆலயத்தின் கோபுரத்தில் பொருத்தப் பட்டிருந்த விலைமதிப்பற்ற இரத்தின மணிகள் தூரக்கடலிற் செல்லும் கப்பற் பிரயாணிகளுக்கும், மாலுமிகளுக்கும் கலங்கரை விளக்குப் போலப் பிரகாசித்துக்கொண்டிருந்தன. கோணேஸ்வ ரத்தில் கட்டப்பட்டிருந்த மூன்று கோவில்களின் கோபுரங்களும் தூரத்திலே கடலிற் செல்லும் பிரயாணிகளுக்குத் தெளிவாகத் தெரியக்கூடியதாக உயர்ந்து விளங்கியிருந்தது. உத்தர கயிலா யத்திலே கயிலாயபதியும் உமாபிராட்டியாரும் வீற்றிருப்பது போலத் தெட்சணகயிலாயமாகிய திருக்கோணேஸ்வரத்திலே கோணேசப்பெருமானும் மாதுமையம்பாளும்' அமர்ந்திருந்தார் கள். கருவறையிலே அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத் திருமேனி (பாணலிங்கம்) பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது.

கோணேசர்மலையின் அடிவாரத்தில் ஆழ்கடலின் அடியில் ஆராய்ச்சி செய்த திரு. மைக் வில்சன், சேர் ஆதர் சி. கிளாக் என்னும் ஆய்வாளர்கள் கடலிலிருந்து ஒரு லிங்கத்தை வெளிக் கொணர்ந்தார்கள். ஊனப்பட்ட அந்த லிங்கம் கோணேஸ்வ ரத்தில் இப்பொழுதும் இருக்கின்றது. இந்த லிங்கம் போர்த்துக் கீசர் கோணேசர் கோவிலை இடித்தழித்தபோது கடலில் தள்ளி விடப்பட்ட லிங்கமாயிருக்கலாமென ஊகிக்கப்படுகின்றது. போர்த்துக்கீசர் கோணேசர் கோவிலை அழிப்பதற்கு முன்னி ருந்த கோணேஸ்வரம் பற்றி இதுவரை கூறியிருந்தேன்.

**''நம்பிக்கை ஏற்படுவது கஷ்டமாக இருக்கலாம். ஆனால்
நம்பிக்கையின் அவசியத்திலிருந்து மட்டும் நாம் தப்ப
முடியாது''**

**(தத்துவ கலாநிதி - ராதாகிருஷ்ணன்)**

போர்த்துக்கீசர் கோணேசர் கோவிலை அழிக்க வருவதை யறிந்து அங்கிருந்த அந்தணர்களும், அடியார்களும், பக்தர் களும், தொழும்பாளர்களும் ஆலயத்திலிருந்த தாமிரவிக்கிரகங் களை எடுத்துச்சென்று நிலத்திலும், குளங்களிலும், வேறுவேறு இடங்களிலும் போர்த்துக்கீசரின் கையில் அகப்படாத வகையில் திருவருட் செயலால் மறைத்துவைத்துவிட்டார்கள். அவ்வாறு மறைத்துவைக்கப்பட்ட திருவுருவங்களில் பிள்ளையார், கோணே சர், மாதுமையம்பாள், சந்திரசேகரர், போகசக்தியாகிய அம் பாள், அஸ்திரதேவர், விளக்குமுடியில் பொருந்தவைக்கும் அன் னம் என்னும் தாமிரத் திருவுருவங்கள் தற்போது ஏகாம்பரம் வீதி எனப் பெயருடைய வடகரை வீதிக் கடற்கரையில் நக ராட்சி மன்றத்தின் வீடுகட்டுத் திட்டத்துக்காக கிணறு வெட் டும் போதும், வேறு வகையாலும் திருவருட் செயலால் 350 வருடங்களுக்கு மேலாக நிலத்தினுள் மறைந்திருந்து கி. பி. 1950 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27 ஆம் திகதி சைவமக்கள் செய்த தவப்பயனால் வெளிப்பட்டன.



தமிழ்நாட்டின் மாமல்லபுரத்திலுள்ள அரசினர் கட்டட சிற்பக்கலைக் கல்லூரியின் அதிபர் திரு. வை. கணபதி ஸ்தபதி அவர்கள் திருக்கோணேஸ்வரத்தைத் தரிசித்தபின்னர் என்னிடம் கையளித்த கட்டுரையை வாசகர்களின் கவனத்திற்குத் தருகிறேன்.

## ஈழநாட்டின் இணையற்ற ஆலயம்
## திருக்கோணேஸ்வரம்

தெய்வீகப் பெருமைகள் நிறைந்த ஆலயங்களைத் தெரிசனம் செய்வது எனக்கு ஆத்மத் திருப்தியை அளிக்கின்றது. ''மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே'' என்பது பெரியோர் வாக்கு. இந்த நோக்கத்தோடு பாரத நாட்டிலுள்ள சிவஸ்தலங்களை மாத்திரமல்ல பல்வேறு ஆலயங்களையும் தரிசித்த பின்னர் ஈழ நாட்டுக்கு வந்தேன், ஈழநாட்டின் கிழக்குக்கரையிலே கோயில் கொண்டருளியுள்ள கோணநாயகரைத் தரிசனம் பண்ணினேன். அங்கு நான் கண்ட அற்புதங்களையும், கேட்டறிந்த உண்மைகளையும் ஈழத்து மக்களுக்கு எடுத்துக் கூறாமல் பாரதநாட்டுக்குச் செல்வதை என் மனச்சாட்சி ஒப்புக்கொள்ளவில்லை. அதனால் இக்கட்டுரையை திருக்கோணமலைக் கோணேசர்கோவில் பரிபாலன சபைச் செயலாளர் சைவப்புல்வர், பண்டிதர். இ. வடிவேல் அவர்களிடம் ஒப்படைத்துச் செல்கின்றேன்.

சோழ, பாண்டிய, பல்லவர் ஆட்சிக்காலத்தில் பாரதநாட்டின் தென்பாகத்தில் அற்புதமான பெருங் கற்கோயில்கள் எழுந்தன. அவைகள் சிற்ப நிறைவோடும், தெய்வீகப் பேரருட் செறிவோடும் இன்றும் சிறப்புற்று விளங்குகின்றன. அந்த ஆலயங்களின் வரலாறுகளை அவ்வத் தலபுராணங்களாலும், இதிகாசச் சான்றுகளாலும், கல்வெட்டுக்களாலும், அவ்வவ் விடங்களிலுள்ள மூர்த்திகளின் அமைப்பு முறைகளாலும் அறியக்கூடியதாயிருக்கின்றன.

அவற்றுடன் ஒப்புநோக்கும்போது திருக்கோணமலைக் கோணேசர் ஆலயமும், அங்கிருக்கும் மூர்த்திகளின் சிறப்பும் கல்வெட்டுக்கள் மூலமும், தலபுராணங்கள் மூலமும், இதிகாச வரலாறுகள் மூலமும் அறியக்கூடிய ஆதிவரலாறுகள் நெஞ்சை அள்ளும் சிறப்புடையனவாயிருக்கின்றன. ''குரைகடலோதம் நித்திலங் கொளிக்கும் கோணமாமலை'' என்று இத்தலத்தை ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஞானசம்பந்தப் பெருமான் தேவாரப் பதிகங்களால் பாடியிருக்கின்றார். சப்திக்கின்ற சமுத்

திரத்தால் சூழப்பட்ட ஓர் அழகிய குன்று கோணமாமலை யமர்ந்த கோவிலின் புனித ஆலயத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும் தனிச்சிறப்பை ஈழநாட்டில் திருக்கோணமலையிலன்றி வேறெங் குங் காணமுடியாது. அக்குன்றைச் சூழ்ந்துள்ள சமுத்திரத்தின் மேற்குக்கரையிலே நின்று அம்மலையைப் பார்ப்போமானால் அது ஒரு மனிதன் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கும் தோற்ற முடையதாகக் காணப்படும். அம்மலையின் அடிவாரத்தில் அமைந் திருக்கும் கோட்டையின் நுழைவாயில் பாதமாகவும் திருக்கோ வில் அமைந்திருக்கும் குன்றின் சிகரம் சிரமாகவும் காட்சியளிக் கின்றது. மனித தேகத்தின் அமைப்பை ஆதாரமாகக்கொண்டு ஆலயங்கள் அமைக்கப்படுகின்றன. ஆலய அமைப்புக்கென்று தனித்ததோர் சிற்ப சாஸ்திரமுறை இருக்கின்றது. இச்சாஸ்திர விதிகள் கோணேசர்மலையில் இயல்பாகவே அமைந்திருப்பது அற்புதத்திலும் அற்புதம். இந்த அற்புத மலையிலே சாஸ்தி ரோத்தமான ஆலயமொன்று மலையின் உச்சியில் அருட்பொலி வோடு விளங்குகின்றது.

பரவெளியாகிய ஆகாயம் சமுத்திராதேவியைத் தாங்கிநிற்க, சமுத்திராதேவியானவள் கோணமாமலையைத் தாங்கி நிற்க, கோணமாமலையானது கோணநாயகர் ஆலயத்தைத் தாங்கி நிற்க, அற்புதமான ஆலயமானது கோணநாயகப் பெருமானின் திருவுருவத்தைத் தாங்கி நிற்க, கோணநாயகப் பெருமான் அண்டசராசரங்கள் அனைத்தையும் தன்னுள்ளடக்கி அமர்ந் திருக்கும் அற்புதத் திருக்கோலக் காட்சியை கோணேஸ்வரத்தி லன்றி வேறெந்தத் தலத்திலும் காணமுடியாதென்பதை உள்ளத் தின் நிறைவோடு கூறிவைக்க விரும்புகிறேன்.

மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிதென்று ஒரு பழமொழி கூறுவார்கள். தென்னாட்டுப் பெருங் கற்கோயில்களோடு ஒப்ப நோக்கும்போது கோணேசர் ஆலயம் சிறியதாய்த் தோன்றி னாலும் ஆலயம் பரிபூரண சாஸ்திர நிறைவோடு அமைக்கப் பட்டிருக்கின்றது. அதுமாத்திரமல்ல அங்கு காணப்படும் அமைதி யும், அருட்பிரகாசமும் அகத்தைத் தொட்டுக் களிப்பூட்டுகின் றது. பல்லாண்டு பல்லாண்டு காலமாகச் சிவமணங் கமழ்ந்த க்ஷேத்திரமல்லவா? அதனால் சிவசாந்நித்தியம் பொலிந்து விளங்குகின்றது. இராவணன் இலங்கையை ஆண்ட காலம்முதல் இன்று வரையும் அது சிவபூமியாயிருந்து வருகின்றது, இடைக் காலத்தில் காலத்திற்குக் காலம் வேற்றாரின் தலையீடு ஈழ நாட்டில் இருந்து வந்ததெனினும் கோணேசர் ஆலயமும் அங் குள்ள மூர்த்தியும் வேற்றாரை உற்றாராகவே மாற்றியிருந்த தற்கு கல்வெட்டுக்களிலும், இதிகாச வரலாறுகளிலும் சான்று கள் காணப்படுகின்றன. கி. மு. 1624 ஆம் ஆண்டு மிலேச்சர்

களாகிய போர்த்துக்கீசர் ஆலயத்தை அழித்துச் சர்வநாசம் செய்தார்கள். மூர்த்திகளை அழிக்க முடிந்ததா? முன்னூற்றைம்பது வருடங்களின் பின் இதே பூமியில் கோணேசப் பெருமானின் திருவருட் செயலொன்று நிகழ்ந்ததை அறிய உள்ளம் பூரிக்கின்றது.

சோழர் பரம்பரையில் வந்த குளக்கோட்டு மன்னன் கோணமாமலையில் மாபெரும் ஆலயத் திருப்பணியை நிறைவேற்றிய பின்னர் ஈழத்தில் தனிச்சிறப்புடன் விளங்கிய கோவிலைப் போர்த்துக்கீசர் அழித்தார்கள். அப்போது ஆலயத்திலிருந்த திருவுருவங்கள் மிலேச்சர்களின் கைக்கெட்டாவகையில் சைவ அடியார்களால் நிலத்தில் மறைத்து வைக்கப்பட்டன. இப்போதிருக்கும் ஆலயத்தைச் சைவமக்கள் கட்ட முயற்சிக்கும்போது முன்னர் மறைத்து வைக்கப்பட்டிருந்த திருவுருவங்கள் கோணேஸ்வரத்திற்கு மேற்கே கடற்கரையோரமாக கிணறு வெட்டும்போது கண்டெடுக்கப்பட்டன. இத்திரு உருவங்களை மக்கள் கண்டெடுத்தார்கள் என்று கூறுவதிலும் பார்க்கத் திருவுருவங்கள் இறைவன் திருவருளால் தானாகத் தோன்றின என்று கூறுவது சாலப் பொருத்தமாயிருக்கும் எனக் கருதுகின்றேன்.

இந்தியாவிலுள்ள தென்னாட்டுத் திருக்கோவிற் திருவுருவங்களோடு இத்திருவுருவங்களை ஒப்ப நோக்கும்போது இத்தகைய திருவுருவங்கள் தென்னாட்டிலும் மிக அரிதாகவே காணக் கிடைக்கின்றன. கோணேஸ்வரத்திலுள்ள கணபதி திருவுருவம் தனித்தன்மை உடையது. சோழர்காலச் சிற்பமுறையே அதில் காணப்படுகின்றது. சோமாஸ்கந்த மூர்த்தம் மிகவும் அற்புதமானது. குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும், இவ்வுருவத்திற்குத் தனிச் சிறப்பைக் கொடுக்கின்றது. சிற்ப சாஸ்திர முறைப்படி பதினொரு தேவாங்குலம் உயரமுடையதாகக் காணப்படுகின்றது. உமாதேவியாரின் உருவம் இறைவனுடைய தோற்றத்திற்குப் பொருத்தமாக அமைந்திருக்கின்றது. இவைகட்குப் பொருத்தமான கந்தன் கிடைக்காதது துரதிர்ஷ்டம் என்றே சொல்லலாம். அகத்தியர் சிற்ப சாஸ்திரமும், சிற்ப ரத்தினமும் கூறும் இலக்கணங்கள் யாவும் ஒருங்கே இத்திருவுருவங்களில் அமைந்திருக்கின்றன.

இந்தத் திருவுருவங்களை அமைக்கும் முறை பற்றி ''சிற்ப ரத்தின'' என்ற நூலில் கூறப்பட்டிருப்பதாவது:

**சுகாசன மூர்த்தி**

சிற்ப ரத்தின என்ற நூல்தான் சிற்ப சாஸ்திரிகள் எடுத்துக் காட்டும் சாஸ்திர ஆதாரங்களுள்ள மிகச் சிறந்த நூல். சுகா

சன மூர்த்தி, இருந்தபடி இருக்கும். நான்கு கைகளும், மூன்று கண்களும் அழகான ரஜோகுணத் தோற்றமும், சிவந்த நிறம், நிமிர்ந்த இருக்கை கொண்டது. இடது கால் மடித்து ஆசனத்தின் மேலும், வலது கால் தொங்கவிட்ட நிலையில் ஆசனத்தின் கீழ்ப்பாகம் வரை இருக்கும். புலித்தோலும், பட்டு வஸ்திரமும் தரித்திருப்பார். பின்பக்கமுள்ள வலது கையில் பரசு. பின்பக்கமுள்ள இடது கையில் மான். முன்பக்கமுள்ள வலது கரம் அபயம். முன்பக்கமுள்ள இடது கரம் வரதமாக இருக்கலாம். அல்லது சிம்மஹர்ண தோற்றமுடையதாயிருக்கலாம். வலது காது மகர குண்டலம். அல்லது சிம்ஹ குண்டலம். இடது காதில் பத்ரகுண்டலம் அல்லது விருத்த குண்டலம் இரு காதிலும் இருக்கலாம். தலை ஜடாமகுடம் தரித்ததாயும், புஜங்களில் கங்கணம் அல்லது பாம்பணி (சர்ப்பகங்கணம்) மார்பில் யக்ஞோபவீதம். இத்துடன் வேறு ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்படலாம். தேவியோ கந்தரோ பக்கத்தில் அமர்ந்திருக்கலாம்.

மேலே குறிக்கப்பட்ட விளக்கங்களில் சிறு அமைப்பு வித்தியாசமாகப் பூர்வ காரணாகமத்தில் விளக்கிக் கூறப்படும். அதாவது வலது கால் மடித்தபடி பீடத்தில் இருக்கவும் இடதுகால் தொங்கவிட்டபடியும் இருக்கும். அதே ஆசனத்தில் உமாதேவி இருந்து இறைவனைப் பார்த்துக்கொண்டிருந்தால் உமாசகித மூர்த்தியாகும். சிவனுக்கு இடப்பக்கம் அமர்ந்திருக்கவேண்டும்.

தேவிக்கு இரண்டு கரங்கள் தான் இருக்கவேண்டும். வலதுகையில் தாமரைப்பூ இருக்கும். இடது கரம் சிம்மஹர்ண நிலையில் அல்லது பீடத்தில் ஊன்றியபடி இருக்கலாம். தலையில் கரந்த மகுடம் இருக்கும். இடது கால் தொங்கியபடியும், வலது கால் பீடத்தின் மேல் மடித்து அமர்ந்திருக்கும்.

இறைவியின் வலது கையில் உற்பலமலரும், இடதுகை வரதமுமாயிருக்கும், அல்லது இடதுகை பீடத்தில் ஊன்றியபடியிருக்கலாம். தேவியின் நிறம் பச்சை. எல்லா ஆபரணங்களும் அணிந்திருக்குமென்று சிற்ப ரத்தினத்திற் கூறப்பட்டுள்ளது. இறைவனுடைய தோள் உயரத்தில் தேவியின் உயரம் இருக்கவேண்டும். மேலே கூறிய விளக்கத்தின்படி ஒரே ஆசனத்தில் இருப்பது தான் உமாசகித மூர்த்தி எனப்படும்.

## சோமாஸ்கந்த மூர்த்தி

சுகாசன மூர்த்திக்குரிய அமைப்போடு நடுவிலே ஸ்கந்தன் சேர்ந்திருந்தால் அது சோமாஸ்கந்த மூர்த்தி. கந்தன் நிற்கலாம், ஆசனத்தில் இருக்கலாம், அல்லது உமாதேவியின் மடியில் இருக்



குளக்கோட்டு மன்னன் திருப்பணிகள் செய்த ஸ்ரீ லெட்சுமி நாராயணர் கோவில்
கி. பி. 1624 இல் போத்துக்கீசர் கோவிலை அழிப்பதற்கு முன்னிருந்த தோற்றம்.



குளக்கோட்டு மன்னன் திருப்பணிகள் செய்த மாதுமை அம்பாள் கோவில்
கி. பி. 1624 இல் போத்துக்கீசர் கோவிலை அழிப்பதற்கு முன்னிருந்த தோற்றம்.

கலாம், அல்லது நடனமாடிய தோற்றத்துடன் நிற்கலாம். கந்தன் ஒரு முகத்தோடு, இரண்டு கைகள், இரண்டு கண்கள், கரந்தமகுடம், காதுகளில் மகர குண்டலம், உடம்பில் சந்நவீர ஆபரணம் இருக்கும். நின்ற நிலையில் அமைத்தால் வலதுகையில் தாமரைப்பூ வைத்திருந்து இடது கையைத் தொங்கவிட்ட நிலையில் இருக்கலாம். அல்லது இரண்டு கைகளிலும் தாமரைப்பூ வைத்திருக்கலாம்.

சிற்பரத்தின நூல் கூற்றின்படி, ஸ்கந்தன் இடதுகை வரதம் அல்லது சிம்மஹகர்ண நிலையிலும் வலது கையில் ஒரு நூலைத் தாங்கியபடியும் இருக்கலாம். உடம்பில் வஸ்திரங்கள் இருக்கக் கூடாது. நடன நிலையில் இருந்தால் இடது கையில் பழமும் வலதுகை சுகிநிலையும் இருக்கும். அல்லது இடது கையில் பழம் இல்லாமல் நீட்டிய நிலையிலும் இருக்கலாம். ஸ்கந்தன் இறைவியின் மடித்துவைத்துள்ள கையுயரம் அல்லது இறைவியின் மார்பளவு உயரம் இருக்கலாம்.

திருக்கோணேஸ்வரத்திலுள்ளது போன்ற திருவுருவங்கள் தென்னாட்டிலே நெல்லூரிலும், மேட்டூரிலும்தான் காணப்படுகின்றன. ஈழநாட்டு மக்களுக்கு கோணேசர் கோவிலில் உள்ள இத்திருவுருவங்கள் கிடைத்தது பெரும் பேறு என்றே சொல்ல வேண்டும். உள்ளத்தை விட்டு மறையாத கலையழகும், தத்துவச் சிறப்புமுடைய இத்திருவுருவங்கள் தியான மூர்த்தியாகக் கோணேஸ்வரத்தில் எழுந்தருளியிருக்கின்றன. இத்திருவுருவங்களோடு அதற்குரிய போகசக்தியும் கிடைத்திருப்பது அற்புதத்திலும் அற்புதம். போகசக்தியின் திரிபங்கவடிவம் மிக்க கவர்ச்சிகரமானது. உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றது. இவற்றை வழிபடும் பேறுபெற்ற ஈழநாட்டு மக்கள் மாதவம் செய்தவர்கள் என்றே கூறவேண்டும்.

''எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்'' என்று ஞானசம்பந்தப் பெருமான் பாடிய தேவாரத்தில் இலங்கேசன் இராவணன் கைலையங்கிரியை எடுத்த கதை கூறப்படுகின்றது. அதனை மெய்ப்பிப்பதுபோல கோணேஸ்வரத்தில் ''இராவணன் வெட்டு'' என்ற இடமும் உண்டு. இராவணன் தனது தாயாருக்கு அந்தியக் கிரியைகள் செய்த இடமாகக் கருதப்படும் கன்னியாய் வெந்நீரூற்றுக்களும் கோணேஸ்வரத்தோடு தொடர்புடையன. இராவணன் இலங்கையை ஆண்ட காலம் முதல் இன்றுவரையும் ஈழநாட்டிலுள்ள திருக்கோணேஸ்வரம் செம்மை சான்ற சிவநெறிக்குரிய இடமாக இருந்துவருகின்றது.

இந்தியாவிலுள்ள குடுமியாமலைக் கற்சாசனம் திருக்கோணேஸ்வரத்தைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளைக் கூறுவதால் பண்டைக் காலத்தில் கோணேஸ்வரமும் பாரதநாடும் சமய, கலாச்சாரத் தொடர்புகளால் நெருங்கி இணைக்கப்பட்டிருந்தன என்பது வெளிப்படை. தமிழ்நாட்டு மன்னர்கள் ஈழநாட்டை வெற்றிகொண்டு நாடாண்டது மாத்திரமல்லாமல் ஆலயங்களை அமைத்துப் பரிபாலித்து வந்திருக்கின்றார்கள். என்பதைக் கோணேசர் கல்வெட்டிலும், இதிகாச வரலாறுகளிலும் அறியக்கூடியதாயிருக்கின்றது. புவனேக வீரபாண்டியன் கோணேஸ்வரத்தைப் பரிபாலித்தமைக்குச் சான்றாக இருகயல் இலச்சினையைப் பொறித்துள்ளான். அதனை இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றது. இவைகளையெல்லாம் சிந்திக்கும்போது சைவமக்கள் கோணேஸ்வரத்தையும், அங்குள்ள மூர்த்திகளின் சிறப்பையும் உணர்ந்து பேரானந்தம் அடைவார்கள் என்பதற்குச் சந்தேகமேயில்லை.



## கோணேஸ்வரத்தின் வண்மை

உலகப் பிரசித்திபெற்ற இந்த உருவத் திருமேனிகளில் சிவன் (கோணேசர்) சுகாசன மூர்த்தியாக அபயம் வரதங்களோடு சிம்ம முத்திரை காட்டி மானும் மழுவும் தாங்கிய சதுர்ப்புஜங்களை உடையவராக வலது திருவடியைத் தொங்கவிட்டு பத்ம பீடத்தில் அமர்ந்திருக்கிறார். பார்வதி (மாதுமையம்பாள்) சுகாசன மூர்த்தமாக லோலஹஸ்த முத்திரை காட்டி மறுகரத்தில் நீலோற்பல மலர்தாங்கிய துவிபுஜங்களோடு பத்மபீடத்தில் அமர்ந்திருக்கிறார். இத்தகைய அமைப்பை வேறு எங்குமே காண்பதரிது. இந்தியாவில் நெல்லூரிலும், மேட்டூரிலும் இந்த அமைப்போடுள்ள திருவுருவங்கள் காணப்பட்டபோதிலும் அவைகள் ஒரே பீடத்தில் இருப்பதையும், அம்பாள் இடக் கரத்தை ஆசனத்தில் ஊன்றியபடி இருப்பதையும் காணலாம். கோணேஸ்வரத்திலுள்ள திருவுருவங்கள் தனித்தனிப் பீடத்தில் அமர்ந்திருக்கின்றன.

சிவஸ்தலங்கள் எல்லாவற்றிலும் சோமாஸ்கந்த மூர்த்தம் இருக்கும். அந்த மூர்த்தங்களை அவ்வத் தலத்து இறைவன் பெயரால் சுட்டி வழிபடுவார்கள். அவ்வாறே கோணேஸ்வரத்திலுள்ள சோமாஸ்கந்த மூர்த்தியை மாதுமையம்பாள் சமேத கோணேசர் என்றே வழிபடுவர். இங்கு எழுந்தருளியுள்ள மாதுமையம்பாள் சமேத கோணேசருக்கு மற்றும் ஒரு சிறப்புண்டு. சிவ க்ஷேத்திரங்களுக்குத் தேவார முதலிகள் மூவரும் திருமுறைகள் பாடியிருக்கிறார்களல்லவா? அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய தேவாரங்களில் திரிகோணமலைத் தேவாரத்தில் மாத்திரம்தான் ஒவ்வொரு பாடலின் முடிவிலும் ''கோணமாமலை அமர்ந்தாரே'' என்று பாடப்பட்டிருக்கின்றது. உத்தர கயிலையில் அமர்ந்திருப்பதுபோலத் தெட்சணகயிலையிலும் இறைவன் அமர்ந்துள்ளாரென்று திருஞானசம்பந்தர் பாடியுள்ளார். உத்தரகயிலையின் சிகரங்களிலொன்று தெட்சணகயிலாயமாகிய திருக்கோணமலை என்னும் புராண வரலாற்றையும், (செவ்வந்திப்புராணம்) திருமூலநாயனார் வட கயிலையையும், தென்கயிலையையும் (இலங்கை) சாஸ்திர ரீதியாக இணைத்துக் காட்டிய உண்மையினையும் ஞானசம்பந்தரின் வாக்கு உறுதிப்படுத்துகின்றது.

இத்தகைய கோணேஸ்வரத்தின் இயற்கை அமைப்பையும், வரலாறுகளையும் தெட்சணகயிலாய மகாத்மியம், தெட்சண

கயிலாய புராணம், திரிகோணாசலபுராணம், திரிகோணமலை அந்தாதி முதலிய பழைய நூல்கள் விதந்து கூறுகின்றன. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் பாடியருளிய தேவாரத்தில் ''கொடிதெனக் கதறும் குரைகடல் சூழ்ந்து கொள்ளமும் நித்திலம் சுமந்து குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றும் கோணமாமலை'' என்றும், ''விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை வேங்கை வண்செருந்தி செண்பகத்தின் குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ் கோணமாமலை'' என்றும், ''துன்றுமொண் பௌவம் மௌவலும் சூழ்ந்து தாழ்ந்துறு திரைபல மோதிக் குன்றுமொண் கானல் வாசம்வந் தூலவும் கோணமாமலை'' என்றும், ''கரைகெழு சந்தும் காரகிற் பிளவும் அளப்பரும் கனமணி வரன்றிக் குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்கும் கோணமாமலை'' என்றும், ''தெளித்து முன்னரற்றும் செழுங்கடற் தரளம் செம்பொன்னும் இப்பியும் சுமந்து கொழித்து வன்திரைகள் கரையிடைச் சேர்க்கும் கோணமாமலை'' என்றும் கோணமாமலையின் இயற்கை எழிலை விதந்து கூறுகின்றார்.

அன்றியும் இறைவனானவர் ''கடிதெனவந்த கரிதனை உரித்து அவ்வுரி மேனிமேல் போர்த்ததையும்'', ''மேரு வெஞ்சிலையாய்க் குனித்ததையும்'', ''மதனனைப் பொடியாய் விழித்ததையும்'', ''பரிந்து நன்மனத்தால் வழிபடு மாணி தன்னுயிர்மேல் வரும் கூற்றைத் திரிந்திடா வண்ணம் உதைத்ததையும்'', ''எடுத்தவன் தருக்கை விரலால் இழித்ததையும்'', ''வேள்வி தடுத்ததையும்'', ''வெண்தலை ஏந்தி அகந்தொறும் பலியுடன் புக்கதையும்'', ''பெருங்கடல் வண்ணன் பிரமன் இருவரும் அறியா வண்ணம் ஒள்ளெரியாய் உயர்ந்ததையும்'', திருஞானசம்பந்தர் கோணேசப் பெருமான் மேலேற்றித் தேவாரம் பாடியமை கோணேசப் பெருமான் அட்டவீரட்ட மூர்த்தியாய் இங்கு எழுந்தருளியிருப்பதைக் குறிக்கின்றது.

திருக்கோணேஸ்வரத்தின் இயற்கை அழகும், கோணேசப் பெருமானின் திருவருட் செயல்களும் திருக்கயிலாயத்தின் இயற்கை எழிலுக்கும், கைலாசபதியின் திருவருட் செயலுக்கும் ஒப்பாக இருந்த காரணத்தினால் பண்டைக் காலத்தில் வட இந்திய யாத்திரிகர்கள் இந்தத் தெட்சணகயிலாயத்தை நோக்கி யாத்திரை செய்துவந்திருக்கிறார்கள். இச்சம்பவத்தைக் குறிப்பிட்டுப் போர்த்துக்கீச சரித்திர நூலாசிரியராகிய டி. குவைறோஸ் பாதிரியாரவர்கள் ''பூரி ஜெகந்நாத்திற்கும், இராமேஸ்வரத்திற்கும் போய்த் தெரிசனம் செய்துவரும் யாத்திரிகர்களி

லும் பார்க்க மிக அதிகமானோர் இவ்வாலயத்தைத் தரிசித்து வருகின்றார்கள்.'' என்று தமது நூலில் எழுதியிருப்பது கவனிக்கத்தக்கது.

வடநாட்டு யாத்திரிகர்களின் கவனத்தைக் கவரக் காரணமாயிருந்ததென்ன? திருக்கோணேசர் ஆலயம் உலகிலுள்ள வழிபாட்டுத் தலங்களுள் மிகவும் பழமையானதொன்று எனவும், திருக்கோணமலை நாகரீகமும் மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரீகமும் ஒரே காலத்தன எனவும், கடல் கோள்களால் அழிந்துபோன லெமோறியாக் கண்டத்தின் எஞ்சிய தரைப்பகுதிகளில் இலங்கையுமொன்று எனவும் முன்னர் குறிப்பிட்டிருந்தேன். திராவிட நாகரீகத்தின் பிறப்பிடமான லெமோறியாக் கண்டம் கடலுள் மூழ்குவதற்கு முன் திராவிட மக்களின் சமயக் கோட்பாடுகள் சிறந்து விளங்கிய காலத்தில் கடலுள் மூழ்கிய குமரிக் கண்டத்தின் பல பாகங்களிலும் சிவக்ஷேத்திரங்கள் பல இருந்தன. இந்தச் க்ஷேத்திரங்களுக்கு இந்தியாவின் வடக்கேயிருக்கும் ஆஸ்திகப் பெருமக்கள் யாத்திரை செய்துவந்திருக்கிறார்கள். லெமோறியா கடலுள் மூழ்கிய பின்னும் அந்தப் பாரம்பரியப் பழக்க வழக்கங்களை அவர்கள் கைவிடவில்லை. இதனால்தான் இன்றும் எண்ணற்ற வட இந்திய யாத்திரிகர்கள் வடக்கேயிருந்து இராமேஸ்வரத்துக்குத் தெரிசனம் செய்ய வந்துகொண்டிருக்கிறார்கள். காசி, பூரி, காஷ்மீர் முதலிய இடங்களிலுள்ள வட இந்திய யாத்திரிகர்கள் பத்திரிநாத், கேதாரநாத், அமரநாத், கயிலை முதலிய சிவஸ்தலங்களுக்குப் போய் வழிபாடு செய்து அங்கிருந்து கங்கா, ஜமுனா முதலிய புனித தீர்த்தத்தை எடுத்து வந்து இராமேஸ்வரத்தில் இராமலிங்கப் பெருமானுக்கு அபிஷேகம் செய்து, இராமேஸ்வரத்திலிருந்து புனித மண்ணை எடுத்துச் சென்று கேதாரநாத், பத்திரிநாத், பூரி, காசி முதலான இடங்களிலுள்ள சிவலிங்கப் பெருமானுக்கு மண்ணினால் அபிஷேகம் செய்யும் வழக்கம் இன்றும் நடைபெற்று வருகின்றது. இந்த வழக்கம் பண்டைக் காலத்தில் உத்தரகயிலைக்கும் தெட்சணகயிலைக்குமிடையில் வட இந்தியர் ஆன்ம யாத்திரை செய்து வந்த வழக்கத்தைத் தொடர்ந்து ஏற்பட்டிருக்கலாம்.

**''நம்பிக்கை ஏற்படுவது கஷ்டமாக இருக்கலாம் ஆனால்
நம்பிக்கையின் அவசியத்திலிருந்து மட்டும் நாம் தப்ப
முடியாது''**

# குளக்கோட்டு மன்னனும் திருப்பணிகளும்

ஆஸ்திக மக்களின் கவனத்தையீர்த்த புனிதக்ஷேத்திரமாகிய திருக்கோணேஸ்வரம் குளக்கோட்டு மன்னனின் திருப்பணிக்குப் பின் புதுப்பொலிவைப் பெற்றதை முன்னர் சிறிது கூறியிருந் தேன். இந்தக் குளக்கோட்டு மன்னன் யார்? யாருடைய பரம் பரை? அவனுடைய இயற்பெயர் என்ன? எக்காலத்தில் வாழ்ந் தான்? என்ற கேள்விகளுக்கு விடை காண்பதில் வரலாற்றாசிரி யர்கள் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

கோணேசர் கோவிலை இடித்தழித்த போர்த்துக்கீசத் தள பதி எழுதியுள்ள குறிப்பின்படி இக்கோவில் கி. மு. 1300 வரு டங்களுக்கு முன் மனுராசாவினால் கட்டப்பட்டதென முன்னர் கூறியிருந்தேன். மனுராசா என்பது மனுநீதி கண்ட சோழ மன்னனாயிருக்கலாம். இவனுடைய பரம்பரையில் வந்தவர் வரராமதேவன் என்பதும் அவனுடைய மகன் குளக்கோட்டு மன்னன் என்பதும் பரவலாக அறியப்பட்டு வந்திருக்கின்றது. புராணங்களும், கல்வெட்டுக்களும் இதற்கு ஆதாரமாயிருக்கின் றன,

''சோழநாட்டிலே திருவாரூரிலே மனுநீதி கண்ட சோழன் மரபிலுதித்த சூரியகுலோத்துங்க ஸ்ரீவரராமதேவ சோழமகா ராசாவின் புத்திரரான பாலசிருங்க மகாராசாவாகிய குளக் கோட்டு மகாராசா கலியப்தம் 512 நிகழுங் காலத்தில் இலங்கா புரியில் திருக்கோணேஸ்வரம் ஆலயத்தை வந்தடைந்தார். அங்கு ஆலய தரிசனம் செய்தும், ஆலயத்தைப் புதுப்பித்தும் 2700 அவணம் நெல் விதைப்பதற்கேற்ற விளை நிலங்களை அமைத்தும் அதற்கு நீர் பாய்ச்சுவதற்காக கந்தளாய்க் குளத்தைக் கட்டி நீர் வினியோகிக்கும் சூத்திரமும் அமைத்து அடங்காப்பற்று என்னும் கிராமங்களை அமைத்து மக்களைக் குடியேற்றி வன்னி மைகளை நியமித்து நிர்வகித்து குடிமக்களைக் கொண்டு வேலை செய்வித்துத் தன்னாடு திரும்பினான். கி. பி. 593 ஆம் ஆண்டு ஏழு வன்னிமைகள் சேர்ந்து தலைமைதாங்கித் திருக்கோணமலை வட்டகையை ஆண்டனர். அவர்கள் நிர்வகித்து வருங் காலத் தில் அக்கிரபோதி இங்கு விஜயம்செய்து இவர்களைத் தன்னாதிக் கத்தின் கீழ் கொண்டுவந்தான் என்பது யாழ்ப்பாணச் சரித்திரம் 11 ஆம் பக்கத்தில் காணப்படுகின்றது'', என்பதை திரு. மு. சு. சிவப்பிரகாசம் அவர்கள் ''விஷ்ணுபுத்திர வெடியரசன் வர

லாறு'' என்ற நூலில் எழுதியுள்ளார். மேற்கூறிய நூலுக்கு மதிப்புரை வழங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் கலாநிதி சி. பத்மநாதன் அவர்களும், தமிழ் விரிவுரையாளர் கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்களும் மேற்கூறிய வரலாறுகளுக்கு ஒப்புதல் கொடுத்திருப்பதும் கவனிக்கத்தக்கது.

மேலே கூறப்பட்ட வரலாற்றினால் குளக்கோட்டு மன்னனுடைய இயற்பெயர் ''பாலசிருங்க மகாராசா'' என்பது பெறப்படுகின்றது.

''என்றனைய திருமேனி இராமதேவனும் மகிழ்ந்து
நின்றரன்பால் விடைகொண்டு நெடிய கடல் கடந்தேகி
கன்றமைந்த கரத்திருமால் கமல னிமையோர் முனிவர்
குன்றமுற்ற பெருமானைக் குரைகழற்கால் தொழுதனரே''

(தெ. க. பு. திருநகரச் சருக்கம். 47)

குளக்கோட்டு மன்னனுடைய தந்தை பெயரை இராமதேவன் என்று தெட்சணகயிலாய புராணம் கூறுகின்றது. இது அச்சுப் பிழையாகவுமிருக்கலாம். இப்பெயரை வரராமதேவன் என்று கல்வெட்டுக்களும் ஏனைய நூல்களும் கூறுவதை ஆய்வாளர்கள் அவதானிப்பார்களாக. சிறப்புமிக்க கோணேசர் கோவிலையும், கந்தளாய்க் குளத்தையும், அமைத்த காரணத்தால் குளக்கோட்டு மன்னனுடைய இயற்பெயர் மறைந்து குளமும் கோட்டமும் (கோவில்) கொண்ட காரணத்தால் குளக்கோட்டன் என்ற காரணப் பெயர் நிலைத்துவிட்டது.

கோணேசர் கோவில் திருப்பணிகளைச் செய்துமுடித்து குளக்கோட்டு மன்னன் தனது காலத்திற்குப் பின்னே ஆலயத்தில் நித்திய நைமித்திய கருமங்கள் குறைவின்றி நடைபெறுவதற்காக அல்லைக்குளம், வெண்டரசன்குளம் என்பனவற்றைக் கட்டுவித்து அவற்றைச் சூழ்ந்துள்ள காடுகளைத் திருத்தி விளைபூமிகளை உண்டாக்கினான். இக்குளங்களின் நீர் விளைபூமிகளுக்குப் போதியதாக இல்லாததால், உன்னாச்சிகிரியிலிருந்து அரசாண்ட ஆடகசவுந்தரியின்தும் அவளுடைய அமைச்சன் மதியூகியின்தும் உதவியைப் பெற்றுக் கத்தளாய்க் குளத்தைக் கட்டினான்.

''மதிமிக்குளதா மந்திரி தன்னை மனுவேந்தன்
துதிபெற்றிடு மிக்குள மிவ்ணீ தொட்டது கோணைப்
பதியுற்றிடு மெங்கோனருள் ளென்னாப் பலபேசி
அதிநட்பொடு மற்றவனை வியந்தன் புறுமெல்லை''

(திருக்குளங்கண்டபடலம். 80)

என்று திரிகோணாசல புராணம் கூறுகின்றது. மனுவேந்தன் என்பது குளக்கோட்டு மன்னனை.

சோழவம்சத்தவனாகிய மனுநேய கயவாகு மன்னன் தென்னிலங்கையின் பெரும் பகுதியை அரசாட்சி செய்த வரலாற்றினைத் திரிகோணாசல புராணம் கூறுகின்றது. உன்னாச்சிகிரி என்னும் இடத்திலிருந்து ஆட்சிபுரிந்த அம்மன்னனுடைய சுவீகார புத்திரி ஆடகசவுந்தரி. மன்னன் இறந்தபின் ஆடகசவுந்தரி ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்திவந்தாள்.

''பரிதிதன் மரபினுற்ற பார்த்திபன் இறந்த பின்னர்
அரிதவன் மகளாய்ப் போற்றும் ஆடகசவுந்தரிப்பேர்
விரைமலர்த் திருவையன்னாள் வியனர சுறுப்புத் தாங்கி
வரிசையிற் குயிற்றுஞ் செம்பொன் மாமணித்
தவிசினுற்றே''.

என்று திரிகோணாசல புராணம் திருக்குளங் கண்டபடலம் 18 ஆம் பாடல் கூறுகின்றது. கிழக்கு மாகாணத்தின் தென்கோடியிலிருக்கும் திருக்கோவில் என்ற ஊரிலுள்ள ஆலயத்திலிருந்த செப்பேட்டில் ஆடகசவுந்தரி உன்னாச்சிகிரி என்ற இடத்தை இராசதானியாகக்கொண்டு நாட்டை ஆண்டுவந்ததாகக் கூறப்பட்டிருந்ததென்றும் அவள் சிறு வயதில் சோழநாட்டிலிருந்து வந்து இறங்கிய இடம் பாணமை என்றும் ஏட்டில் இருந்ததாக அவ்வூரில் வாழ்ந்த முதியவர்கள் செவிவழிச் செய்தியாக அறிந்திருந்ததை என்னிடம் கூறினார்கள். உன்னாச்சிகிரி என்பது கிழக்கு மாகாணத்தின் தென்கோடியிலுள்ள உகந்தையிலிருந்து மூன்று மைல் தொலைவிலுள்ள ஓரிடம். அந்த இடத்தில் பிற்காலத்தில் சிங்களவர்களைக் குடியமர்த்தி இப்பொழுது அவ்வூர் வம்பரத்தளவாய் என்ற பெயரோடு விளங்குகின்றதென திருக்கோவிலிலுள்ள முதியவர்கள் கூறினார்கள்.

திருக்கோணமலையில் கந்தளாய் என்னுமிடத்தில் குளக்கோட்டு மன்னன் திருக்குளம் கட்டிய வரலாற்றில் ஆடகசவுந்தரியின் பங்களிப்பும் முக்கிய இடத்தைப் பெறுவதால், ஆடகசவுந்தரியின் வரலாற்றினைக் கூறவேண்டிய அவசியமேற்படுகின்றது.

## ஆடகசவுந்தரியின் வரலாறு

குளக்கோட்டு மன்னனுடைய வரலாற்றுடன் ஆடகசவுந்தரியின் வரலாறும் சேர்ந்திருப்பதை திருக்கோணாசலபுராண அகச்சான்றுகளால் அறியக்கூடியதாய் இருக்கின்றதென முன்னர்க் குறிப்பிட்டோம். திருக்கோணாசல வைபவம் என்ற

-நூலின் ஆசிரியர் ஸ்ரீமான் வே. அகிலேசபிள்ளை அவர்கள் ''ஆடகசவுந்தரி சரித்திரம்'' என்பதை உரைநடையாகக் கூறியிருக்கின்றார். அதனைச் சுருக்கமாகத் தருகின்றேன்.

ஆடகசவுந்தரி கலிங்க தேசத்தை ஆண்ட அசோகசுந்தரன் என்னும் அரசனுக்கும் மனோன்மணி சுந்தரிக்கும் மகளாகப் பிறந்தவள். சோதிடர்களின் கணிப்பின்படி இந்தக் குழந்தை பெண்ணாக இருந்தாலும் செங்கோலோச்சி நாட்டை ஆளக் கூடிய இராசயோகத்தில் பிறந்திருக்கின்றது. ஆனால் இந்த நாட்டை ஆளாது. பரதேசத்தில் ஆட்சிபுரியும். இக்குழந்தையை இந்த மாளிகையில் வைத்திருந்தால் அரசனுக்குப் பல கஷ்டங்கள் நேரிட்டு இராச்சியமும் அழியும், என்பதைச் சோதிடர்கள் கூறக்கேட்ட அரசன் அப்பிள்ளையைப் பேழையில் வைத்துக் கடலில் விட்டான். அந்தப் பேழை இலங்கையின் தென்கிழக்குக் கரையில் ஒதுங்கியது. அக்காலத்தில் அங்கு ஆட்சிபுரிந்துகொண்டிருந்த மனுநேயகயபாகு மன்னனுக்குப் பேழை பற்றிய செய்தியைக் கூறினார்கள். மன்னன் அங்கு சென்று பேழையை எடுத்துப் பார்த்தபோது உள்ளே ஓர் அழகான பெண் குழந்தை சிரித்துக்கொண்டிருந்ததாம். குழந்தை இல்லாத அந்த மன்னன் ஆர்வத்தோடு எடுத்துச்சென்று ஆடகசவுந்தரியெனப் பெயர் சூட்டி வளர்த்து வந்தான். குழந்தையைப் பேழையிலிருந்து எடுத்தபோது அக்குழந்தை பால்போல குறுநகை புரிந்ததாம். அதனால் அந்த இடத்துக்குப் பால்நகை என்று பெயரிட்டான் மன்னன். பால்நகை என்ற பெயர் காலக்கிரமத்தில் திரிபுபட்டு பானகை, - பாணமை என்று தற்காலத்தில் வழங்கிவருகின்றது.

ஆடகசவுந்தரி வளர்ந்து நாட்டை ஆளத்தக்க பருவம் அடைந்தபோது ஒருநாள் மனுநேயகயபாகு மன்னன் ஆடகசவுந்தரியை நோக்கி மகளே! எனக்குப் பின் இந்த இராச்சியத்தையேற்று மனுநீதி தவறாமல் அரசுசெய்து வருவாயாக என்று கூறினான். பின்பு விசித்திரயூகி எனப்படும் மந்திரியையும், ஆடகசவுந்தரியையும் அழைத்து, உங்களுடைய இராச்சியத்தில் பாரிய வேலைகளைச் செய்யத் தொடங்கும்போது அதனைச் செய்து முடிப்பதற்குப் பூதங்களை அழைத்து அப்பணிகளை நிறைவேற்றுவீர்களாக என்று கூறிப் பூதங்களை அழைக்கும் மந்திரத்தையும் உபதேசித்தான். மனுநேயகயபாகு இயற்கை எய்திய பின் ஆடகசவுந்தரி ஆட்சியை நடத்திவந்தாள் என்பது அந்த வரலாறு.

இதனைத் தொடர்ந்து குளக்கோட்டு மன்னன் கந்தளாய்க் குளம் கட்டிய வரலாற்றைத் ''திருக்குளச் சரித்திரம்'' என்றும்

ஆடகசவுந்தரியைக் குளக்கோட்டு மன்னன் திருமணம் செய்த வரலாற்றை ''குளக்கோட்டு மகாராசா மணம்புரிந்த சரித்திரம்', என்றும் இரண்டு சம்பவங்களைத் திருக்கோணாசல வைபவம் விரிவாகக் கூறுகின்றது.

கி. பி. 1853 ஆம் ஆண்டு பிறந்து ஐம்பத்தேழு வருடங்கள் திருக்கோணமலையில் வாழ்ந்து இயற்கை எய்திய சைவப் பெரியாரும், தமிழ் வளர்த்த சான்றோனுமாகிய திரு. வே. அகிலேச பிள்ளை அவர்கள் திருக்கோணமலை வரலாறுகளை ''திருக்கோணாசல வைபவம்'' என்னும் நூலாக எழுதி வைத்திருந்தார். இந்த நூலை நூலாசிரியரின் மகன் திரு. அ. அழகைக்கோன் அவர்கள் 1950 ஆம் ஆண்டு பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உன்னரசுகிரியிலிருந்து அரசு புரிந்த ஆடகசவுந்தரி அரசியின் உதவியுடன் குளக்கோட்டு மன்னன் கட்டிய கந்தளாய்க்குளம் கி. பி. 275 ஆம் ஆண்டில் கண்டியை அரசுசெய்த மகாசேனன் என்பவனால் ஒருமுறை பழுதுபார்க்கப்பட்டது. பின்பு (பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில்) கிரெகோரி கவர்ணர் காலத்தில் பாபர் (BARBER) என்னும் இஞ்சினியரால் 1878 ஆம் ஆண்டு பழுதுபார்க்கப்பட்டது என்னும் குறிப்பையும் நூலின் 19 ஆம் பக்கத்தில் கூறுகிறார்.

உன்னரசுகிரியை இராசதானியாகக்கொண்டு ஈழநாட்டின் கிழக்குப் பக்கத்தை ஆட்சிசெய்த பேரரசியாகிய ஆடகசவுந்தரியின் வரலாற்றைப் பற்றி ''மட்டக்களப்பு மான்மியம்'' என்ற நூலிற் காணப்படும் விஷயங்களைச் சுருக்கிக் கூறுகிறேன். திருக்கோணாசல வைபவம் ''உன்னாச்சிகிரி'' என்று குறிப்பிடும் இடப்பெயரை, மட்டக்களப்பு மான்மியம் உன்னரசுகிரி என்று கூறுகின்றது.

உன்னரசுகிரியை ஆண்ட மனுநேயகயபாகுவுக்கும் தம்பதி நல்லாளுக்கும் ஆடகசவுந்தரி வளர்ப்புப் பிள்ளை. பேழையிற் கிடைத்தபிள்ளை.

''சீர்கலி உதித்தகாலம் மூவாயிரத்து ஒருநூற்றி எண்பதாமாண்டில்
வாரணி சவுந்தரி அரியணை வகித்தபோதில்
பார்செழித் தோங்க மந்திரி அறுவரைப் பக்கமாக்கி
காரகன்றிடவே செங்கோலோச்சினள்.''

ஆடகசவுந்தரி கலிபிறந்து 3180 ஆம் ஆண்டு உன்னரசுகிரியிலிருந்து அரசாட்சி செய்தாளென்றும் மதியூகமுள்ள ஆறு அமைச்சர்களை அரச சபையில் வைத்திருந்து மனுநீதி தவறாமல் ஆண்டாளென்றும், மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது. மகாவித்துவான் எவ். எக்ஸ். சி. நடராசா அவர்கள் எழுதிய ''மட்டக்களப்பு மான்மியம்'' என்ற நூலிலும், மகாவித்துவான் பண்டிதர் - வீ. சி. கந்தையா அவர்கள் எழுதிய ''மட்டக்களப்புத் தமிழகம்'' என்ற நூலிலும் ஆடகசவுந்தரியைப் பற்றிய வரலாறுகள் பல்வேறு கோணங்களில் அவதானிக்கப்பட்டு விரிவாக எழுதப்பட்டுள்ளது. அவற்றின் பிழிவை மாத்திரம் எடுத்துக் கொள்வோம்.

மனுநேயகயபாகு மன்னனின் ஆட்சிக்குட்பட்டிருந்த திருக்கோவில், உகந்தை, பாணமை, தம்பிலுவில், பொத்துவில் முதலான இடங்களை உள்ளடக்கிய ஒரு மாவட்டத்தை உன்னரசுகிரி இராச்சியம் என்றும், மண்முனை, மட்டக்களப்பு, போரைதீவு, கொக்கட்டிச்சோலை முதலிய இடங்களை உள்ளடக்கிய மாவட்டத்தை மட்டக்களப்பு இராச்சியம் என்றும் வெருகல், தம்பைநகர், கொட்டியாபுரம், தட்சணாகிரி (திருக்கோணமலை) திரியாய், முதலிய இடங்களை உள்ளடக்கிய ஒரு மாவட்டத்தை திருக்கோணமலை இராச்சியம் என்றும் வகுக்கப்பட்ட மூன்று பெரும் பிரிவுகளை ஈழநாட்டின் கிழக்குப் பகுதி கொண்டிருந்தது. இந்த மூன்று மானிலங்களையும் மனுநேயகயபாகு மன்னன் ஆண்டுவந்தான். மன்னன் இயற்கை எய்திய பின் அவனுடைய வளர்ப்புப் பிள்ளையாகிய ஆடகசவுந்தரி உன்னரசுகிரியில் இருந்துகொண்டு மூன்று பெரும் மானிலங்களையும் ஆண்டு வந்தாள்.

இக்காலகட்டத்தில் வைதுலிக சைவன் ஒருவன் (குளக்கோட்டன்) தெட்சணாகிரியில் (திருக்கோணமலை) சிவாலயங்களைக் கட்டி அங்கு ஆட்சிக்கு அடிகோலுகிறான் என்பதை அறிந்து தனது முதல்மந்திரியை அழைத்து, மந்திரியாரே! நமது ஆட்சிக்குட்பட்ட தெட்சணாகிரியில் அன்னியனொருவன் நமது அனுமதியின்றிக் கட்டிய சிவாலயங்களை இடித்துக் கடலில் தள்ளி, அவனையும், அவன் துணைவரையும் அடித்துத் துரத்தி விட்டு வரும்படி ஆடகசவுந்தரி ஆணையிட்டாள். மந்திரியும், படைகளும் தெட்சணாகிரிக்குச் சென்று அங்கு ஆலயங்கட்டிய மன்னனைச் சந்தித்து ஆடகசவுந்தரியின் வரலாறுகளைக் கூறினான். அதனால் மன்னன் உன்னரசுகிரிக்குச் சென்று குலவரலாறுகளைப் பேசித் தங்களுக்குள் சமாதானமடைந்து மகாசேனன் (குளக்கோட்டன்) ஆடகசவுந்தரியைத் திருமணம்செய்து

ஆடகசவுந்தரியின் பூதப்படையின் உதவியுடன் கந்தளை ஏரி யைக் (கந்தளாய்க்குளம்) கட்டினான் என்று ''மட்டக்களப்பு மான்மியம்'' கூறுகிறது.

இந்தச் சம்பவத்தை வழிமொழிவதுபோன்று மகாவித்து வான்-பண்டிதர்-வீ. சி. கந்தையா அவர்கள் ''மட்டக்களப்புத் தமிழகத்தில்'' கூறுவதாவது, ஆடகசவுந்தரி உன்னரசுகிரியிலி ருந்துகொண்டு மட்டக்களப்பு, தெட்சணாகிரி முதலிய பிரதே சங்கள் அனைத்தையும் கலி 3180 (கி. பி. 78) தொடக்கம் ஏறக்குறைய 113 வருடங்கள் வரை ஆண்டாள் என்றும் நீண்ட காலமாகியும் இளமைப்பொலிவு குன்றாதவளாயிருந்த அவளது சீர் சிறப்புக்களையும், பெருமைகளையும் அறிந்த மகாசேனன் அவளோடு குலமுறை உறவுகொண்டு அவளை மணஞ்செய்து மீனேரியையும் (மின்னேரி) கட்டி தெட்சணாகிரிக் கோயிலையும் செப்பமுற அமைத்து அக்கோயிலுக்கு மானியமாக நெல்வயல் கள் பலவற்றையும் அளித்து அந்த வயல் நிலங்களுக்கு நீர் பாச்சுவதற்கென்று கந்தளை ஏரி (கந்தளாய்க்குளம்) என்னும் பெரிய குளத்தை ஆடகசவுந்தரியின் வசமிருந்த பூதப்படைகளின் துணையால் கட்டிமுடித்து நாடெங்கும் வைதூலிக சமயம் வளர்த்துச் சிறப்புற ஆண்டான். அவனே குளக்கோட்டு மன்ன னாக இருக்கலாமென்று தெரிகிறது. ஆடகசவுந்தரிக்கும் மகா சேனனுக்கும் (குளக்கோட்டன்) பிறந்தவன் சிங்ககுமாரனா வான் என்று கூறுகிறது மட்டக்களப்புத் தமிழகம்.

ஆடகசவுந்தரி இயற்கை எய்தியபின் சிங்ககுமாரன் ஆட்சியை நடத்திவந்தான். மகாசேனன் (குளக்கோட்டன்) திருக்கோணேஸ் வரத்திலிருந்து சிவவழிபாடு செய்துகொண்டிருந்து சிவபதமடைந் தான் என்று மட்டக்களப்பு மான்மியமும் கூறுகிறது

ஆடகசவுந்தரியின் வரலாறுகளைப்பற்றி மட்டக்களப்பு மாவட்டத்திலும், திருக்கோணமலை மாவட்டத்திலும் கிடைக் கும் வரலாறுகளில் சிற்சில மாறுபாடுகள் காணப்பட்டபோதி லும் சம்பவங்களில் சத்தியம் உயிரோட்டமாகக் காணப்படுகி றது. வரலாற்றுக் கண்கொண்டு நோக்கும்போது ஆடகசவுந்தரி யின் வரலாறுகள் திருக்கோணேஸ்வரத்தின் தொன்மையையும், வண்மையையும் விளக்கும் சம்பவமாக அமைகிறது.

குளக்கோட்டு மன்னன் ஆக்குவித்த 2700 அவணம் விதைப் புத் தறைக்கு நீர் வினியோகம் செய்ய அல்லைக்குளம், வெண் டரசன்குளம் என்பனவற்றின் நீர் போதாமையால் கந்தளாய்க் குளத்தையும் கட்டினானென்று கோணேசர் கல்வெட்டும் புராண

வரலாறுகளும் கூறுகின்றன. கோணேசர் கல்வெட்டு 23 ஆம் பாடலில் குளக்கோட்டு மன்னன் கோவில் திருப்பணிகள் செய்ததைக் கூறிய கவிராஜர் 24 ஆம் பாடலில் கந்தளாய்க்குளம் கட்டிய வரலாற்றைக் கூறுகின்றார்.

''மேலான திருக்குளமும் இதற்கடுத்த நாலாண்டில் விளங்கச் செய்து
சேல்பாயு மாவலிநீர் வரவழைத்துத் திசைபரவும் சிறப்பும் கண்டு
மாலான நீர்மிகுதி வரவெருவி மதகு திறப்பது யாரென்றே
பாலாழி தனிற்துயிலும் பச்சைமுகில் தனைநினைந்தான் பரிதிவேந்தன்''

கலியப்தம் 512 இல் கோவிற் திருப்பணி செய்துமுடித்த குளக்கோட்டு மன்னன் கலியப்தம் 516 இல் கந்தளாய்க் குளத்தைக் கட்டினானென்று கோணேசர் கல்வெட்டுக் கூறுகின்றது.

**கந்தளாய்க் கல்லாசனம் -**

கி. பி. 1185 தொடக்கம் கி. பி. 1196 வரை பொல்லனறுவையில் இருந்து அரசுசெய்த கிர்த்தி நிசங்கமல்லன் ஆணைப்படி ஒரு கல் ஆசனம் செதுக்கப்பட்டு அதன் மேற்புறத்தில் சிங்கள எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வாசனம் கி.பி. 1921 ஆம் ஆண்டில் கந்தளாயில் எடுக்கப்பட்டு பின்னர் அனுராசபுரத்திலுள்ள புதைபொருள் ஆராய்ச்சி நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஆதிகாலத்தில் கந்தளாய் ''சதுர்வேத பிரமபுரம்'' என்று அழைக்கப்பட்டதென இந்தக் கல்லாசனத்திலிருந்து அறியக்கிடக்கின்றது. நாலு வேதங்களையும் கற்ற பிராமணர்களின் நகரம் என்பது இதன் பொருள்.

**பழமோட்டைக் கல்வெட்டு -**

திருக்கோணமலை மாவட்டத்தில் கந்தளாய் என்ற பெயருள்ள ஓர் ஊருண்டு. இவ்வூரில் பழமோட்டை என்ற கிராமத்தில் கி. பி. 1933 ஆம் ஆண்டில் டாக்டர் பரணவித்தானாவினால் ஓர் அழிந்த சிவாலயம் கண்டுபிடிக்கப்பட்டது. கட்டிட அமைப்பை நோக்கும்போது அது பதினோராம் நூற்றாண்டுக்குரியது என்பது தெளிவு. இங்குள்ள கல்வெட்டு மூலம் இக்கோவிலின் பெயர் ''விஜய இராச ஈஸ்வரம்'' எனவும் கந்தளாயின் பெயர் ''விஜய இராச சதுர்வேத மங்கலம்'' என்பதும் அறியக்கிடக்கின்றது.

மேற்கூறிய விஷயங்கள் கந்தளாயின் பண்டைய நிலையை விளக்குகின்றன. கோணேஸ்வரத்தைத் தரிசித்தவனும் அனுராசபுரத்திலிருந்து அரசாண்டவனுமாகிய கஜபாகு மன்னன் கோணேஸ்வரத்தின் மகிமையையும், தெய்வீகப் புனித சக்தியையும் உணர்ந்து அனுபவித்து ஆலயத்திற்கு மானியம் எழுதி வைத்தானென்று திரிகோணாசலபுராணம் கூறுகின்றது.

''கயவாகு மன்னனுளக் களிப்பொடங் ககன்று செம்பொன்
மயமான கோணையீசன் மலரடி வழுத்த வெண்ணி
வயமா வெம் புரவி காலாள் வையநாற் கருவிசூழ
கயங்களம் புயங்கன் மன்னுங் கழனியி னெறிக்கொண்
டேகி''

(கயவாகுப்படலம் - 31)

இவைகளைக் கருத்திற்கொண்டு சிங்கள மன்னர்கள்தான் இம் மாபெரும் திருப்பணிகளைச் செய்தார்கள் என்று கூறுவது எவ்வாறு பொருந்தும். அனுராசபுரத்திலுள்ள பௌத்த டகோபாவிற்கு எல்லாளன் திருப்பணிகள் செய்ததை ஆதாரமாகவைத்து எப்படி அதை ஒரு இந்துப் புண்ணியதலம் என்று கூறமுடியாதோ அதேபோலக் கோணேஸ்வரத்திலும், கந்தளாயிலும் சிங்களப் பௌத்த மன்னன் மானியம் வழங்கி வழிபாடு செய்ததைக் கொண்டு அதைப் பௌத்தஸ்தலம் என்று கூறமுடியாது. நமது அரசியல் ஆசாபாசங்கள் சரித்திர, சமய உண்மைகளை மூடி மறைப்பதாக இருப்பின் அதன் விளைவு விபரீதமாகவே இருக்கும். ஓரஞ்சார்ந்த நோக்குடைய சிங்கள அரசாங்கம் கந்தளாய்க் குளத்தை சிங்கள மன்னன் கட்டினானென்று உண்மைக்குப் புறம்பான செய்தியைப் புதிய சரித்திரத்துட் புகுத்திக் கந்தளாய்க் குளக்கட்டில் கல்நாட்டியிருக்கிறார்கள்.

திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து பத்து மைல் தூரத்திலுள்ள பெரிய குளம் நாதனார் சிவன்கோவிலை இலங்கை அரசாங்கத்தின் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் சுவடுதெரியாமல் நிர்மூலஞ் செய்துவிட்டு அதனருகே பண்டைக்காலத்தில் தமிழ்ப் பௌத்தர்களால் கட்டப்பட்டிருந்த விகாரைக்கு வெல்க்கம் விகாரை என்று பெயர் சூட்டி உண்மை வரலாற்றை மறைத்துப் புதுச்சரித்திரம் எழுதியிருக்கிறார்கள். அங்கு தமிழ்க் கற்சாசனங்களும் இருக்கின்றன. இதன் விரிவான விளக்கத்தை ''திருக்கோணமலை மாவட்டத் திருத்தலங்கள் என்ற நூலிற் காண்க. திருக்கோணமலையில் 1979 இல் கட்டிய விகாரைக்கு கோகர்ணவிகாரை என்று பெயரிட்டு பழைய வரலாறும், சரித்திரமும் எழுதி விளம்பரம் செய்திருக்கிறார்கள். சைவக்கோவில்

களும் தமிழரும் இருந்த பதவியா இன்று சிங்களக் கிராமமாகி விட்டது. கதிர்காமத்தின் கெதி திருக்கோணேஸ்வரத்திற்கும் நேராமலிருக்கச் சைவமக்கள் தூரதிருஷ்டியோடு கவனஞ் செலுத்தவேண்டும். சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களின் வரலாறுகளையும், இலச்சினைகளையும் ஆலயங்களின் அகப்புறச் சான்றுகளையும் இருட்டடிப்புச் செய்துவருகிறார்கள். தார்மீகம் பேசிக்கொண்டு அதர்மமாகச் செய்துவரும் இந்த அடாத செயல்களைத் தடுத்துத் தவிர்க்கத் தமிழ்மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

கோணேசர் கல்வெட்டிலும் புராணங்களிலும் கூறப்பட்டுள்ள பிரகாரம் குளக்கோட்டு மன்னன் கட்டிய மிகப்பெரிய கோவில்களைக் கற்பாறைகள் நிறைந்த குன்றில் எவ்வாறு கட்டியிருக்கமுடியும்? என்று ஐயம்தோன்ற இடமுண்டு. தஞ்சைப் பெருங்கோவிலிலுள்ள மிகப்பெரிய தூபியைத் தற்காலப் பொறியியலாளர்களும் ஆச்சரியப்படும்படி கட்டவில்லையா? திருச்சிராமலை, திருக்களுக்குன்றம், திருப்பரங்குன்றம் முதலிய மலைகளில் ஆலயங்கள் கட்டவில்லையா? அவ்வாறே திருக்கோணமலையிலும் பாறைகளின்மேல் பாரிய கோவில்களைக் குளக்கோட்டு மன்னன் ஏன் கட்டியிருக்க முடியாது? போர்த்துக்கீசர் இடித்த ஆலயத்தின் சிதைவுகளில், கற்பக்கிரகத்தின் கோஷ்டத்தில் வைக்கப்பட்டிருந்த சிற்பச் சிதைவுக் கல் ஒன்றும், கற்சாசனத்தின் சிதைந்த பகுதி ஒன்றும் கோணேசர் கோவிலில் இருக்கின்றது. அதனைக்கொண்டு குளக்கோட்டு மன்னன் கட்டிய கோவில்கள் எத்தகையதாய் இருந்திருக்கும் என்பதை ஊகித்து அறிந்துகொள்ளலாம்.

## கோணேஸ்வரத்தின் எச்சங்களும் தாக்கங்களும்

போர்த்துக்கீசர் இடித்துத்தள்ளிய கோணேசர் கோவிலின் சிதைந்த கற்கள் மலையின் மேற்குப் பக்கமுள்ள கடலினடியில் கரையோரமாக நீரில் அமிழ்ந்திக் கிடக்கின்றன. அவைகளில் கோவில் வாசற்படிக் கற்கள், சந்திரவட்டக் கற்கள் என்பன வற்றையெடுத்துப் போர்த்துக்கீசர் தமது படகுகளை அணைத்து இறங்கும் மேடையொன்றையும் கோவிலின் மேற்குக் கரையில் அமைத்திருக்கிறார்கள். அந்த மேடை சிதைந்த நிலையில் இன் றும் காணப்படுகின்றது. கோவில்களை இடித்தழித்த கற்களைக் கொண்டு கோட்டையைக் கட்டினார்கள் என்று முன்னர் குறிப் பிட்டிருந்தேன். இக்கோட்டையைப் பிரித்து அகழ்வாராய்ச்சி செய்தால் மறைந்து கிடக்கும் கோவில் வரலாறுகள் வெளிப் படும் என்பதில் சந்தேகமேயில்லை. கோவிலில் இருந்த கற்சா சனங்கள் இக்கோட்டைச் சுவரினுள் மறைந்து கிடக்கின்றன. அத்தகைய கற்சாசனமொன்று கோட்டையின் வடக்குப் பக்க முள்ள சுவர்களுக்கிடையில் வானிலை அவதான நிலையப்பகுதி இருந்த இடத்தில் இருந்தது. கோட்டையின் மேற்குப்பக்கமுள்ள உட்புறக் குகைவாசலில் கோவில்த் தூண்கள் வைத்துக் கட்டப் பட்டிருக்கின்றன. இத்தகைய தூண் ஒன்று இப்போதிருக்கும் கோணேசர் கோவிலுக்கு முன்னேயுள்ள கற்பாறையில் இருப் பதை இன்றுங் காணலாம். கோட்டையின் பிரதான வாசலில் மீன் இலச்சினை பொறிக்கப்பட்டு ''முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியை'' என்ற பாடலும் பொறிக்கப்பட்ட நெடிய தூண்கள் இரண்டு காணப்படுகின்றன. இவையெல்லாம் கோணேசர் கோவிலின் எச்சங்களாக இன்றும் இருந்து வருகின் றன.

சோழமன்னர்களின் ஆட்சிக்காலத்தில்தான் ஆலயங்கள் கருங்கற் திருப்பணிகளாக அமைந்தன. பொல்லனறுவைச் சிவா லயம், இராசராச சோழன் மகன் இராசேந்திர சோழன் கட்டிய கந்தளாய்ச் சிவன்கோவில், குளக்கோட்டு மன்னன் கட்டிய கோணேசர் கோவில் என்பன இதற்குச் சான்றுகளாகும். போர்த்துக்கீசர் செல்வத்தைச் சூறையாடுவதற்காகச் சிவால யங்களை அழித்தார்கள். சிங்கள மன்னர்கள் பௌத்த சாச னத்தைப் பரப்பிப் பௌத்த மதத்தை நிறுவுவதற்காகச் சிவா லயங்களை அழித்தார்கள். இவர்களின் இச்செயலுக்கு ஒரு வர

லாற்றுப் பின்னணி இருந்தது. வட இந்தியாவில் புத்தகயாவிற் பிறந்த புத்தமதம் வேகமாகத் தெற்குநோக்கிப் பரவத் தொடங்கியது. அதேவேகத்தில் இலங்கையிலும் புத்தமதம் பரவியது. மதத்தைப் பரப்புவதற்காக பௌத்த மன்னர்கள் சிவஸ்தலங்களையும், ஆலயங்களையும் அழித்து புத்தவிகாரைகளைக் கட்டி வாழ்ந்தார்கள்.

''கோணேஸ்வரம்'' என்ற நூலின் ஆசிரியர் திரு. செ. குணசிங்கம் B.A.(Hon.) அவர்கள் (வரலாற்றுத்துறைப் பேராசிரியர்) ''இலங்கையிலே சோழராட்சியில் மிகக் கூடிய பாதிப்புக்குள்ளாகிய மாவட்டம் திருக்கோணமலையென்றும், பொல்லநறுவையே தலைநகராக இருந்தபோதிலும் திருக்கோணமலையே சோழர்களின் தலைமைத் தானமாக இருந்திருத்தல் வேண்டுமென்று கூறுகின்றார். (பக்கம் 99) இந்நூலை எழுதுவதற்குத் திருக்கோணமலைப் பகுதி பெருமளவில் ஆசிரியருக்கு உதவியுள்ளது.

இந்நூலாசிரியர் தரும் சில தகவல்கள் கோணேஸ்வரம் பற்றி அறிவதற்குப் பெரும் உதவியாயிருக்கின்றது. புத்தர் பிறப்பதற்கு முன்னிருந்தே சிறப்புடன் விளங்கிய சிவசமயத்தின் செல்வாக்கு பௌத்தசாசன வளர்ச்சிக்குப் பெருந் தடையாயிருந்ததால் கி. மு. மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் பௌத்த மன்னர்கள் சைவாலயங்களை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்கள். மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ள விஷயங்களை விளக்குவதற்காக எழுதப்பட்ட உரைநூலாகிய மகாவங்ஸதீக என்ற நூலில் பின்வரும் விஷயம் தரப்பட்டிருக்கின்றது. ''மணிஹீர விகாரத்தையும் அரசன் (மகாசேனன்) கட்டினான். பிராமணக் கடவுளுக்குரிய கோயில்களை அழித்து மூன்று விகாரைகளை அமைத்தான். கோகர்ணவிகாரம், ஏரகாவிலத்தில் ஒரு விகாரம், கலந்தன் என்ற பிராமணனுடைய கிராமத்தில் ஒரு விவகாரம் ஆகியவற்றை அமைத்தான்'' என்பதாகும்.

மேலும் மகாவங்ஸதீகவில் விளக்கமான தகவல்கள் காணப்படுகின்றன. மகாசேனன் (காலம் கி. பி. 275—301) ''தேவாலயங்களை (இந்துக்கோயில்கள்) இடித்தபின்னர் திஸ்ச என்பவன் மூன்று (புத்த) விகாரைகளைக் கட்டினான். அவை கோகர்ணம், ஏரகாவில்ல, கலந்தவிகாரை ஆகியவையாகும். கோகர்ணம் என்ற கிராமத்துக்கு அருகில் கோகர்ண விகாரையையும், ஏரகாவில்ல என்ற கிராமத்துக்கு அருகில் ஏரகாவில்ல விகாரையையும், பிராமணக் கிராமத்துக்கு அருகில் கலந்த விகாரையையும் கட்டினான். இந்த மூன்று இடங்களிலும் முன்பு இந்துக்

கடவுளுக்கான வசிப்பிடங்கள் கட்டப்பட்டிருந்தன. இவை புத்த சாசனத்துக்குத் தடையாக இருந்தன. அத்துடன் தவறான நம்பிக்கையுடையோரின் இடங்களாகவும் இருந்தன. இதனால் இந்த (இந்து) வழிபாட்டுத் தலங்களை இடித்துப் புத்தபிக்குகளுக்காகப் புத்தவிகாரைகளைக் கட்டினான். கிழக்குக் கடற்கரையில் கோகர்ணவிகாரை கட்டப்பட்டது. மற்றைய இரண்டு விகாரைகளும் றோகணத்தில் கட்டப்பட்டன. இவ்வாறு மதநம்பிக்கையற்றவர்களின் சிவலிங்கம் போன்ற வழிபாட்டுச் சின்னங்களை அழித்து இலங்கைத் தீவின் எல்லாப் பகுதிகளிலும் புத்த மார்க்கத்தை ஸ்தாபித்தான்'' என்பது மகாவங்ஸதீகத்தில் காணப்படும் தகவல்களாகும்.

மகாவம்சத்தில் எழுதப்பட்டுள்ள மேற்கூறிய விஷயங்கள் மிகவும் கவனமாக ஆராயவேண்டியவை. கோகர்ணவிகாரை எந்த இடத்தில் கட்டப்பட்டது என்பதை மகாவம்சம் கூறவில்லை. கிழக்குக் கடற்கரையில் கோகர்ணவிகாரை கட்டப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. திருக்கோணமலைக்கு வடக்கேயும், தெற்கேயும் கடற்கரை நீண்டு கிடக்கின்றது. மற்றைய இரண்டு விகாரைகளும் றோகணத்தில் கட்டப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. அன்றியும் மகாவம்சத்தின் ஓரிடத்தில் மகாசேனன் கட்டினானென்றும், மற்றோரிடத்தில் அந்த மூன்று விகாரைகளையும் திஸ்ச கட்டினானென்றும் கூறி முரண்படுவதைக் காண்கின்றோம். அன்றியும் மதநம்பிக்கையற்றவர்களின் சிவலிங்கம் போன்ற வழிபாட்டுச் சின்னங்களை அழித்து புத்த மதத்தை ஸ்தாபிக்க முற்பட்ட செயல் மதத்தைச் சரியாகப் புரிந்துணராத மதம்பிடித்தவர்களின் இழிசெயலாகும். கடவுளுக்கு இந்துக்கள் ஆலயந்தான் கட்டுவார்கள் வசிப்பிடம் கட்டுவதில்லை. மனிதனாகப் பிறந்து ஞானம்பெற்ற புத்தருக்கும் அவரைப் பின்பற்றும் பிக்குகளுக்கும் வசிப்பிடம் கட்டுவதில் தவறில்லை. மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் ஏதோ ஒன்றை நிறுவுவதற்காக எழுதப்பட்ட செய்திகளாகக் காணப்படுகின்றன.

சேருவாவெல என்று இப்பொழுது கூறப்படும் இடத்தில் ஆதிகாலத்திலிருந்த சிவாலயமாகிய ''மணிபுரேஸ்வரம்'' என்ற ஆலயத்தை அழித்து கோகர்ணவிகாரையை மகாசேனன் கட்டியதாக மட்டக்களப்பில் அட்டைப்பள்ளம் என்ற இடத்தில் வாழ்ந்த திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள் கூறினார்கள். இது திருக்கோவிலிலிருந்த செப்பேட்டுச் செய்தியென்றும் அவர் கூறினார். மேலும் அவர் கூறிய பாடல் ஒன்றை இங்கு குறிப்பிடுகின்றேன்.

''சீர்பெறு மிலங்கைப்பதி வாழ்வுபெறு செல்வமும்
சிவநேயம் மிகு சம்யமும்
செப்புதற் கரிதான மாணிக்க கங்கையும்
சிவமேவு கதிரை மலையும்
ஏர்பெறும் தென்கயிலைக் கோணைவாழ் லிங்கமும்
மேன்மை தான்தோன்றி லிங்கமும்
வெற்றிபுனை சித்திர மயூர சங்காரவேல்
வெள்ளை நாவற் பதியதாம்
சீருறும் தென்திருக் கோவில் சிவாலயம்
சிவபூசை தேவாராத்னைக்கும்
செய்முறைகள் என்றென்றும்
தேசந் தளம் பாமலும்
ஏருல்வு பரிதிகுல ராசன் குளக்கோடன்
எவ்வுல்கு முய்வதாக
எழு கோபுரங் கோவில் தொழவே தினந் தேடி
எங்கணு மியற்றினானே''

கதிர்காமம், கதிரைமலை, திருக்கோணமலை, கொக்கட்டிச் சோலை, வெருகல், கோவில்ப் போரைதீவு, திருக்கோவில் என்னும் ஏழு தலங்களிலும் குளக்கோட்டு மன்னன் திருப்பணிகள் செய்ததாகவும், தெற்கே மாணிக்க கங்கையும், மேற்கே மாய வனாறு (முனீஸ்வரம்) வடக்கே கரம்பகம் (சாவகச்சேரிக்கருகில்) கிழக்கே வங்காளவிரிகுடாக் கடல் ஆகிய எல்லைக்குட்பட்ட வருமானத்தை அந்தந்த வன்னிமைகள் செலவிடலாம். பத்திலொரு பங்கு கோணேஸ்வரத்திற்குக் கொடுக்கவேண்டும். இது குளக்கோட்டன் ஆணை என்பதாகவும், மட்டுமாநகரில் திருக்கோவில் என்ற இடத்தில் கோவிலில் இருந்த செப்பேட்டில் மேற் கூறிய விஷயங்கள் இருந்ததாகவும் அவர் கூறினார்

திருக்கோவில் என்ற ஊருக்குச் சென்று அங்குள்ள ஆலய நிர்வாகிகளிடம் செப்பேடு சம்பந்தமாக விசாரணை செய்தேன். அத்தகைய ஏடு ஒன்றிருந்ததாகவும் பல்லாண்டுகளுக்கு முன் விபரமறியாதோர் அதனை உருக்கி லோகமாக்கிப் பயன்படுத்தியதாகவும் முன்னோர் கூறினார்கள் என்றார்கள். செப்பேட்டு விவகாரம் திருக்கோணமலை மாவட்டத்திலும் பேசப்பட்டுவந்த பழங்கதையாகிவிட்டது. கோணேசர் கல்வெட்டு எழுதப்பட்டிருந்த செப்பேடுகள் மறைந்தபோதிலும் அவ்வேட்டிலுள்ள விஷயங்கள் ஓலைச் சுவடிகளில் முன்னரே எழுதிவைக்கப்பட்டுவந்தன. அவ்வேடுகள் பிற்காலத்தில் கோணேசர் கல்வெட்டு என்ற பெயரில் நூல்களாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. கொட்டியாபுரப்பற்றில் வாழ்ந்த திரு. மு. கனகசபை ஆசிரியரிடமிருந்து (மல்லிகைத்தீவு) பெறப்பட்ட ஏட்டுப்பிரதியொன்று என்னிடம் இருக்கின்றது.

# திருக்கோணேசர் கற்சாசனங்களும் கல்வெட்டும்

திருக்கோணமலையின் ஆதிவரலாற்றினை அறிவதற்கு ஆதாரமாயிருப்பவை சரித்திரச் சான்றுகளே. சரித்திரச் சான்றுகளின் மூலம் ஒரு நகரத்தின் வரலாறுகளை அறிவதற்கு ஆதாரமானவை வரலாற்று நூல்களே. வரலாற்று நூல்களை ஆக்கும் பணியில் பண்டைத் தமிழர்கள் கருத்தைச் செலுத்தினார்கள் என்று துணிந்து கூறமுடியவில்லை. சங்ககாலத்திலும், அதற்கு முன்னரும் வாழ்ந்த மன்னர்களுக்கோ புலவர்களுக்கோ அல்லது அவர்கள் வாழ்ந்த நகரங்களுக்கோ வரலாற்று நூல்களை அவ்வப்போது முறையாக ஆக்கிவைத்தாரில்லை. மேல்நாட்டவர்கள் வரலாற்று நூல்களை ஆக்கிவருவதைப் பின்பற்றிப் பிற்காலத் தமிழ் மக்கள் மிகமிக முயன்று வரலாற்று நூல்களை எழுதி வந்திருக்கின்றார்கள். ஆனால் பண்டைத் தமிழ் மக்கள் தாமியற்றிய மாபெரும் பணிகளை வருங்கால மக்கள் அறியவேண்டுமென்ற காரணத்தினாலும், அப்பணிகளுக்கு ஊனமேற்படுங் காலத்தில் அவற்றைத் தொடர்ந்து செப்பனிடுவதற்காகவும், நெறிமுறை பிறழாமல் குறிப்பிட்ட ஒவ்வொரு பணிகளும் நிகழ்ந்து வரவேண்டுமென்ற விருப்பத்தினாலும், உறுதியானதும், சுருக்கமாகவுமுள்ள சில வரலாறுகளைச் சாசனங்களிற் பொறித்துவைத்துள்ளார்கள். அத்தகைய சாசனங்கள் கற்சாசனங்களாகவும், செப்பேட்டுச் சாசனங்களாகவும், சிற்சில இடங்களில் மரப்பலகைகளிலும் காணப்படுகின்றன. இத்தகைய சாசனங்களையும், பண்டைக்கால் இதிகாசங்கள், இலக்கியங்கள், புராணங்களிலுமுள்ள சம்பவங்களையும் பகுத்தறிந்து ஒப்பு நோக்கி இயன்றவரை காலவரையறைகளையுங் கணித்து ஆதி வரலாறுகளை அனுமானிப்பதே சாலப் பொருத்தமானதாகும்.

கல்லில் பொறிக்கப்பட்ட சாசனங்கள் திருக்கோணேஸ்வரத்திலும் அதனைச் சூழவுள்ள கிராமங்களிலும் கிடைத்திருக்கின்றன. தென்னிந்தியாவிற் கிடைக்கும் கற்சாசனங்கள்போல உதாரணமாக குடுமியாமலைச் சாசனம்போல இந்தக் கற்சாசனங்கள் வரலாறுகளைக் கூறுகின்றன. திருக்கோணேஸ்வரத்திற்குச் சிறப்பாயமைந்த கோணமலைக் கற்சாசனத்தையும், கோணேசர் கல்வெட்டையும் பற்றி ஈண்டு விரித்துக் கூறுவதற்கு முன்னர் அத்தலத்தினுடைய வரலாறுகளையும் சிறிது அறிந்திருப்பது நலமெனக் கருதுகின்றேன்.

திருக்கோணமலைச் க்ஷேத்திரத்தைப் பற்றிய செய்திகள் தெட்சணகயிலாய மான்மியம், திருக்கோணாசலபுராணம், தெட்சணகயிலாயபுராணம், திருக்கரசைப்புராணம், மச்சபுராணம், செவ்வந்திப்புராணம், திருக்கோணாசலவைபவம் முதலிய நூல்களில் விரிவாகக் காணப்படுகின்றன. ஏழாவது நூற்றாண்டில் வாழ்ந்தவராகிய திருஞானசம்பந்தர் திருவாய்மலர்ந்த திருக்கோணேஸ்வரத் திருப்பதிகத்தில் கோணமாமலையமர்ந்த கோவிலையும், அத்திருத்தலத்தையும் சிறப்பித்துப் பாடியருளினார். ''கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை'' என்றும் ''குடித்னை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றும் கோணமாமலை'' என்றும் ''விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை வேங்கை வண்செருந்தி செண்பகத்தின் குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ் கோணமாமலை'' என்றும் திருக்கோணேஸ்வரத்தின் புகழைச் சம்பந்தர் போற்றித் துதித்துள்ளார்.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்தவனாகிய புவனேகவீரபாண்டியன் பாண்டியமன்னர்களுக்குக் கீர்த்தியைத் தருவதாகிய இருகயல் இலச்சினையைத் திருக்கோணமலையிற் பொறித்தான் என்றும் திருக்கோணேஸ்வரத்திற்குரிய நிலங்களை இறையிலி நிலமாக்கினான் என்ற வரலாறும் குடுமியாமலைச் சாசனத்திற் கூறப்பட்டுள்ளது. குடுமியாமலைச் சாசனம் தென்னிந்தியாவுக்குரியது. பண்டைக்கால மன்னர்கள் தமது வீரத்தினாலும், செல்வாக்கினாலும் பிறநாடுகளைக் கட்டியாண்டுவந்திருக்கிறார்கள். பிறநாடுகளைத் தம்மாட்சிக்குட்படுத்தி ஆளுங்காலத்தில் அந்நாட்டிலுள்ள ஸ்தலங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது வழக்கம். அதனால் அத்தலங்களில் புதிய ஆலயங்களை அமைக்கவோ முன்னருள்ள ஆலயங்களில் திருப்பணிகள் செய்யவோ ஆலயங்களுக்கு மானியங்கள் வழங்கவோ தவறுவதில்லை. அனுராசபுரத்தைத் தலைநகராகக் கொண்டு இல்ங்கையில் ஆட்சிபுரிந்த கஜபாகுமன்னன் திருக்கோணேஸ்வரத்திற்கு மானியம் வழங்கினான் என்ற செய்தி திருக்கோணாசலபுராணத்தில் கூறப்பட்டுள்ளது. பண்டைக்காலத்தில் அனுராசபுரத்தில் தமிழ் குடிமக்களும் இருந்தார்கள் என்றும் அவர்களைப் பற்றிய தமிழ்க் கற்சாசனம் ஒன்று அங்கிருந்ததென்றும் நவாலியூர் நவரெத்தினம் அவர்கள் ''இலங்கைத் தமிழர்'' என்ற நூலில் குறிப்பிடுகின்றார். பௌத்த மதத்தவனாகிய கஜபாகுமன்னனே கோணேஸ்வரத்திற்கு மானியம் வழங்கினானென்றால் தமிழ்நாட்டு மன்னனாகிய புவனேகவீரபாண்டியன் திருக்கோணேஸ்வரத்திற்குரிய நிலங்களை இறையிலி நிலமாக்கினான் என்பது ஆச்சரியப்படத்தக்கதன்று.

தென்னிந்தியக் கோயிற் கற்சாசனங்களிலொன்று குடுமியா மலைச் சாசனம் அதனை ஆராயுமிடத்து திருக்கோணமலையில் பாண்டியமன்னர்களின் இருகயல் இலச்சினையைச் சடையவர்மன் சுந்தரபாண்டியன் கி. பி. 13 ஆம் நூற்றாண்டு பொறித்தான் என்று அறியக்கிடக்கின்றது. எனவே சடையவர்மன் சுந்தரபாண்டியனும் புவனேகவீரபாண்டியனும் ஒருவராயிருத்தல் வேண்டும். அற்றன்றேல் சடையவர்மன் சுந்தரபாண்டியனுடைய ஆணைப்படி ஈழத்தை வெற்றிகொண்ட புவனேகவீர பாண்டியன் இருகயல் இலச்சினையைத் திருக்கோணமலையில் தனது வெற்றிச் சின்னமாகப் பொறித்திருத்தல் வேண்டும். கோணேசர் கோவிலை இடித்தழித்துத் தரைமட்டமாக்கிய அக்கிரமச் செயல்புரிந்த போர்த்துக்கீசத் தளபதி கொன்ஸ்ரன்டைன் டீசா போர்த்துக்கல் மன்னனுக்கு கோணேசர் கோவில் பற்றி அனுப்பிவைத்த செய்தி கற்சாசனம் ஒன்றிலிருந்து பெறப்பட்டதென்பதைக் குறிப்பிட்டுள்ளான். இதனை இச்சந்தர்ப்பத்தில் நினைவூட்ட விரும்புகின்றேன்.

திருக்கோணேஸ்வரத்திற்குரிய சிலாசாசனக் கல்வெட்டொன்று போர்த்துக்கீசரின் அக்கிரமச் செயலுக்குப் பலியாகியுள்ளது. எனினும் நீண்டதோர் சரித்திர வரலாற்றுக்கு விளக்கமாயிருந்த அக்கற்சாசனத்தின் ஒருபாகம் தமிழ் மக்களினதும், சைவமக்களினதும் தொன்மையைப் புலப்படுத்துவதற்காகப் போலும் இன்னும் இருந்துவருகின்றது. பிறடெறிக் கோட்டை வாசலில் இடது பக்கத் தூணிலே அப்பாகம் இருப்பதைக் காண்கிறோம். இது விஷமிகளால் அழிக்கப்படாமல் அகற்றப்படாமல், சிதைக்கப்படாமல் பாதுகாக்கப்படவேண்டிய முக்கிய கற்சாசனமாகும். அப்பாகத்திலுள்ள எழுத்துக்களை அப்படியே இங்கே தருகின்றோம்.

ன . னே . குள
காட . . முட கு
ருப . ப . னியை
னனே . பறங்கி
க . க . வே . மனன
ன . பொ . ன . னா
னை . ய . ய . ற . ற
தே . வை . த
ட . ரை
. கள

இத்னை ஆராய்ச்சி செய்து திருக்கோணேஸ்வரம் என்னும் நூலை எழுதிய புலவர் வை. சோமாஸ்கந்தர் அவர்களும், திரு. அ. ஸ்ரீஸ்கந்தராஜா (எம்.ஏ.) அவர்களும் இதில் மறைந்துள்ள பகுதிகளைக் காண முயன்று பின்வருமாறு குறிப்பிடுகின்றார் கள்.

(மு) ன் னே கு ள (க்)
(கோ)கா ட(ன்) மூ ட் டு (ந்)
(தி)ரு ப் ப ணி யை (ப்)
(பி)ன் னே பறங்கி (பி)
(ரி) க் க வே மன்ன (வ)
(பி)ன் பொ ண் ணா (த)
(த) னை யிய ற் ற (வழி)
(த்) தே வை த் (து)
(எண்ணா) (ரேபின்)
(னரசர்) கள்.

பாடலின் முழு உருவத்தை இங்கே தருகின்றேன்.

முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்
பின்னே பறங்கி பிரிக்கவே — மன்னவபின்
பொண்ணா ததனை யியற்ற வழித்தே வைத்து
எண்ணார் வரு வேந்தர்கள்.

இந்தக் கற்சாசனப் பாடலினைச் செவிவழிச் செய்தியாகவைத் துப் பாதுகாத்துவரும் திருக்கோணமலைப் பழங்குடி மக்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்.

முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்
பின்னே பறங்கி பிடிக்கவே — மன்னாகேள்
பூனைக்கண் செங்கண் புகைக்கண்ணன் ஆண்டபின்
தானே வடுகாய் விடும்.

யாழ்ப்பாணச் சரித்திரத்தை எழுதிய முதலியார் திரு. சி. இராசநாயகம் அவர்கள் இக்கல்வெட்டுப் பாட்டினைப் பிரபல அறிஞர்களோடு ஆலோசித்து ஆராய்ந்து பின்வருமாறு கூறியுள்ளார்.

முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்
பின்னே பறங்கி பிடிக்கவே — மன்னாகேள்
பூனைக்கண் செங்கண் புகைக்கண்ணன் போனபின்
மானே வடுகாய் விடும்.

காலவெள்ளத்தைக் கடந்துவந்த இக்கற்சாசனப் பாடலின் பின் பகுதியிலேதான் ஒருவருக்கொருவர் மாறுபட்டுக் கூறியிருக்கின்றனர். இவ்விடயத்தில் எனக்குத் தோன்றும் கருத்தையும் இங்கே தருகின்றேன்.

முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்
பின்னே பறங்கி பிரிக்கவே — மன்னவபின்
பொண்ணா ததனையியற்ற வழிவழித் தேயத்து
எண்ணார் வரு வேந்தர்கள்.

முற்காலத்தில் குளக்கோட்டன் என்னும் மன்னவன் திருப்பணி செய்த திருக்கோவிலை பிற்காலத்தில் பறங்கியர் இடித்து அழிப்பார்கள். அதன்பின்னே இக்கோவிலைக் கட்டுவதற்கு பரம்பரையாக வரும் மன்னர்கள் எண்ணமாட்டார்கள் என்பதே இக்கல்வெட்டுக் கூறும் பொருள். மன்னர் பரம்பரை இருக்காது என்பது மறைபொருள். பிற்கால நிகழ்ச்சிகளை முன்னரே அறிந்து கூறும் தீர்க்கதரிசன்ராகிய சுபதிருஷ்ட முனிவர் என்பவரால் இப்பாடல் கற்சாசனத்தில் பொறிக்கப்பட்டிருக்கலாமெனவும் அறியக்கிடக்கின்றது.

கி. பி. 1624ஆம் ஆண்டில் அதாவது இற்றைக்கு 365 ஆண்டுகளுக்கு முன்னே கோணேசர் கோவிலைப் போர்த்துக்கீசத் தளபதி கொன்ஸ்ரன் டைன் டீசா இடித்துத் தரைமட்டமாக்கி அதன் கற்களைக்கொண்டு பிறடெறிக் கோட்டையைக் கட்டினான். அப்போது இத்தளபதி போர்த்துக்கல் மன்னனுக்கு அனுப்பிய ஒரு அறிக்கையில் பின்வருமாறு எழுதியிருந்ததாக லிஸ்பன் தேசிய நூல் நிலையத்தில் ஒரு குறிப்புக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. (ரோயல் ஏஷியாட்டிச் சங்கப் பிரசுரம், 30தாவது மலர், 80ஆம் இதழ், 449ஆம் பக்கத்தில் இதைக் காண்க) அக்குறிப்புப் பின்வருமாறு: ''இக்கோவில் இடித்து அழிக்கப்படுகையில் ஒரு கல்லில் சில விஷயங்கள் எழுதிவைத்திருப்பது கண்டறியப்பட்டது. சில அறிவாளிகளைக்கொண்டு அந்த விஷயம் சரியாக மொழிபெயர்க்கப்பட்டு மாட்சிமைதங்கிய போர்த்துக்கல் மன்னருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அந்தக் கற்சாசனத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.'' வீதிய - மால் - மண்டா, கடவுளுக்கு இந்தக் கோவில் மாணிக்கராஜாவினால் கட்டப்பட்டது. சரித்திரக் கணக்கின்படி இந்தக் கோவில் கி. மு. 1300ஆம் ஆண்டுக்கு முன் கட்டப்பட்டிருக்க வேண்டும். பிராங்ஸ் என்ற ஒரு சாதியினர் இக்கோவிலை அழிப்பார்கள். பின்னர் இதைக்கட்ட இலங்கையில் எந்த மன்னருமே இருக்கமாட்டார்கள் என்பது அக்குறிப்பு.

மாணிக்கராஜா என்பது மனுராசா என்பதற்குச் செய்த தவறான மொழிபெயர்ப்பாயிருக்கவேண்டுமென பிரபல போர்த்துக்கீசிய சரித்திராசிரியர் வண - பிதா - குவிரோஸ் அவர்கள் கூறியுள்ளார்கள். வீதிய - மால் - மண்டா, என்பன வீதியும், மேல்மாடியும், மண்டபமும் என்று இருக்கவேண்டுமென அறிஞர்கள் கருதுகிறார்கள். கோணேசர் கோவில் கற்சாசனத்திற் காணப்படும் செய்திகளை உன்னிக் கவனிக்கும்போது கோணேசர் கோவிலைக் கட்டுவித்தவர் மனுராஜா என்பதாக போர்த்துக்கீசத் தளபதி கொன்ஸ்ரன் டைன் டீசா என்பவருடைய அறிக்கையிலிருந்து அறிகிறோம். கற்சாசனப் பாடலில் உள்ள ''முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணி'' என்பது, ஆலயத்திற்குத் திருப்பணி செய்தவர் குளக்கோட்டு மன்னன் என்பதையும் அறிகிறோம். போர்த்துக்கீசத் தளபதி கண்டறிந்த கற்சாசனம் வேறு, பிறடெறிக்கோட்டை வாசலில் இருக்கும் கற்சாசனம் வேறு என்பது இதனால் புலனாகின்றது. இரண்டு கற்சாசனக் குறிப்புக்களும் ஆலயம் பறங்கியர் வசமாகி அழியும் என்ற ஒற்றுமைச் செய்தியைத் தருகின்றது. பதின்மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்தவன் புவனேகவீர பாண்டியன். அவன் திருக்கோணமலையைத் தன்னாட்சிக்குட்படுத்தி ஆலயத்தை ஆதரித்து மானியம் வழங்கியவன். அவனால் எழுதுவிக்கப்பட்ட இருகயல் இலச்சினைகளும் இக்கற்சாசனத்துடன் சேர்ந்து காணப்படுகின்றது. அதிலுள்ள பாடல்''முன்னே குளக்கோட்டன் மூட்டும் திருப்பணி'' என்று பேசுகின்றது. இதிலிருந்து புதியதோர் ஊகத்திற்கு இடமுண்டாகின்றது. முன்னே என்ற சொல்லுக்கு புவனேகவீரபாண்டியனுக்கு முன்னே எனப் பொருள் கொண்டு திருக்கோணேஸ்வரத் திருப்பணியைக் குளக்கோட்டு மன்னன் செய்தான் என்பதைப் புவனேகவீரபாண்டியன் அறிந்திருந்தானென்றும், அப்பணிக்கு ஊனம் வந்துறுவது பறங்கியராலென்பதை முக்காலமும் உணரவல்ல தீர்க்கதரிசியாலறிந்து அம்மன்னனுடைய ஆணைப்படி இக்கற்சாசனமும் அதனுடனிணைந்த இருகயல் இலச்சினையும் பொறிக்கப்பட்டிருக்கலாமென்பதைச் சிந்தனையாளர்களின் கவனத்திற்குத் தர விரும்புகிறேன்.

இக்கற்சாசனத்திற் காணப்படும் எழுத்தமைப்பினை ஆராய்ந்த சென்னை அரசாங்கக் கல்வெட்டு ஆராய்ச்சியாளர் திரு. எச். கிருஷ்ணசாஸ்திரி அவர்கள் இந்த எழுத்தமைப்பு கி. பி. 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததென்று கருதுகின்றார். இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கிடையில் ஒரு சமுதாயத்தின் எழுத்தமைப்பு முறை மாறியமைவதற்கு அவசியமேற்பட்டிராது. எனவே கி. பி. 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புவனேகவீர பாண்டியன் காலத்திலும் இந்த எழுத்த்மைப்பு முறை இருந்ததெனக் கொள்வதில் இழுக்கில்லை.

இதுவரை கற்சாசனக் கண்ணோட்டத்தில் கி. பி. 13ஆம் நூற்றாண்டுவரையுமுள்ள திருக்கோணமலை வரலாற்றின் சிறு பகுதியை அறிந்தோம். கி. பி. 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வராகிய அருணகிரிநாத சுவாமிகள் திருக்கோணமலைத் தலத்துக்குத் திருப்புகழ் பாடியுள்ளார். ''விலைக்குமேனியில் அணிக்கோவை'' என்ற திருப்புகழில்

''நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக்கொணாமலைத் தலத்தாறு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில் - வருவோனே''

என்று பாடியிருப்பதைக் காண்க. இத்தலத்தின் பெயரை அவர் திருக்கொணாமலை என்று கூறுகின்றார். திருக்கோணாமலை என்பது பர்ட்டின் ஓசைநயங் கருதித் திருக்கொணாமலையெனப் பாடப்பட்டிருக்கிறது. அருட்செல்வமும், பொருட்செல்வமும் குறைவுபடாத ஸ்தலம் என்பது அதன் பொருள்.

கி. பி. 17ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையை அரசு புரியத் தொடங்கிய போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர் (இவர்களையே பூனைக்கண், செங்கண், புகைக்கண்ணன் என்று கற்சாசனம் குறிப்பிடுகின்றது) காலங்களிலும் அதன் பின்னரும் இத்தலத்தின் இதிகாச வரலாறுகள் தெளிவாகக் கிடைக்கின்றன.

இதுவரை கோணேசர் கோவிற் கற்சாசனச் செய்திகள் பற்றிக் கூறினோம். மரப்பலகையிற் பொறிக்கப்பட்ட சாசனமொன்று (அது கதவின் ஒருபாகமாயிருக்கலாம்) திருக்கோணமலைக் கச்சேரியில் இருந்தது. அதில் பொறிக்கப்பட்டிருந்ததை இங்கே தருகிறேன். ''சகவருடம் 1145 (சம்பு புஷ்பம்) ஆம் ஆண்டு சூரியன் மேடராசியில் நிற்க அத்த நட்சத்திரம் கூடிய நாளில் இலக்கினம் உதயமாகும்போது கோடகங்கன் என்னும் மன்னன் இலங்கைக்கு கோகர்ணாவில் (மறைந்தபகுதி) ஏதோ செய்வதற்கு வந்தான்'' திருக்கோணேஸ்வரம் என்ற நூலிலிருந்து பெறப்பட்டது.

1946ஆம் ஆண்டு கலாநிதி எஸ். பறணவித்தான அவர்கள் இந்த மரப்பலகை சாசனத்தை ஆராய்ந்து பின்வருமாறு கூறியுள்ளார். கி. பி. 1123 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மேடலக்கினம் அதிகாலையில் பொருந்தியிருந்தது. இம்மரப்பல்கைச் சாசனத்தில் கூறப்படும் கோடகங்கன் என்னும் அரசனை இந்திய, இலங்கை வரலாறுகளால் அறியமுடியவில்லை. இவன் கலிங்க நாட்டின் கிழக்கில் கங்க

வம்சத்தில தோன்றியவனாயிருக்கவேண்டும். இச்சாசனத்தில் குறிக்கப்பட்டுள்ள கோகர்ணா இன்றுள்ள திருக்கோணமலை யாயிருக்கலாம். திரு. எஸ். ஜே. குணசேகரம் அவர்கள் கோண மலை என்ற தமிழ்ப் பெயரை, கோணகம என்று பெயர்மாற் றம் செய்வதைக் கண்டித்து மறுப்புத் தெரிவித்திருக்கிறார். கி. பி. 12ஆம் நூற்றாண்டில் கோடகங்கன் என்னும் மன்னன் இலங்கையை ஆண்டானென்று இலங்கைச் சரித்திரத்தில் கலா நிதி மென்டிஸ் அவர்கள் கூறியுள்ளார். இவர் கூறும் கோட கங்கனும், சாசனத்திற் கூறப்படும் கோடகங்கனும் ஒருவனா? என்பது ஐயத்துக்கிடமானதே.

கோணேசர் கல்வெட்டு என்று கூறப்படும் முக்கியமான செப்பேட்டுச் சாசனம்பற்றி இனி நோக்குவோம். திருக்கோண மலையில் இன்று வாழ்ந்துகொண்டிருக்கும் பழங்குடித் தமிழ் மக்களில் முதியவர்கள் சிலர் ''பெரியவளமைப் பத்ததி'' என்ற ஒரு செப்பேடு இருந்ததாகக் கூறுகின்றார்கள். அதில் கோணே சர் ஆலயத்தின் நிர்வாக நெறிமுறைகள், எழுதப்பட்டிருந்த தென்றும் சொல்லுகின்றார்கள், ஆனால் இன்று வாழ்கின்ற வர்களில் யாரும் அதனைப் பார்த்திருப்பார்கள் என்று சொல்ல முடியாது. ஆலயத்துக்குரிய முக்கியமான வரவு, செலவுகளும் அச் செப்பேட்டில் இருக்கலாமெனவும் ஊகிக்கின்றார்கள். செப் பேட்டிலிருந்த கோணேசர் கல்வெட்டு பின்னர் ஓலைச் சுவடிக ளிற் பிரதிசெய்யப்பட்டுப் பாதுகாக்கப்பட்டிருந்தன. அத்தகைய பிரதிகள் கட்டுக்குளப்பற்று, கொட்டியாபுரப்பற்று, தம்பல காமப்பற்று என்னும் இடங்களில் வாழ்ந்த மக்களிடமிருந்தன. அவற்றை பெரியார் திரு. வே. அகிலேசபிள்ளையவர்கள் தேடி யெடுத்து ஆராய்ந்து திருக்கோணாசல வைபவம் என்ற நூலை எழுதியுள்ளார். எனது தேடுதலின்போது கொட்டியாபுரப்பற் றில் ஒரு ஏட்டுப்பிரதிக் கல்வெட்டும், கட்டுக்குளப்பற்றில் ஒரு பழைய அச்சுப்பிரதிக் கல்வெட்டும் கிடைத்தன. அச்சுப்பிரதி கி. பி. 1887ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. பதிப்பித்த வர் வல்வை திரு. க. சின்னத்தம்பிப்பிள்ளை அவர்கள். யாழ்ப் பாணம், புலோலி கிழக்குப் பூர்வீகராய், மட்டக்களப்புக் காரேறுதீவில் வசித்தவருமாகிய திரு. பொ. வைத்தியலிங்க தேசிகர் அவர்கள் பல ஏட்டுப்பிரதிகளைப் பரிசோதித்து 1916ஆம் ஆண்டில் தட்சணகைலாய புராணத்தையும், கோணேசர் கல் வெட்டையும் ஒரே நூலில் பதிப்பித்துள்ளார்.

கோணேசர் ஆலயத்திற்குத் தொழும்பாளர்களாயுள்ளவர் கள் கொட்டியாபுரப்பற்று, கட்டுக்குளப்பற்று, தம்பலகாமப் பற்று என்னுமிடங்களில் வாழ்ந்து வந்தார்களாதலால் ஆலயத்

தின் கல்வெட்டுப் பிரதிகள் அவ்வப் பற்றுக்களில் வாழ்கின்ற வர்களிடம் இருந்துவந்தன. திருக்கோணமலையைத் தாயகமா கக்கொண்டவரும் தமிழ்ப் பேரறிஞரும், புலவருமாகிய ஸ்ரீமான் வே. அகிலேசபிள்ளையவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே மிகவும் அரும்பாடுபட்டு பழைய கல்வெட்டுச் சுவடிகளையும் புராணங்களையும் தேடியெடுத்து ஆராய்ந்தார் கள். அவருடைய ஆராய்ச்சியின் பயனாகக் கிடைத்ததே திருக் கோணாசல வைபவம் என்னும் நூல். அந்த நூலில் கோணே சர் கல்வெட்டு என்ற ஒருபகுதி காணப்படுகின்றது. அந்தக் கல் வெட்டில் கூறப்படுகின்ற சம்பவங்களைவிட வேறு புது அம்சங் களை ஏட்டுச் சுவடிகளிற் காணலாமென நான் எதிர்பார்க்க வில்லை. ஏனையோருடைய பதிப்புக்களிலுள்ள பாடல்கள் சில வற்றிற்கும் இதற்கும் மிகச் சொற்பமான வேறுபாடுகள் இருக் கத்தான் செய்கின்றன.

கோணேசர் கல்வெட்டைப்பற்றிப் பேசும் இந்த இடத்தில் திருக்கோணமலையில் ''கயிலாயர் கல்வெட்டு'' என்று ஒரு கல் வெட்டு இருந்ததாகப் பேசப்பட்டுவருகின்ற விஷயத்தின் உண் மையை எடுத்துக்கூறக் கடமைப்பட்டவனாயிருக்கின்றேன்.

"IN THE DAYS OF SAMBASIVA" என்ற ஒரு ஆங்கில நாவலை திரு. ரி. ஐசக் தம்பையா அவர்கள் எழுதி 1932ஆம் ஆண்டு பதிப்பித்திருக்கிறார். திருக்கோணமலையின் பழைய வரலாறுகள் அந்நூலில் இருப்பதாகவும், அது ''கயிலாயர் கல் வெட்டை'' ஆதாரமாகக்கொண்டு எழுதப்பட்டதாகவும் சிலர் பேசிவந்தார்கள். அந்நூல் கிடைப்பது அரிதாயிருந்தபோதிலும் சிரமப்பட்டுத் தேடினேன். மட்டக்களப்பு ஆரையம்பதியிலிருக் கும் திரு. கே. ராஜரட்டினம் என்பவரிடம் இருப்பதாக அறிந்து அங்கு சென்று நூலை வாங்கிவந்து படித்தேன். எதிர்பார்த்த பிரகாரம் திருக்கோணமலைபற்றியோ, திருக்கோணேஸ்வரம் பற்றியோ அந்நூலில் வரலாறுகள் எதுவுமே வரையறுக்கப் பட்டு இருக்கவில்லை.

கோணேஸ்வரத்தில் குளக்கோட்டு மன்னன் திருப்பணிகள் செய்வதற்கு முன்னுள்ள சம்பவங்களையும், திருப்பணிகளை நிறைவேற்றிய பின்னர் கோணேஸ்வரத்தைப் பரிபாலிக்க வகுத்த திட்டங்களையடக்கிய கோணேசர் கல்வெட்டுச் சம்பவங்களை யும் ஆலயத்தில் பூசைசெய்த அந்தணர்களின் சம்பவங்களையும், தொழும்பாளர்களின் கடமைகள் பற்றிய சம்பவங்களையும், ஆலயத்தின் செல்வாக்கு, திரவியங்கள், நிர்வாகம்பற்றிய விஷ யங்களையும், கோணேசர் கல்வெட்டிலிருந்து படித்தறிந்து

அவைகளைக் கருவாகக்கொண்டு நூலாசிரியர் நாவலுக்குத் தேவையான கதாபாத்திரங்களைக் கற்பனையில் சிருஷ்டித்துச் சுவையான ஒரு நாவலை எழுதியிருக்கிறார்.

சாம்பசிவ ஐயர் அவருடைய பிரதான கற்பனைக் கதா பாத்திரம். ஆலயத்தின் செல்வத்தைச் சூறையாடத் திட்டமிட்ட போர்த்துக்கீச உளவாளிகளாக நூலில் கூறப்பட்டுள்ள ''ஜைக் கிளோன், நிக்கடமஸ் என்பவர்கள் கோணேஸ்வரத்திற்கு வந்ததும், அவர்களிலொருவன் பாக்கியமுனி என்ற பெயருடன் மாறு வேடத்தில் வாழ்ந்து ஆலயத்தின் திரவிய இருப்பை அறிந்ததும், இவர்களுடைய இரகசியச் சூழ்ச்சிகளால் கோணேஸ்வரம் அழிக்கப்பட்டுத் திரவியங்கள் கொள்ளையடிக்கப்பட்டதும், கோவில் தொழும்பாளர்கள் கோவில் விக்கிரகங்களைத் தம்பலகாமத்திற்குக் கொண்டுபோய் மறைவாக வைத்திருந்ததும் இச்சம்பவங்களெல்லாம் கோவிலில் பூசை செய்துகொண்டிருந்த சாம்பசிவ ஐயர் காலத்தில் நிகழ்ந்ததென்பதும் நூலாசிரியருடைய கற்பனைகளாகும். இரத்தினச் சுருக்கமாகச் சொன்னால் கோணேசர் கல்வெட்டிலுள்ள சம்பவங்களைக் கருவாகக்கொண்டு எழுதப்பட்ட ஒரு நாவல்தான் ''IN THE DAYS OF SAMBASIVA'' இந்நூலில் கோணேஸ்வரம் பற்றிக் கூறும் காலவரையறையுடைய வரலாறுகள் எதுவுமேயில்லை. நூலாசிரியர் கோணேசர் கல்வெட்டைப் பின்னணியாகக் கொண்டதைச் சிலர் கயிலாயர் கல்வெட்டு என்று தவறாகக் கருதினார்கள்போலும்.

கோணேசர் கல்வெட்டுக் கூறும் சம்பவங்களை இனி காண்போம். குளக்கோட்டு மன்னன் வேண்டிக்கொண்ட பிரகாரம் கவிராஜர் என்பவர் கல்வெட்டுப் பாடியதாகக் காணப்படுகின்றது. கவிராஜர் எந்தக் காலத்தில் வாழ்ந்திருந்தாரென்பது புலனாகவில்லை. கல்வெட்டுக்கு நூன்முகமாயமைந்த பாடலொன்றை இங்கே தருகின்றேன்.

திருமருவு மனுநீதி கண்ட சோழன்
    செகமகிழு மரபில்வரு ராமதேவன்
தருமருவு திரிகயிலைப் பெருமை கேட்டு
    தானுமவண் வந்ததுவு மவன்சேய் பின்பு
மருமருவு மாலயங்கள் கோபுரங்கள்
    மணிமதில்சூழ் மண்டபங்கள் மலிநீர்வாவி
கருமருவு முகினீர்சேர் திருக்குளஞ் செய்
    காதையதுங் கல்வெட்டாய்க் கழறுவாமே.

மனுநீதிகண்டசோழன் மரபில் வந்த வரராமதேவனுடைய மகன் குளக்கோட்டு மன்னன் திருக்கோணமலையிலுள்ள கோணேஸ்வரத்தில் திருப்பணிகள் செய்ததாக இப்பாடல் மூலம் அறியக் கிடக்கின்றது.

சேரர் வரலாற்றுக் காலவரிசைக் கணக்கின்படி கி. மு. 2700 ஆம் ஆண்டில் வாழ்ந்தவன் மனுநீதி கண்ட சோழன். அவனுடைய பரம்பரையில் வந்த பிரியவிருத்தன், வரராமதேவன், வீதிவிடங்கன், ஆகியவர்களுக்குப்பின் கி. மு. 2500 - 2560 வரை குளக்கோட்டன் அரசிருந்ததாகத் தெரியவருகின்றது. சேரர்வரலாற்றுக் காலவரிசைக் கணக்கின்படி கணிப்போமானால் குளக்கோட்டு மன்னன் திருப்பணி செய்த ஆலயம் இற்றைக்கு சுமார் 4500 வருடங்களுக்கு முற்பட்டதாயிருக்க வேண்டும். இதனைக் கோணேசர் கல்வெட்டுப் பாடலொன்றும் உறுதிப்படுத்துகின்றது.

திருந்து கலிபிறந் தைஞ்னூற் றொருபதுடன்
இரண்டாண்டு சென்ற பின்னர்
புரிந்திட்ப மாதமதி வீரைந்தாந்
தேதி திங்கள் புணர்ந்த நாளில்
தெரிந்தபுக மாலயமுஞ் சினகரமுங்
கோபுரமுந் தேரூர் வீதி
பரிந்திரத்ன மணிமதிலும் பாவநாசச்
சுனையும் பகுத்தான் மேலோன்.

கலியப்தம் இற்றைக்கு 5090 வருடங்கள். கலிபிறந்து 512ஆம் ஆண்டில் குளக்கோட்டு மன்னன் கோணேஸ்வரத்தில் திருப்பணிகள் செய்ததாகக் கல்வெட்டுப் பாடல் கூறுகின்றது. குளக்கோட்டு மன்னன் கி. மு. 2560 ஆண்டதாகச் சேரர் வரலாற்றுக் காலவரையறைக் கணிப்பில் காணப்படுகின்றது. எனவே குளக்கோட்டு மன்னனுடைய திருப்பணி இற்றைக்கு 4500 வருடங்களுக்கு முன் நிறைவேறியதென்பது ஏற்புடையதாய் அமைகின்றது. திருக்கோணேஸ்வரத்தில் திருப்பணிகள் செய்த குளக்கோட்டு மன்னன் அவ்வாலயத்தில் நித்திய, நைமித்திய பூசைகளும், ஆலய நிர்வாகமும் ஒழுங்குமுறை தவறாது நடைபெறுவதற்காக திட்டங்களை உண்டாக்கி அதனைக் கல்வெட்டில் எழுதுவித்தான். மன்னனுடைய வேண்டுகோட்படி கவிராஜர் இக்கல்வெட்டை பாடியருளினாரா? என்பது சிந்திக்கற்பாலது.

குளக்கோட்டு மன்னன் கோவிற் திருப்பணிகளை நிறைவேற்றிய பின் அக்கோவில்களைப் பராமரிப்பதற்காக 2700 அவணம் நெல் விதைப்புத் தரையை உண்டாக்கியதையும்,

அவற்றிற்கு நீர் பாய்ச்சுவதற்காக அல்லைக்குளம், வெண்டரசன்குளம், கந்தளாய்க்குளம் என்பனவற்றைக் கட்டுவித்ததையும், விளை நிலங்களிற் குடியிருத்துவதற்காக மருங்கூர், காரைக்கால், திருநெல்வேலி, மதுரை முதலிய இடங்களிலிருந்து குடிமக்களை அழைத்துவந்து குடியமர்த்தி அவர்களுக்கு மானியங்கள் வழங்கியதையும், கொட்டியாபுரப்பற்று, கட்டுக்குளப்பற்று, தம்பலகாமப்பற்று என்பவைகளிற் குடியமர்த்தப்பட்ட குடிமக்களின் கடமைகளும் உரிமைகளும் எவையென்பதையும், அவர்களின் தொழும்புகளையும், கோணேசர் கோவிலைப் பயபக்தியுடன் பரிபாலிக்கவேண்டிய முறைகளையும், கோவில் தொழும்பாளர்களின் கடமைகளையும் கூறுவது கோணேசர் கல்வெட்டு.

கோணேஸ்வரத்தின் பராமரிப்புக்காக உண்டாக்கப்பட்ட நிலபுலங்கள், கிராமங்கள், அங்கங்கே குடியமர்த்தப்பட்ட மக்களின் கடமைகள், கோவிற் தொழும்புகளுக்காக அவர்களுக்கு வழங்கப்பட்ட மானியங்கள், கோவிலுக்குரிய திரவியங்கள், தானியங்கள், எண்ணெய் வகைகள் முதலிய சேமிப்புகள், களஞ்சியப் பொருட்கள், என்பனவற்றைப் பெரியவளமைப் பத்ததியில் திட்டம்பண்ணியுள்ளபடி செயற்படுத்தும் கடமையை கனக சுந்தரப்பெருமாள் என்பவர் செய்துவந்துள்ளார். நிதியமைச்சர் போல இவர் செயற்பட்டு வந்திருக்கிறார்.

கட்டுக்குளப்பற்று, கொட்டியாபுரப்பற்று, தம்பலகாமப் பற்றுக்களில் குளக்கோட்டு மன்னனால் குடியமர்த்தப்பட்ட குடிமக்களில் ஒருசாரார் கோவிற் தொழும்பாளர்களாகவும், மற்றொருசாரார் குடிமக்களின் தொழும்பாளர்களாகவும் நியமிக்கப்பட்டார்கள். இதன் விரிவான வரலாறுகளைக் கோணேசர் கல்வெட்டிற் காணலாம். தொழும்பாளர்களின் கடமைகள் எவையெவை என்பதைக் கோணேசர் கல்வெட்டுக் கூறுகின்றது. இத்தகைய தொழும்பாளர்களுக்குக் குளக்கோட்டு மன்னன் வயல் நிலங்களை மானியமாக வழங்கியிருந்தார். இந்த மானியங்களைத் தொழும்பாளர்கள் பரம்பரை பரம்பரையாக ஆண்டு அனுபவித்தார்கள்.

போர்த்துக்கீசர் கோணேசர் கோவிலை அழிக்கும் ஆபத்துச் சூழ்ந்தபோது கோவிலில் இருந்த விக்கிரகங்களைத் தொழும்பாளர்களும், பிறரும் எடுத்துச்சென்று தம்பலகாமத்தில் வைத்து வழிபட்டுவந்தபடியால் அங்கு வாழ்ந்த தொழும்பாளர்கள் கோவிற் தொழும்புகளையும், குடிமக்களின் தொழும்புகளையும் முன்போலவே செய்துவந்தார்கள். இதனால் அங்கிருந்த வயல் நிலங்களைக் கல்வெட்டிற் கூறியுள்ள பிரகாரம் அத்தொழும்பாளர்கள் பரம்பரை பரம்பரையாக அனுபவித்து வருகிறார்கள்.

கோணேசர் கோவிலைப் போர்த்துக்கீசர் அழித்தபின் கட்டுக் குளப்பற்று, கொட்டியாபுரப்பற்றில் வாழ்ந்த தொழும்பாளர் கள் கோவிற்தொழும்பு செய்யும் வாய்ப்பை இழந்தபடியால் மானிய உரிமை காலக்கிரமத்தில் அழிந்துவிட்டது.

தம்பலகாமப்பற்றில் வாழ்ந்த தொழும்பாளர்கள் அடப்பன் தொழும்பு, புலவன் தொழும்பு, வைராவியார் தொழும்பு, மாலைகட்டித் தொழும்பு, இராசமேளம் அடிக்கும் தொழும்பு, பண்டாரியார் தொழும்பு, பண்டார வண்ணான் தொழும்பு, மண் உடையான் தொழும்பு, நாவிதன் தொழும்பு, மூப்பன் தொழும்பு, ஆசாரியார் தொழும்பு, குடும்பன் தொழும்பு எனப் பல்வேறு தொழும்புகளைச் செய்துவந்தார்கள். இவர்களுக்கு வழங்கப்பட்ட மானிய நிலங்கள் முறையே எலியடப்பன்வயல், புல்வன் வயல், வைராவியார் கீத்து, மாலைகட்டிக் கீத்து, மேள காரன் கீத்து, பண்டாரி கீத்து, பெரியவண்ணான் வயல், குய வன் கீத்து, அம்பட்டன் வெட்டுக்காடு, தம்பட்டகாரன் கீத்து, தட்டான்கீத்து, பள்ளன் வயல், என்னும் பெயர்களில் இன்றும் இருந்துவருகின்றன. அவைகளை அவ்வத் தொழும்பாளர்கள் அனுபவித்துவருகிறார்கள். திருக்கோணமலைக் கோணேசர் கோவிலுக்குக் குளக்கோட்டு மன்னன் ஏற்படுத்திய தொழும் பாளர்களுக்கு வழங்கப்பட்ட இந்த வயல் நிலங்கள் கல்வெட் டில் கூறப்படும் தொழும்பு முறைகளுக்கு பிரத்தியட்சச் சான்று களாக விளங்குகின்றன.

குளக்கோட்டு மன்னன் கோணேஸ்வர மானிலத்தின் ஆளு மையை மதுரைமா நகரிலிருந்து அழைத்துவரப்பட்ட தனியுண் ணாப் பூபால வன்னிமை பரம்பரையிடமும், காரைக்காலிலி ருந்து அழைத்துவரப்பட்ட செகராசநாத வன்னிமைப் பரம்பரை யிடமும், சோழநாட்டிலிருந்து அழைத்துவரப்பட்ட காராளசிங்க வன்னிமைப் பரம்பரையிடமும், மருங்கூரிலிருந்து அழைத்துவரப் பட்ட நடராசகுமாரசிங்க வன்னிமைப் பரம்பரையிடமும் ஒப்ப டைத்து மனுநீதி தவறாமல் ஆண்டு பராமரித்துவர ஏற்பாடு செய்திருந்தார். கோணேசர் கல்வெட்டில் குறிப்பிடப்படும் பெரியவளமைப் பத்ததியில் இவ்வரலாற்றின் விரிவான விளக் கம் இருந்ததாக அறியக்கிடக்கின்றது. இந்த வன்னிமைகள் கிழக்குமாகாணத்தில் திருக்கோவில் வரையும் ஆட்சிசெய்து வந் திருக்கின்றனர். இலிங்கபூமியாகிய திருக்கோணமலையில் தனித் துவமான ஆன்மீக ராச்சியமொன்று நடைபெற்றுவந்ததென்பது புலனாகின்றது. திருக்கோணமலைக்கு வடக்கே முல்லைத்தீவில் வன்னியராட்சியும், அனுராசபுரம், கண்டி, பொல்லநறுவை முதலிய இடங்களில் சிங்கள மன்னர்களுடைய ஆட்சியும் நடை

பெற்ற காலத்திலும் திருக்கோணமலையானது குளக்கோட்டு மன்னனுடைய திட்டப்படி தனித்துவமான ஆளுமைப்பிரதேச மாக இருந்துவந்தது. இதன் தெய்வீகச் சிறப்பை நோக்கியே சிங்கள மன்னர்களும் திருக்கோணேஸ்வரத்தை ஆதரித்து மானி யங்களும் வழங்கியிருக்கிறார்கள். இம்மாபெரும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் கனகசுந்தரப் பெருமாள், தனியுண்ணாப் பூபால வன்னிமைகளின் பொறுப்பதிகாரங்களையும், இத்திட் டத்திற்குத் தவறுகள் நேர்ந்தால் வரும் விளைவுகளையும் மற் றும் பல சட்டதிட்டங்களையுங் கூறுவது கோணேசர் கல்வெட்டு. இக்கல்வெட்டின் சில பாடல்களை இங்கே தருகின்றேன். முழுமை யான விபரங்களைக் கோணேசர் கல்வெட்டில் காண்க.

வைத்தகட்டுக் குளத்தூரார் அரன் தொழும்பு
செய்ய இந்துவெளியோர் மேலோர்
அத்தர் முன்னர் காப்பணிதல் முன்னீடு
விழா நடத்தல் அவணமாறு
சுத்தநெல்லாங் கொப்புவித்தல் அடையாயத்
தீர்வை கடல் வரத்துங் கோணை
அத்தனுக் கித்தனையு மென வருள் புரிந்தான்
அரசர்முடி யழுத்துந் தாளான்.

(திருக்கோணாசல வைபவம். 16)

வாரிவளஞ் சூழிலங்கை வேந்தரானோர்
மாகோணை நாதருக்கு வளவர் வேந்தன்
பாரிலங்கு பூசைதனக் கீந்த சொர்ணம்
பலவர்வு மெடுத்தழிவு பண்ணுவாரேல்
கூரியதோர் குட்டமுதல் வியாதிக் காளாய்
கூட்டுமன்றி நாட்டவர்கள் ஈட்டு செல்வம்
நேரிகரிற் கொள்ளை கொண்டு சூறையாடி
நீசருமிப் பதியாள்வார் நியமந்தானே.

(தி.கோ.வை. 43)

போனபின்னர் இலங்கை வடுகரச ராழ்வார்
போதிலங்கைப் பதிசிறிது பிடிப்பன் லாந்தா
தானிலங்கை யரசனுக்கு வேறோர் மன்னன்
தானுதவ மாற்றானைக் கடலிற் சேர்ப்பன்
தேன்மருவு மலங்கல்புனை வடுகராசன்
செப்பமுடன் மற்றெவரும் மகிழக் கோணை
மானபரன் தனைமணிப்பொற் கோயிலுள்ளே
மாதனத்து மீதுவைத்து வணங்குவானால்,

(தி.கோ.வை. 47)

மாறாத புனல்பாயும் திருக் குளமும்
வயல் வெளியும் வருந்திச் செய்தே
வீறாக என்மரபோற் கீயூாமல்
கோணமலை விமலர்க் கீந்தேன்
பேறான பெரியோரே இதற் கழிவு
நினைப் பவர்கள் பெட்பு நீங்கி
நீறாகப் போவரிது நிச்சயம்
கோணை நிமல ராணை.

(தி.கோ.வை. 52)

மேலே கூறிய பாடல்கள் திருக்கோணாசல வைபவத்திலுள்ள கோணேசர் கல்வெட்டிலிருந்து எடுக்கப்பட்டவை.

போனபின்னர் இங்கிலிசர் இலங்கை யாள்வர்
புகழாருங் கோணவரை நாதர் பூசைக்
கானவிதி தவறாமல் நடக்கும் பின்னாள்
அணிசேரு மாலையமு மமையும் செய்யும்
தானமதி நல்விளைவு மிகவு முண்டாம்
சனங்களுக்குத் துன்பமில்லை யின்பமாகும்
மானமுடன் பின்னிகழ்ச்சி யாவுங் கற்றோர்
மதித்தபடி யுரைத்திட்டேன் நியமந்தானே.

(கோ.கல்வெட்டு. 46)

வல்வை திரு. க. சின்னத்தம்பிப்பிள்ளை அவர்களால் பதிப்பிக்கப்பட்ட கோணேசர் கல்வெட்டில் மேற் கூறிய இப்பாடல் காணப்படுகின்றது.

அன்னவரன் பூசைவிதி அபிஷேகம்
விழாமுதல வழகாய்ச் செய்தால்
மின்னுநிறை விளக் கேற்றிக் கிராம
தேவதை பூசை விளங்கச் செய்தால்
இன்னலின்றி மாக்களெல்லாம் இருநிதி
சந்ததிகளுட னினிது வாழ்வார்
சொன்ன இந்த முறை தவறில் விளைவழிந்து
துன்பமுற்றுச் சோரு மாக்கள்.

(கோ.கல்வெட்டு. 54)

திரு. பொ. வைத்திலிங்க தேசிகர் அவர்கள் பதிப்பித்த கோணேசர் கல்வெட்டிலிருந்து மேற் கூறிய இப்பாடல் பெறப்பட்டது.

என்னிடமிருக்கும் கோணேசர் கல்வெட்டுப் பிரதிகளை ஒப்பு நோக்கி ஆய்வுசெய்யுங் காலங்களில் திருக்கோணமலை மாவட்

டத்தில் வேறும் கல்வெட்டுப் பிரதிகள் கிடைக்கக்கூடும் என்று தேடுதல் செய்தபோது நிலாவெளியில் வாழும் திரு. க. கெஜ ரெத்தினம் ஆசிரியர் அவர்கள் பின்வரும் பாடல்களைத் தந்து தவினார். இப்பாடல்கள் குச்சவெளிவாசியாகிய சின்னத்தம்பி பொன்னையா என்பவரிடமிருந்து பெற்றதாகவும் கூறினார்.

இருந்து சிவ திருப்பணிகள் இயற்றிவரு மன்னாளில்
இறைவன் ஓர்ந்தே
திருந்து திருநெல்வேலிச் சிவபெருமானுறை திருவாணில்யந்
தன்னில்
பரிந்து முதன்மைத் தொழில்கள் செய்வோரின் ஓர்குடியைப்
பண்பினோடும்
தெரிந்தழைத்துத் தென்கோணை ஆலயத்திற்கா முதன்மைச்
சிறப்பினீந்தே.

காராளர் குலதிலகனென உலகெலாங் களிக்குங் கருணை
மிக்கு
ஏராளனாங் கனகசுந்தரப் பேர்ப் பெருமான் என்றிலங்கச்
சூட்டி
நீராள வாவிசெறி நெடியகட்டுக் குளத்தூரு நிலைய மீந்து
சீராளனாம் பெரிய குளக்கோட்ட னவர்க்கின்ன செப்ப
லுற்றான்.

அங்கவரி னைங்குடிக்குப் பண்டாரத் தார்களென அரும்
பேர் சூட்டி
துங்கமுறு வயவேந்தன் அவற்குரிய பலதொழும்பும்
தொடர்புநாட்டிப்
பங்கமறச் செய்வித்தல் உனக்குரிய கடமையெனப் பலரும்
போற்ற
அங்கவன்கை செப்பேட்டுப் பெருவளமைப் பத்தியும்
அன்பினீந்தான்.

பலசிறப்பு மவர்க்கருளிப் பார்த்திபனும் மனமகிழ்ந்து
பண்பினோடும்
அலகில்வள மோங்கு நிலாவெளியூரிற் குடியேற அமைத்த
பின்னர்
நலமுறு சீர்தரு கனகசுந்தரப் பெருமானு நங்கை பாகத்து
இலகுமரன் ஆலயத்தில் தொழும்புமுறை நடத்தியிருந்தா
னன்றே.

குளக்கோட்டு மன்னனுடைய திட்டத்தின்படி திருக்கோண மலை மாவட்டத்திலுள்ள பல கிராமங்களில் வாழ்ந்த மக்கள்

கோணேசர் கோவிலுக்குரிய திரவியங்களை உற்பத்தி செய்து அனுப்பும் பணியாளர்களாக வாழ்ந்துவந்திருக்கிறார்கள். குளக்கோட்டு மன்னனுடைய மானியத்தை அனுபவித்து வாழ்ந்த குடிமக்கள் பயபக்தியுடன் கோவிலுக்கு நெய், பால், தயிர், மல்லிகைப்பூ, தாமரைப்பூ, தாமரைத்திரி, சந்தனக்கட்டை, எண்ணெய் வகைகள் என்பனவற்றை அனுப்பி வந்திருக்கிறார்கள்.

தம்பலகாமப்பற்று, கொட்டியாபுரப்பற்று, கட்டுக்குளப் பற்றுக்களிலிருந்து நெல் கொண்டுவரப்பட்டது. மல்லிகைப்பூவை அனுப்பிய இடம் மல்லிகைத்தீவு எனவும், பசுநெய் (ஆ + நெய்) அனுப்பிய இடம் ஆநெய்த்தீவு எனவும், சந்தனக்கட்டையை அனுப்பிய இடம் கட்டைபறிச்சான் எனவும், கொட்டியாபுரப் பற்றில் உற்பத்தியான பொருட்களைச் சம்பூரணமாகச் சேர்த்துக் கடல் மார்க்கமாக அனுப்பிய இடம் சம்பூர் எனவும், சேனைப் பொருட்களாகிய வாழைப்பழங்கள் வெற்றிலை முதலியவற்றை அனுப்பிய இடம் சேனையூர் என்றும், தாமரை மலர்களும், தாமரைத் திரியும் அனுப்பிய இடம் திரியாய் எனவும், யாகத்துக்குரிய குச்சுக்கள் தருப்பைகளை அனுப்பிய இடம் குச்சவெளி எனவும், யாகத்துச் சாம்பலைக் கொட்டிய இடம் சாம்பல்த்தீவு எனவும், கஜபாகு மன்னனுக்குக் கண்தழைத்த இடம் கந்தளாய் எனவும் இவ்வாறு கோணேஸ்வரத்தோடு தொடர்புபட்ட காரணப் பெயர்களையுடையதாகப் பல கிராமங்களைக் கொண்டமைந்தது திருக்கோணமலை மாவட்டம். குளக்கோட்டு மன்னனுடைய குடியேற்றத் திட்டத்துக்கு ராஜாதி ராஜனாயிருந்து அருளாட்சி புரிபவர் கோணேசப் பெருமான்.

# கோணேஸ்வரமும் தம்பலகாமம் ஆதி கோணை நாயகர் கோவிலும்

போர்த்துக்கீசர் கோணேசர் கோவிலை அழித்த காரணத்தால் கோவிலில் பூசை செய்துகொண்டிருந்த இருபாகை முதன்மைகளும் (சைவநாயக முதன்மை, வேதநாயக முதன்மை) தொழும்பாளர்களும், அடியார்களும் போர்த்துக்கீசரின் கையிலகப்படாமல் மறைத்து வைத்த திருவுருவங்களில் சில தம்பலகாமத்துக்கணித்தாயுள்ள களனி மலையில் வைத்து வழிபடப்பட்டு வந்தன. பின்னர் ஆலயம் கட்டப்பட்டு அத்திருவுருவங்கள் தம்பலகாமம் கோணேசர் கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டு விட்டன. கோணேசர் கோவிலுக்குரிய விவசாய நிலங்கள் பெருமளவில் தம்பலகாமத்திலிருந்ததாலும், கோணேசர் கோவில் தொழும்பாளர்கள் அங்கும் வாழ்ந்து வந்ததாலும், குளக்கோட்டு மன்னனுடைய திட்டத்தின்படி அங்குள்ள நிலங்கள் அவர்களுக்கு மானியமாக வழங்கப்பட்டிருந்ததாலும், நான்கு நூற்றாண்டு காலமாக கோணேசர் கோவிலுக்குரியதாயிருந்த விவசாய நிலங்கள் தம்பலகாமம் கோணேசர் கோவிலுக்கே உரியது போலாகிவிட்டது. தம்பலகாமத்திலுள்ள சான்றோர்களும், பெரியோர்களும் இந்த வரலாற்றைச் சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் நடுநின்று ஆழமாகச் சிந்தித்து அனுதாபத்தோடு செயல்படுவார்களானால் இரண்டு கோவில்களையும் சிறப்பாக நடாத்த முடியும். சிவச்சொத்தை அவச்சொத்தாக்காமல் தவச் சொத்தாகக் கருதித் திருத்தொண்டுகளும், திருப்பணிகளும் செய்யவேண்டியது இன்றியமையாததாகும்.

தம்பலகாமம் ''ஆதிகோணநாயகர் வரலாறு'' என்னும் நூலை திரு. க. வேலாயுதம் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அந்நூலிலுள்ள பாடல்கள் இவை.

''ஆதியாம் கோணை நாதன் ஆலயம் அழிந்திட்டாலும்
நீதியிற் சிறந்த குளக் கோடனின் தர்மம் குன்றா
சோதியாய்த் தம்பை நாட்டில் துலங்கிடுமாலயத்தில்
மாதுமை பங்கன் கோணை நாயகன் குடிபுகுந்தான்''

''கோணையில் நடந்ததைப்போல் குறைவின்றி இங்கும் செய்ய
ஆணைகளிட்டு மன்னன் ஆவன வெல்லாம் செய்தான்
ஆணவ மலத்தை நீக்கி அருள்தரும் அரன்தாள் போற்றி
சேனைகள் சூழ மன்னன் செங்கட நாடு சென்றான்''

இப்பாடல்களில் ஆதிகோணநாயகர் வரலாற்றைத் திரு. வேலாயுதம் அவர்கள் ஒழிவு மறைவின்றிக் கூறியிருக்கிறார்கள். தம்பலகாம மக்கள் இதனை நன்கு உய்த்து உணரவேண்டும். கண்டிப்பாகத் தம்பலகாமம் கோணேசர் கோவில் நிர்வாகஸ்த்தர்கள் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்.

திருக்கோணமலைக் கோணேசர் கோவிலுக்கு சிங்கள மன்னர்களுடைய பின்னணியும் பௌத்த சாசனமும் இருப்பதாக மகாவம்சம் கூறுகின்றதெனச் சிங்கள அரசாங்கத்தினர் அளிப்பு, துடைப்பு, சேர்ப்புக்கள் மூலம் புதிய சரித்திரம் படைத்திருப்பதைப் பத்திரிகைச் செய்திகளால் அறியக்கூடியதாயிருக்கின்றது. தம்பலகாமம் கோணேசர் கோவிலுக்கும் இப்படியொரு பின்னணியிருப்பதாக சிங்கள அரசாங்கம் பச்சைக்கொடி காட்டியிருக்கின்றது. பௌத்த மகா சங்கங்கள் ஆட்சியாளர்களின் தாராளமான நிதியுதவியுடனும், ஆதரவுடனும் இலங்கை முழுவதையும் பௌத்தமயமாக்க முனைப்போடு செயற்பட்டு வருகின்றன. அரசமரம் இருக்குமிடமெல்லாம் விகாரைகள் தோன்றுவதும், விகாரையில் அடிக்கும் மணியோசை கேட்கும் இடமெல்லாம் அந்தந்த விகாரைக்குச் சொந்தமாக வேண்டுமென்ற குறிக்கோளுடன் பௌத்த குருமார் மதவெறியோடு மதத்தை வளர்க்கின்றார்கள். சமதர்மம், தார்மீகம் என்ற உயர்ந்த தத்துவப் போர்வைக்குள் இன, மத, வேற்றுமை வளர்க்கப்பட்டு வருகின்றது. பாடசாலைச் சிறுவர்களுடைய பிஞ்சு உள்ளங்களிலும் இனமத வேற்றுமைக்கு வித்திடப்படுகின்றது. இன்றைய சிறுவர்கள்தான் நாளையப் பிரஜைகள் ஆதலால் எதிர்காலம் எப்படி அமையப்போகின்றது என்பதைத் தீர்க்க திருஷ்டியோடு அவதானித்துச் செயல்படச் சைவமக்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

சிவாலயங்களுக்கருகே பௌத்த விகாரைகள் கட்டப்பட்ட காலத்தில் தமிழ் - சிங்கள மன்னர்கள், மக்களுக்கிடையே சாதி, மத, மொழி காரணமான பிளவுகள் இருக்கவில்லை ஐக்கியமாக வாழ்ந்துவந்தார்கள். சிங்கள மன்னர்கள் தென்னாட்டுத் தமிழ் மன்னர்களின் சம்பந்திகளாகிப் பெண்கொண்ட உறவினாலும், உள்நாட்டுப் போர் நிகழ்ந்த காலங்களில் சிங்கள மன்னர்கள் தமிழ் மன்னர்களிடம் படைத்துணை பெற்ற காரணத்தினாலும், தமிழரும் சிங்களவரும் ஐக்கியமாய் வாழ்ந்தமைக்குச் சரித்திர வரலாறுகள் இருக்கின்றன. இதனால் சிவாலயங்களுக்கருகே பௌத்த விகாரைகளும் கட்டப்பட்டன. எனினும் மதக்கோட்பாடுகளில் இரண்டு மதங்களுக்குமிடையிலும் அனேக அடிப்படைத் தத்துவ பேதங்களுண்டு. பௌத்த மதம் பஞ்சசீலங்க

ளும், நிர்வாண நிலையும் என்ற தத்துவ முடிவோடு நின்றுவிட்டது. அதற்குமப்பால் தெய்வீக சக்தியொன்றிருப்பதையும், அந்தச் சக்தியால் மக்களின் விருப்பங்கள் நிறைவேறுகின்றன என்ற நம்பிக்கையும் பௌத்த மக்களிடம் இருந்ததால் சைவக் கோவில்களிலுள்ள கணபதி, முருகன், ஈஸ்பரன், சக்தி, விஷ்ணு முதலான சகல திருவுருவங்களையும், அவைகள் பிரதிஷ்டை செய்யப்பெற்ற சைவாலயங்களையும், வழிபடவும், ஆதரிக்கவும் பௌத்த மன்னரும் மக்களும் விரும்பினார்கள். இதனால்தான் சைவாலயங்களுக்குச் சமீபமாகப் பௌத்த விகாரைகள் இலங்கையின் எல்லாப் பாகங்களிலுங் காணப்படுகின்றன. பெரும்பாலும் தமிழர் வாழ்ந்த பிரதேசங்களில் இவ்வாறு காணப்படுகின்றன. சிங்கள தமிழ் மக்களிடையே இருந்த ஐக்கியம் அரசியல்வாதிகளின் சுயநலத்தினால் இன்று மொழி, மதம், இனம் மூன்றாலும் சிதைக்கப்பட்டுச் சிங்களவர்கள் தமிழர்களைப் பிரித்து வைத்திருக்கிறார்கள். இப்படியான சந்தர்ப்பத்தில் சைவாலயங்களுக்கருகில் பௌத்த விகாரைகளைக் கட்டி மேலும் குழப்பும் செயலை சிங்கள மக்கள் வேண்டுமென்றே செய்துவருகிறார்கள்.

கி. பி. இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டுகளில் நிகழ்ந்த பௌத்தமதத் தாக்கம் மீண்டும் நிகழ இடமளிக்கக் கூடாது. இந்தத் தாக்கத்தின் வேகத்தை கி. பி. ஏழாம் நூற்றாண்டு தொடக்கம் நாயன்மார்களும், சிவஞானச் சான்றோர்களும் முனைப்போடு எதிர்த்து அறிவுப்போரினால் வென்று சைவசமயத்தைக் காப்பாற்றினார்கள். இலங்கை சுதந்திரமடைந்தபின் ஆட்சியாளர்களின் தந்திரோபாயங்களுக்கும் கௌரவங்களுக்கும் தன்மானத்தையும், சுயசிந்தனையையும் இழந்த சைவப்பெரியார்களின் தாராளமனப்பான்மையினால்-சைவாலயங்களின் வரலாறுகள் குழப்பநிலை அடைந்திருக்கின்றன. கதிர்காமத்துக்கும், வதுளைக் கதிரேசன் கோவிலுக்கும், மற்றும் பல இந்துக் கோவில்களுக்கும் நேர்ந்த கெதி திருக்கோணேஸ்வரத்திற்கும் வரவேண்டுமா? தம்பலகாமம் ஆதிகோணைநாயகர் கோவிலுக்கும் வரவேண்டுமா? இரண்டு ஆலயங்களும் ஒருகுடைக்கீழ் தலை நிமிர்ந்து நிற்க முன்வரவேண்டும். செருக்கும், அகங்காரமும், பிடிவாதமும் ஆலய நிர்வாகத்திலிருந்து பின்தள்ளப்பட்டு அந்த இடத்தில் பக்தியும், பணிவும், ஆசாரமும் முன்வைக்கப்பட வேண்டும். அப்போதுதான் ஆலயங்கள் நிலையான சிறப்புடன் மக்களுக்குப் பயன்பட முடியும். வரட்டுக் கௌரவங்களுக்கும் பக்தி சிரத்தையற்ற ஆலயத் தொண்டுகளுக்கும், சாஸ்திர விரோதமான சமயச் சடங்குகளுக்கும் ஆலயத்தில் இடமளிக்கக் கூடாது. சமயப் பண்பாடுகளும், சாஸ்திர சம்மதமான விதி முறைகளும் ஆலயத்திற் பேணப்படவேண்டும்.

# கோணேஸ்வரத்தின் தொன்மையும் வண்மையும் கூறும் நூல்களும் அகச்சான்றுகளும்

மாதுமையம்பாள் சமேத கோணேசப்பெருமானுடைய திருவருள் துணிவோடு அடியேனுடைய சிற்றறிவுக்கு எட்டியவரையில் கோணேஸ்வரம் பற்றி இதுகாரும் சில விஷயங்களைக் கூறியுள்ளேன்.

> "நம்பிக்கை ஏற்படுவது கஷ்டமாக இருக்கலாம் ஆனால் நம்பிக்கையின் அவசியத்திலிருந்து மட்டும் நாம் தப்ப முடியாது"

என்று கூறுகின்ற தத்துவ கலாநிதி ராதாகிருஷ்ணன் அவர்களின் ஆழ்ந்த தத்துவச் சிந்தனையை உங்கள் முன் வைத்து திருக்கோணேஸ்வரத்தின் பெருமைகளையும், வரலாறுகளையும் அறிவதற்குதவிய நூல்களையும் சாஸ்திர, தோத்திரங்களிலுள்ள அகச்சான்றுகளையும் வருங்காலச் சந்ததியினருக்கு உதவும் வகையில் கீழே அட்டவணைப்படுத்தித் தருகின்றேன்.

1. திரிகோணாசலபுராணம். திரு. மா. முத்துக்குமாரபிள்ளை இயற்றியது பதிப்பு - 1909
2. தெட்சண கயிலாய புராணம். ஸ்ரீபண்டிதராஜர் அருளியது. திரு. பொ. வைத்திலிங்க தேசிகர் பதிப்பு - 1916
3. தெட்சண கயிலாய மகாத்மியம் வேதவியாசரால் பாடப்பட்டது. வதிரி. நாகலிங்க பண்டிதர் பதிப்பு - 1918
4. கோணேசர் கல்வெட்டு, கவிராஜர் இயற்றியது. திரு. க. சின்னத்தம்பிப்பிள்ளை பதிப்பு - 1887
5. கோணேசர் கல்வெட்டு, கவிராஜர் இயற்றியது. திரு. பொ. வைத்திலிங்க தேசிகர் பதிப்பு - 1916
6. கோணேசர் கல்வெட்டு, கவிராஜர் இயற்றியது. திரு. வே. அகிலேசபிள்ளை அவர்கள் தொகுத்தது. திரு. அ. அழகைக்கோன் அவர்கள் பதிப்பு - 1950
7. கோணேசர் கல்வெட்டு, கவிராஜர் இயற்றியது. (ஓலைச் சுவடி) மல்லிகைத்தீவு, திரு. மு. கனகசபை அவர்களிடமிருந்த பிரதி

8. திருக்கோணாசல வைபவம், திரு. அ. அழகைக்கோன் அவர்கள் பதிப்பு - 1950

9. கோணேசர் கல்வெட்டு, கவிராஜர் இயற்றியது. குச்சவெளியிலிருந்த ஏட்டிலிருந்து பிரதிசெய்யப்பட்டது. (தட்டச்சுப்பிரதி)

10. திருக்கரைசைப் புராணம், திரு. வே. அகிலேசபிள்ளை அவர்கள் பதிப்பு - 1893

11. திருக்கோணமலை மாவட்டத் திருத்தலங்கள், சைவப்புலவர் பண்டிதர் இ. வடிவேல் அவர்கள் பிரதேச அபிவிருத்தியமைச்சு வெளியீடு - 1981

12. கோணேசர் கோவில் வரலாறு, சைவப்புலவர் பண்டிதர், இ. வடிவேல் அவர்கள் திருக்கோணமலை இந்துதர்ம நூலக வெளியீடு - 1984

13. "IN THE DAYS OF SAMBASIVA" திரு. ரி. ஐசக் தம்பையா அவர்கள் - 1932

14. திருக்கோணேஸ்வரம். மண்டலாபிஷேக மலர்......... 1981 திரு. செல்லப்பா சிவபாதசுந்தரம், சிவயோகச் செல்வன் திரு. த. சாம்பசிவம் - இணைப்பாசிரியர்கள்

15. கோணேஸ்வரம், திரு. செ. குணசிங்கம் அவர்கள் வரலாற்றுத்துறைப் பேராசிரியர். இலங்கைப் பல்கலைக்கழகம் 1973

16. திருக்கோணேஸ்வரம், இணைப்பாசிரியர் வெளியீடு - 1963 புலவர் வை. சோமாஸ்கந்தர் அவர்கள், திரு. அ. ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள்

17. கோணேஸ்வரம், திரு. சி. எஸ். நவரெட்ணம் அவர்கள்1968

18. திருக்கோணமலைத் திருவுருவங்கள், குலசபாநாதன் அவர்கள் - 1954

19. TRINCOMALEE BRONZES, DR. W. BALENDRA - 1953

20. திருக்கோணேசர் ஆலய கும்பாபிஷேக மலர் - 1963 சைவப்புலவர், பண்டிதர் இ. வடிவேல் அவர்கள், புலவர் வை. சோமாஸ்கந்தர் அவர்கள் இணைப்பாசிரியர்கள்

21. திருக்கோணேசர் ஆலய கும்பாபிஷேக மலர் - 1981 சைவப்புலவர், பண்டிதர் இ. வடிவேல் அவர்கள், புலவர் வை. சோமாஸ்கந்தர் அவர்கள் இணைப்பாசிரியர்கள்

22. கோணேஸ்வரர் ஆலய வரலாறு, வீரகேசரி வெளியீடு 1963

23. திருக்கோணமாமலை, சுந்தரமஸ் லிமிடெட், கொழும்பு 1951

24. கோணமலை அந்தாதி, ஏட்டுப்பிரதி திரு. சி. ஆறுமுகப் புலவர் அவர்கள் இயற்றியது.

25. A GLIMPSE OF THIRUKONESWARAM Mr. V. VARATHA SUNTHARAM

26. கோவும் கோயிலும், திருமதி. ந. பாலேஸ்வரி அவர்கள் 1980

27. திருக்கோணேஸ்வரம் கோவிலின் தோற்றக்காலம் எது திரு. செ. குணசிங்கம் (எம். ஏ.) - 1972

28. தம்பலகாமம் ஆதிகோணநாயகர் வரலாறு, திரு. க. வேலாயுதம் அவர்கள் ஆக்கியது - 1980

29. விஷ்ணுபுத்திரன் வெடியரசன் வரலாறு, திரு. மு. சு. சிவப்பிரகாசம் அவர்கள் - 1988

30. யாழ்ப்பாண வைபவமாலை

31. திருக்கோணமலை திரு. கா. இரத்தினலிங்கம் - 1989

மேலே காட்டப்பட்ட புராண, இதிகாச, வரலாற்று நூல்களைத் தவிரவும், திருக்கோணேஸ்வரத்துக்கு வியாகரணசிரோமணி, திருமலை பூரண தியாகராசக் குருக்கள் அவர்கள் பாடிய 'கோணகிரீசாஷ்டகம்', புத்தூர் பெ. சின்னப்பு அவர்கள் பாடிய ''கோணேசுவரர் தோத்திரமாலை'' கலைப்பித்தன் அவர்கள் பாடிய ''திருக்கோணமலைக் கோணநாயகர் அருள்வேட்டற் பாக்கள்'' மதுரை முருகையன் அவர்கள் இயற்றிய ''திருக்கோணமலை மகளிர் சிவராத்திரி ஊஞ்சற்பாட்டு'' திரு. வே. அகிலேசபிள்ளை அவர்கள் இயற்றிய ''திருக்கோணைநாயகர் பதிகம்'' சைவப்புலவர், பண்டிதர். இ. வடிவேல் அவர்கள் இயற்றிய ''திருக்கோணேசர் திருவூஞ்சற் பதிகம்'' கழகப் புலவர், திரு. பெ. பொ. சிவசேகரனார் அவர்கள் இயற்றிய திருக்கோணேசர் பதிகம். புலவர்மணி. ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் இயற்றிய ''கன்னியாய்த் திருவே'' என்ற பதிகம். திருக்கோணமலை ரேனுகா மில் ஸ்தாபனம் வருடந்தோறும் தீர்த்தோற்சவத்தன்று வெளியீடு செய்துவந்த ''திருக்கோணேஸ்வரர் அருளமுதம்'' முதலிய பல சிறு நூல்களும் திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்றுச் சாசனங்களாக விளங்குகின்றன.

இற்றைக்கு ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இராவணன் வழிபட்ட தலம் திருக்கோணேஸ்வரம், இற்றைக்கு எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருமூலநாயனார் சிவபூமி என்று போற்றிய சிவஸ்தலம் திருக்கோணேஸ்வரம். அகஸ்திய முனிவர் தவஞ்செய்து அருள்பெற்ற சிவஸ்தலம் திருக்கோணேஸ்வரம். இத்தலத்திற்கு ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் ''நிரைகழல் அரவம் சிலம்பொலி அலம்பும்'' என்று தொடங்கும் திரிகோணமலைத் தேவாரத் திருப்பதிகத்

தினைப் பாடியருளினார். திருநெய்த்தானம் என்ற திருத்தலத்தைத் திருநாவுக்கரசர் பாடும்போது தக்காரடியார்கு என்ற திருத்தாண்டகத்தில் ''தெக்காரும் மாகோணத்தானே'' என்று திருக்கோணேஸ்வரத்தை நினைந்து பாடியருளியுள்ளார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய ''நிறைக்காட்டானே நெஞ்சத்தானே'' என்ற ஊர்த்தொகைத் திருப்பதிகத்தில் ''மறைக்காட்டானே திருமாந்துறையாய் மாகோணத்தானே'' என்று திருக்கோணேஸ்வரத்தை நினைத்துப் பாடியுள்ளார். பட்டணத்துப் பிள்ளையார் பாடியருளிய திவேகம்பமுடையார் திருவந்தாதியில் ''முக்கோணம் தொடர் கடுக்கை மலையன் வாழ் திருவாலங்காடு ஏகம்பம் வாழ்த்துமினே'' என்று திருக்கோணேஸ்வரத்தை முக்கோணமென வைத்துப் பாடியுள்ளார். பெரிய புராணம் பாடியருளிய சேக்கிழார் சுவாமிகள் ''ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில்'' என்ற பாடலில் ''மன்னு திருக் கோணமலை மகிழ்ந்த செங்கண் மழவிடையார் தமைப் போற்றி வணங்கிப் பாடி'' என்று திருக்கோணேஸ்வரத்தைப் பாடி நினைவுறுத்துகின்றார். பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாத சுவாமிகள் ''விலைக்கு மேனியில் அணிக்கோவை மேகலை'' என்று தொடங்கும் திருப்புகழ்ப் பாடலிலே ''நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர் திருக்கொணாமலைத் தலத்தாரு கோபுர நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில் வருவோனே'' என்று திருக்கோணேஸ்வரத்தை நினைந்துருகிப் பாடியருளினார். குருநமச்சிவாய தேசிகர் அருளிய நமச்சிவாய மாலையில் ''கோணமா மலையில் வாழும் கோதிலா ஆதியே நீ ஆணிலைப் பெண்ணுமில்லை அத்தனே நமச்சிவாய'' என்று கோணேஸ்வரத்தைப் பாடியுள்ளார். உமாபதி சிவாச்சாரியார் அருளிச்செய்த திருப்பதிகக் கோவையில் ''தண்டலை நீநெறி கோட்டூர்'' என்று தொடங்கும் பாடலில் ''எண்டரு நூற்றிருத்தென்பானீழத்தினிசை கோணமாமலை கேதீச்சர மென்றிரண்டே'' என்றும் ''கடைமுடி யோணகாந்தன்றளி'' என்று தொடங்கும் பாடலில் ''கோணமாமலை சீர்வன்னியூர்'' என்றும் திருக்கோணேஸ்வரத்தை நினைந்து நினைந்து பாடியுள்ளார்.

புராண, இதிகாச, கல்வெட்டு வரலாற்று நூல்களிலும் அவைகளின் பின்னர் எழுதப்பட்ட திருமுறைகள், அந்தாதி, பதிகங்கள், பிரபந்தங்களிலும் பல்வேறு சிறிய நூல்களிலும் கோணேஸ்வரத்தின் தொன்மையும் வண்மையும் போற்றிப் போற்றிக் கூறப்பட்டிருக்கின்றன. என் சிற்றறிவுக்கு எட்டிய வரை தேடியெடுத்துத் திரட்டித் தந்துள்ளேன். என் தேடுதலுக் கெட்டாதவை இன்னும் பல இருக்கலாம்.

இவைகளிற் கூறப்பட்டுள்ள விரிவான விளக்கங்களை அந்தந்த நூல்களில் கற்று அறிவதற்கும் அறிந்ததனை உய்த்துணர்ந்து அனுபவிப்பதற்கும் மாதுமையம்பாள் சமேத கோணேசப்பெருமான் அனைவருக்கும் திருவருள் பாலிக்கவேண்டுமெனப் பிரார்த்தித்து அடியேனுடைய ஆய்வுச்சிந்தனை மலர்களை அவனுடைய பாதாரவிந்தங்களில் சமர்ப்பித்து அமைகிறேன்.

''நம்பிக்கை ஏற்படுவது கஷ்டமாக இருக்கலாம் ஆனால் நம்பிக்கையின் அவசியத்திலிருந்து மட்டும் நாம் தப்ப முடியாது''

(தத்துவ கலாநிதி - ராதாகிருஷ்ணன்)

''ஆரணமுதலே அந்தமே நடுவே அத்தனே சுத்த வான் பொருளே''
நாரணன் முதலோர் இன்னமுங்காணா நக்கனே நாயக மணியே
வாரணிமுலையாள் மலைமகள் பாகா வாமனே சோம சேகரனே
சீரணி கடல்சூழ் தென்திசைக் கோணைச் சிகரிவாழ் தேவனே சரணம்.''

''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க''.

**"Calpentyn"**
21st November. 1831

To:

The Editor of the Ceylon Government Gazette.,

Among the various monuments of Hindu Antiquities found in Ceylon and which included the Late **Excellent and Learned Sir William Jones** to express an opinion that this island was peopled time out of memory by the Hindu race, the Temple which stood at Trincomalee is not to be forgotten. It would have remained a venerable relic to the present day, had not the misguided religious zeal of the Portugese razed it to the ground in 1622 to supply materials for one of their fortifications.

Some time ago through the kindness of a friend of mine, I was obligingly put in possession of a small manuscript poem composed in Tamil by **Kavi Raja Varothayan** (A celebrated bard among the ancient inhabitants of Ceylon) which though enveloped in a cloud of fables gives an ancient account of the origin and history of this sacred edifice, I was consequently induced to translate it and now have the pleasure of laying the same before the public for their information.

A King named **Manu Niti Kanda Solan** who ruled over the country of Solamandalam learning from the Kailasa Puranam the wonders of Thirukonanathamalai and the magnificient state of its inhabitants came over to this place. His son **Kulakotu Maharajah** who followed him thither afterwards raised the Temple, the Spire, the Pavilion and the Sacred Cistern in the year 512 of Kaliyuga on Monday the 10th day of Vaikasi (May 10th).

After having built the Temple the King finding that much difficulty was experienced in obtaining Rice and other things from Solamandalam for the daily use of the temple he meditated on means to obviate it and accordingly caused lands to the vast extent of 2800 avanams to be converted to the cultivation of Paddy and a Tank to be constructed in the vicinity for the

irrigation of the said lands both of which he consecrated to Konesar Swami. He afterwards proceeded to the village of Marukoor on the North on the 24th day of Panguni in the year 516 and brought from thence in a vessel to Thirukonanathamalai whom he settled there assigning to them the Temple and the lands appertaining to the same as a hereditory possession. To these seven families were entrusted the care of the Temple Treasury, the Regulations of the Income and Expenditure, the celebrations of the Festivals and the presentation of Silk vestments to the Kings. As more people were required for the service of the temple, the King went to the village of Karakode and by compulsatory means brought from thence on the 10th day of Vaikasi (of the year aforesaid) twenty more families whom he likewise settled at the place and appointed for the robing of the Lingam and to the offering of flowers at his Shrine, to sweeping and illuminating the Temple daily, cleaning the sacrificial altars, implements, performing libations of water, husking the paddy and smearing the floor of the Temple with cowdung, singing and playing on musical instruments, spreading cloth at annual sacrifices, hoisting and lowering the flagstaff on solemn days, preparing essence of sanderwood and purifying the ornaments of the Temple. These people were alow endowed with lands for their subsistence and five of them dignified with the title of Pandarathar.

As the first seven families who were settled there were brought willingly from their country they received the common name of Tanathar in contra distinction to the (20) twenty families who settled after them who were called Varipattar because they were impressed one out of every ten men in their country.

The King contemplating that there were none to judge these Tanathar and Varipattar in the event of any discension between them determined to appoint a Chief over them and accordingly proceeded to Madura and brought from thence a nobleman by the name of Taniunna

Poopalan whom he invested with the title of Vanniah and ordained him Governor of Thirukonanathamalai authorising him to punish offences by fine, imprisonment in chains, or by death according to their extent or magnitude strictly enjoying him to keep his institution inviolate and to conduct the affairs of the Temple and the ceremonies there of without omission.

The King further ordered that the citizens of Kadduculam should render their services in the temple, that the citizens of Nilaveli should preside over the celebration of the festival and supply the temple with 6 avanams of paddy, also pay tithes, taxes and customs of their country to the temple, that the citizens of Cottiyaram should furnish to the temple with betel, plantains, sanderwood, curdled milk, clarified butter, 100 avanams of rice and the seeds of amanaku, punnai, illuppai trees. The latter mentioned seeds should be turned into oil and delivered to the **Tottiyan of Kevulimunai** who after entering the quantity into the accounts of the temple should pour it into the reservoir where the same was to remain for lighting lamps. There were seven reservoirs built at the outside of the temple for the reception of oil. These were enclosed with walls which were provided with doors and a person appointed to overlook to them called Adikaree.

When the above orders had been given the King next proceeded to regulate the affairs of (the internal apartments of) the temple. He ordered the servants to illuminate it every day with 1000 lamps lighted with butter and 10000 lamps lighted with oil to be placed both inside and out and to sprinkle the ground with Rose water impregnated with musth and **sanderwood** and further ordered that they should at stated periods make oblations of rice mixed with milk curd to **Subramaniya** in 12 silver trays to **Pillayar** in 6 silver trays, to Siva in 64 silver trays, and to the rest of the deities in 20 copper trays. Besides these he directed oblations of several thousands balls of rice to be made and a lamp with a thousand (1000) camphor wicks to be burnt, on particular occasions.

After detailing the foregoing particulars relative to the foundation of the temple and the institution of the ceremonies **Kavi Raja Varothayan** proceeds to relate the prophecies delivered to by the King with reference to its future magnificience and the revolutions which it would undergo by foreign invasions but these are so incongruous and confounded with fable as is common with Hindu production that I have omitted the whole of it and resume the translation as follows:-

The King (one day) after having performed ablutions in the sacred pool and made his ablutions of prayer wearing around his neck and head a Wreath of Oththradcha beads painted his forehead with the Holy Ashes, went round the Court of the temple holding in his hand a Rosegay of flowers and then entered into the Sanctum Sanctorum. He remained there so long that it raised the suspicion of his courtiers who proceeding inside to look for him found that he had become metamorphosed into a **Lotus Flower at the Shrine of the God** upon which they made great lamentation. This story of the King's transformation is akin to what is related of the disappearance of Romulus and like that Prince Kulakottu Maharajah also became counted among the Gods and sacrifices were accordingly made to him by the inhabitants of Thirukonanathamalai.

Many years after the metamorphosis of Kulakottu Maharajah a certain King called Gajabahu Maharajah made a pilgrimage to Thirukonanathamalai. On arrival finding that Pasupadar who had hitherto ministered in the temple were dead and none had succeeded them. He was plunged in grief and invoked the deity to repair the breach which death had made in the priesthood. While the King was thus engaged in acts of devotion he perceived 2 Brahmin youths floating on the surface of the ocean with the Vedaha in their hands. As soon as he saw them greatly delighted he arose from his seat advanced towards them into the sea and seizing them one by each hand brought them to the shore calling them at the same time by the epithet of 'Irapathar' (the

Right and Left hand as he had held them) He conferred on them the Priesthood of the temple and gave direction to the Vanniya, Tan athar and Varipathar to respect and obey them and to render their services to them.

Gaja Bahu Maharajah sent for the five tribes of Town servants namely, smiths, potters, barbers, workers and paraiyahs from Solamandalam and fixed them at Thiru-konanathamalai allocating to them land and paddy fields for their maintenance.

Afterwards, he caused a Tank to be built at Cotti-yaram in the neighbourhood of the River Mahaweli Genga and Paddy lands to the extent of 6350 avanams to be improved, and grooves of punnai, Illuppai and Amanaku and Coconut trees to be planted thereabout. He also gave orders that one - tenth part of their produce should be appropriated for the service of the temple. This he performed in order to expiate a sin which consisted in his having once entertained the idea of pulling down the Saiva place of worship and of building one of Buddha in its room.

Gaja Bahu Maharajah afterwards called together the citizens of the country and having charged them to pre-serve the institutions of Kulakottu Maharajah Inviolate, he dignified the Erupathar Brahmins with the title of Rajoo Guru or Sovereign Pontiff and entrusting to them all the jewels and treasurers of the temple returned to his Capital Anuradhapura whereafter reigning for a long time he at length entered the Bliss of Siva.

Whab

உ

ஓம் நமசிவாய

# திருக்கோணமலைத் திருப்பதிகம்

## திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச்செய்தது

பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

1. நிரைகழல் அரவம் சிலம்பொலி யலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்கும்
கோணமாமலை அமர்ந்தாரே.

2. கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பார்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடும் உடனாய்க்
கொடிதெனக் கதறும் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமும் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றும்
கோணமாமலை அமர்ந்தாரே.

3. பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாகமாக
முன் கலந்தவர் மதின்மேல்
தனித்த பேருருவ விழித்தழல் நாகந்
தாங்கிய மேரு வெஞ்சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரே.

4. பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவிவேண்ட முன்கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெளித்துமுன் அரற்றுஞ் செழுங்கடல் தரளம்
செம்பொனும் இப்பியும் சுமந்து
கொழித்துவன் திரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமாமலை அமர்ந்தாரே.

5. தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண் பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரே.

6. பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடாவண்ணம் உதைத்தவர்க் கருளும்
செம்மையார் நம்மை யாளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கை வண்செருந்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமாமலை அமர்ந்தாரே.

7. பாடல் கிடைக்கவில்லை.

8. எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்
ஏத்திட ஆத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வம் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருள் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும் புகழாளர்
கோணமாமலை அமர்ந்தாரே.

9. அருவரா தொருகை வெண்டலை ஏந்தி
அகந்தொறும் பலியுடன் புக்க
பெருவராயுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணும் பிரமன்
இருவரும் அறியாவண்ணம் ஒள் எரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்த நன் மாற்குங்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமாமலை அமர்ந்தாரே.

10. நின்றுணுஞ் சமணும் இருந்துணும் தேரும்
நெறியலாதன புறங்கூற
வென்று நஞ்சுண்ணும் பரிசினர் ஒருபால்
மெல்லியளொடும் உடனாகித்
துன்றுமொன் பெளவ மெளவலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொன் கானல் வாசம் வந்துலவும்
கோணமாமலை அமர்ந்தாரே.

11. குற்றமில்லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞான சம்பந்தன்
உற்ற செந்தமிழார் மாலை ஈரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமுமாகித் தொல்வினை அடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே.

திருச்சிற்றம்பலம்.

# திருக்கோணமலைத் திருப்புகழ்

**அருணகிரிநாத சுவாமிகள் அருளியது.**

விலைக்கு மேனியி லணிக்கோவை மேகலை
தரித்த ஆடையு மணிப்பூணு மாகவே
மினுக்கு மாதர்க ளிடைக்காம மூழ்கியே
மயலூறி

மிகுத்த காமிய னெனப்பாரு ளோரெதிர்
நகைக்கவே உடலெடுத்தே வியாகுல
வெறுப்பதாகியே உழைத்தே விடாய்படு
கொடியேனைக்

கலக்கமாகவே மலக்கூடிலே மிகு
பிணிக்குளாகியெ தவிக்காமலே உனை
கவிக்கு ளாய்சொலி கடைத்தேற வேசெயும்
ஒருவாழ்வே

கதிக்கு நாயக உனைத்தேடியே புகழ்
உரைக்கு நாயெனை அருட் பார்வையாகவே
கழற்கு ளாகவே சிறப்பான தாயருள்
தரவேணும்

மலைக்கு நாயக சிவக்காமி நாயகர்
திருக் குமாரனே முகத்தாறு தேசிக
வடிப்ப மாதொரு குறப்பாவையாள் மகிழ்
தருவேளே

வசிட்டர் காசிபர் தவத்தான யோகியர்
அகத்ய மாமுனி இடைக்காடர் கீரனும் -
வகுத்த பாவுறு பொருட்கோல மாய்வரு
முருகோனே

நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக்கொ ணாமலை தலத்தாரு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில்
வருவோனே

நிகழ்த்து மேழ்பவ கடற்சூறை யாகவே
எடுத்த வேல்கொடு பொடித்தூள தாயெறி
நினைத்த காரியம் அநுக்கூலமே புரி
பெருமாளே.



உ

# திருக்கோணேசர் போற்றித் திருப்பதிகம்.

ஆக்கியோன்:
சைவப்புலவர், பண்டிதர் - இ. வடிவேல் அவர்கள்.

1. கருவாகி யெங்குங் கலந்தாய் போற்றி
   கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
உருவாகி யருவாகி உறைவாய் போற்றி
   உள்ளதுமாய் யில்லதுமாய் ஒளிர்வாய் போற்றி
பெருவாழ்வு தந்தருளும் பெம்மான் போற்றி
   பிறைசூடும் பிஞ்ஞகனே போற்றி போற்றி
திருவாகி நிறைகின்ற தேவே போற்றி
   திருக்கோண மலையானே போற்றி போற்றி.

2. ஆதியொடு அந்தமிலா அரனே போற்றி
   ஆனந்தத் தேன்சொரியும் அமுதே போற்றி
பாதிமதி சூடுபரம் பொருளே போற்றி
   பரமபதம் அருளுதிருப் பாதா போற்றி
மாதுமையாள் பங்கினனே போற்றி போற்றி
   மறைநான்கு மோதுதிரு வமயா போற்றி
நீதகலத் திருவருளாய்த் திகழ்வாய் போற்றி
   திருக்கோண மலையானே போற்றி போற்றி.

3. அங்கமொடு ஆகமமு மானாய் போற்றி
   அங்கிங் கெனாதபடி நின்றாய் போற்றி
பங்கயத்தோன் அறியாத பரனே போற்றி
   பகலவனைப் பல்லிறுத்த பரமா போற்றி
செங்கமலத் திருப்பாதம் உடையாய் போற்றி
   சிவசக்தி வடிவாகி அமர்ந்தாய் போற்றி
திங்களொடு கங்கையணி சடையாய் போற்றி
   திருக்கோண மலையானே போற்றி போற்றி.

4. வெளிக்குள் வெளிகாட்டும் வேதா போற்றி
விண்ணவரும் நண்ணரிய விகிர்தா போற்றி
களிக்குந் தமிழ்மறைகள் அளிப்பாய் போற்றி
காளியொடு ஆடிமகிழ் கடவுள் போற்றி
ஒளிக்குள் ஒளியாகி நின்றாய் போற்றி
உள்குவார் ஒள்ளத்தே உறைவாய் போற்றி
தெளிக்குந் திருமறையின் தெளிவே போற்றி
திருக்கோண மலையானே போற்றி போற்றி.

5. பரமசிவனாய்க் கயிலை அமர்ந்தாய் போற்றி
பார்வதியாள் பங்கினனே போற்றி போற்றி
வரமருளுங் காளத்தி வரதா போற்றி
வருஞானப் பூங்கோதை மணாளா போற்றி
மருவுசிராப் பள்ளியுறை தாயுமானவ போற்றி
மட்டுவார் குழலியொடு மகிழ்வாய் போற்றி
சிரமுயருங் கோணையமர் மாதுமை போற்றி
கோணேசப் பெருமானே போற்றி போற்றி

6. வானாகி வளியாகி நின்றாய் போற்றி
வளர்தீயு நீரொடுமண் ணானாய் போற்றி
கோனாகி ஆட்கொள்ளுங் குருவே போற்றி
குவலயத்தே உயிர்க்குயிராய் நின்றாய்போற்றி
ஊனாகி உள்ளமுமாய் உறைவாய் போற்றி
உள்ளத்தே உதிக்கின்ற ஒளியே போற்றி
தேனாகித் தித்திக்குந் தெளிவே போற்றி
திருக்கோண மலையானே போற்றி போற்றி.

7. மானோடு மழுவேந்தி நின்றாய் போற்றி
மங்கையுமை பாகனாய் மகிழ்ந்தாய் போற்றி
கூனாரும் பிறைச்சென்னி உடையாய் போற்றி
கொன்றையொடு கங்கைபுனை சடையாய் போற்றி
வானோருங் காண்டற்கு அரியாய் போற்றி
வளர்கின்ற முக்கண்கள் உடையாய் போற்றி
தேனூறுஞ் செய்யமலர்ப் பாதா போற்றி
திருக்கோண மலையானே போற்றி போற்றி.

8. வம்புசெறி தும்பைபுனை சடையாய் போற்றி
வான்பிறையும் வாளரவு மணிந்தாய் போற்றி
என்பினொடு கொம்பணிந்த மார்பா போற்றி
ஏழிசையும் இன்தமிழு மானாய் போற்றி
கம்பமதக் களிற்றுரிவை போர்த்தாய் போற்றி
கபாலத்தே ஏற்றுண்டு களித்தாய் போற்றி
தென்கயிலைத் திருக்கோணை அமர்ந்தாய் போற்றி
திருக்கோண மலையானே போற்றி போற்றி.

9. இராவணனுக் கருள்புரிந்த இறைவா போற்றி
இமையவர்கள் ஏத்துகின்ற ஈசா போற்றி
அராப்புனையுந் திருமேனி உடையாய் போற்றி
அருமறைகள் தேடுகின்ற அரனே போற்றி
தராதலங்கள் மூன்றினையுந் தகர்த்தாய் போற்றி
தக்கனையு மெச்சனையும் அழித்தாய் போற்றி
திராவிடமும் தெய்வமொழி ஆனாய் போற்றி
திருக்கோண மலையானே போற்றி போற்றி.

10. சம்பந்தன் செந்தமிழை அணிந்தாய் போற்றி
சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
அம்புந்து கண்ணுமையாள் கூறா போற்றி
அடியேனை ஆட்கொண்டு அருள்வாய் போற்றி
நம்பனடி யார்க்கருளும் நாதா போற்றி
நால்வேதம் ஆறங்க மானாய் போற்றி
தென்கயிலை நாதனே போற்றி போற்றி
திருக்கோண மலையானே போற்றி போற்றி.

## திருக்கோணேசர் அருள்வேட்டற் பதிகம்

1. வெளிக்குள் வெளிகாட்டும் வேதன் தன்னை
விண்ணவர்கள் வேள்விக்கே விருந்தாய் நின்று
களிக்கும் பிரான்தன்னைக் கயிலையானைக்
கபாலத்தே யேற்றுண்டு களிப்பான் தன்னை
ஒளிக்குள் ஒளியாகி உலக மெல்லாம்
ஓவாது ஒளிர்வானை ஒப்பில் செல்வம்
கொளிக்குந் திருக்கோண மலையான் தன்னைக்
கும்பிட்டே யன்புற்று வாழ்வாய் நெஞ்சே.

2. பண்டுன்னை நால்வருரை செய்தபாவின்
பண்பொன்று மறியாத படிறன் தன்னைக்
கண்டின்று வீடுற்றுக் கருத்தை யுந்தன்
கழலடிக்கே வைத்திட்டுக் கனியு முள்ளங்
கொண்டுன்னைக் காதலித்துக் குருவா யேற்றுக்
குவலயத்தே கும்பிடவு மறியே னையா
இன்றென்னை யெடுத்தாண்டு கொள்ள இன்னும்
இரங்காத தென்னோ என் கோணையப்பா.

3. காலமெலாம் நின்னடிக்கே யன்பு பூண்டு
கருணையெனும் திருவமுதை யள்ளியுண்டு
சாலவும் நின் திருக்கோயில் வாயில்மீது
சார்ந்திடவு மறினாத சகடன் தன்னை
நீலமணி மிடற்றாயுன் செம்பொற் பாதம்
நெஞ்சினிலே வைத்து நிதம் சிந்தை செய்ய
வேலைசூழ் கோணமலை யமர்ந்த கோவே
விருப்புற்றேன் வேண்டுவன அருளுவாயே

4. திருவாகி நிறைகின்ற தேவ தேவே
தெவிட்டாத ஆனந்தத் தேனே ஞானக்
கருவாகி யென்னுள்ளே கரந்து நின்று
கருத்தறிந்து முடிக்கின்ற கருணையோனே
உருவாகி அருவாகி உலக மெங்கும்
உள்ளதுமா யில்லதுமாய் உயிருக்கெல்லாம்
பெருவாழ்வு தரவல்ல பிரானே கோணைப்
பெருமானே பிஞ்ஞகனே சரணமையா.

5. கொண்டாடு மடியருளங் களிக்கக் கோணைக்
கோவேயுன் திருவருளாற் குளிர்ந்த முன்னீர்த்
தண்டரள முத்தினொடு சங்கந் தன்னைத்
தரணிமிசை வீசியலைக் கரத்தை யோச்சிக்
கண்டவர்கள் மனங்குழையக் கருத்தையள்ளும்
கருணையெனும் வாரிதிசூழ் கயிலை நாதா
வண்டாடு மலர்க்குழலி உமையினோடு
வந்தருளி யெனையாள வேண்டு மையா.

6. நாதாவுன் பாதமலர் நயந்து போற்றும்
நாரணனும் நான்முகனும் நாடிக் காணாப்
பாதார விந்தமதைப் பணிந்தென் னாளும்
பனிமலரிட் டிறைஞ்சுகிறேன் பரகதிக்கு
ஆதாரமான பரம் பொருளே யாதி
ஆகமங்க ளருமறைக்கு மப்பால் நிற்கும்
வேதாவென் வினையறுக்கும் விமலா கோணை
வெற்பிலுறை யற்புதனே சரணமையா.

7. அருந்தவத்தால் வந்துதித்து அகிலம்போற்ற
அருமறையா வர்ச்சித்த மார்க்கண்டேயன்
பரிந்துனது பாதமலர் பணிந்திறைஞ்சப்
பலவினைக ளறுத்தவனைக் காப்பதற்காய்க்
கரும்பகட்டி லேறிவருங் காலன் தன்னைக்
காலாலே யுதைத்தழித்த கருணா மூர்த்தி
பெருங்கருணைத் தடங்கடலே பிரானே நீயென்
பிழைபொறுத்து ஆட்கொள்ள வேண்டுமையா.

8. சிலையெடுத்து மூவுலகுஞ் சேர நெற்றித்
திருக்கண்ணா லெரித்தழித்த சிவனே யுந்தன்
அலையெடுத்த மலையெடுக்கு மாசையோடு
அசைத்தெடுத்த இராவணனின் அகந்தை சிந்த
கலையெடுத்த கையுடையான் கங்கை சூடி
காலெடுத்து மெல்விரலா லூன்றிக் காத்த
நிலையடுத்த நினைவெடுத்து நிற்கின்றேனை
நின்னருளாற் காத்திடுவாய் கோணைநாதா.

9. அத்தாவுன் பொற்பா மடையப்பெற்று
ஆனந்த வாரிதியில் மூழ்கி நிற்குஞ்
சித்தாந்த முணராத சேயேன் நாயேன்
சிறுமையெலாம் பொறுத்தாளும் சிவனே
ஞான
முத்தான முழுமுதலே முடிவிலாத
மும்மலங்க ளறுத்தெனையு மாளுமையா
புத்தனொடு சமணுரைக்கும் பொய்மையெல்லாம்
புறந்தள்ளி ஆண்டருளும் கோணை நாதா.

10. சப்திக்குஞ் சாகரஞ்சூழ் கோணைக் குன்றில்
சக்திமா துமையினொரு பாகனாகி
முத்திக்கு வித்தாகி முதல்வனாகி
மூவர்க்கும் மேலான மூர்த்தியாகிச்
சித்திக்குஞ் சிவஞானச் செல்வமாகிச்
சிவனடியார்க் கருள்சுரக்கும் சித்தனாகி
எத்திக்கும் ஆண்டருளும் இறைவா எந்தன்
இதயத்தை ஆண்டருள்வாய் கோணைநாதா.

ஆக்கம்:

சைவப்புலவர் - பண்டிதர்
இ. வடிவேல் அவர்கள்

உ

# கோணேசர் இருவிழிக்கும் ஒளியீந்த திருப்பதிகம்

## இருவிழி: அகக்கண், புறக்கண்

### வெண்பா

அஞ்சுமுகந் தோன்றி லானைமுகந் தோன்றும்
அஞ்சலென வைந்து கரந் தோன்றும் -
பஞ்சனைய
மஞ்சுதவழ் மாகோண மாமலை விநாயகனை
நெஞ்சில் நினைவார் தமக்கு.

### விருத்தப்பா

1. திருமலியுந் தென்கயிலைக் கோணை நாதர்
திருவடியே தஞ்சமென வாழுமன்பர்
குருமணியே குளக்கோட்டு மன்னன் செய்த
கோதறுநற் திருக்கோயில் மேய எங்கள்
அருமணியே ஆனந்தத் தேனே என்றும்
அலையாத இன்பமதை யருளும் ஞானப்
பெருமணியே பேதையேன் பிழைகளெல்லாம்
பொறுத்தென்னைக் காத்திடவே
வருவாயப்பா.

2. அற்புதனே யொப்பில்லா வமுதே யன்பர்
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவிக்கும்
சிற்பரனே சிவஞானத் தேறல் தன்னைச்
சீகாளிப் பிள்ளைக்கு நல்கி யாண்ட
தற்பரனே தென்கயிலைக் கோயில் வாழும்
தவமணியே தாயாகி யருள் சுரக்குங்
கற்பகமே கண்ணாகிக் கண்ணுளாடுங்
கருமணியே கண்ணொளியைக் காக்கவாராய்.

3. வாராதிருப்பதுவுன் திருவுள்ளமோ வன்றி
வந்தென்னைக் காப்பதுதா னருளுள்ளமோ
ஆரேனுந் தமையடைந்தார் தம்மை யெல்லாம்
ஆண்டருளு மாண்டவனே யமரர் கோவே
காராடுந் தென்கயிலைக் கோணைக் குன்றில்
கடலாடக் களித்துறையுங் கடவுளே நான்
பேராயிரம் பரவிப் பிதற்று கின்றேன்
பிழைபொறுத்து எனையாள வேண்டுமையா.

4. ஐம்புலனை யடக்கிடவும் வல்லே னல்லேன்
அஞ்செழுத்தை யோதிட்வும் வல்லே னல்லேன்
செம்பொருளின் திறமுணர வல்லே னல்லேன்
சிவஞான சித்திகளு முள்ளே னல்லேன்
கும்பமுலைத் தோதையுமை மாது தன்னைக்
கூறுடைய கோணேச நாதனே யென்
னொளியைக் காத்தருள வேண்டு மையா
கடவுளே யுன்னடியைக் கைவிடேனே.

5. கைவல்ய நவந்த முண்டே னல்லேன்
கற்றதனை யுற்றுணர வல்லே னல்லேன்
சைவநெறி முற்றுணரேன் சமய ஞானத்
தத்துவங்க ளத்தனையும் பெற்றே னல்லேன்
தெய்வமே சரணென்று கண்ணைக் கீண்ட
கண்ணப்ப னொப்பதோ ரன்ப னல்லேன்
செய்வதொன் றறிந்திலேன் சிவனே கோணைச்
சிவக்கொழுந்தே சித்தவிழி திறக்கச்
செய்வாயே.

6. செய்யமலர்த் தாளுடையாய் தாளின் மீது
சிலம்புடனே தண்டையுமொன் றுடையாய்
செம்பொற்
கைகளிலே மானோடு மழுவுங் கொண்டாய்
கர்ண குண்டலங்களுடன் தோடும் பூண்டாய்
பையரவ மணிந்த சடைக் சற்றை மீது
பசுந்தளையுங் கங்கையொடு மதியுஞ்சூடி
வெய்யவினை தீர்த்தருளுங் கோணை நாதா
ஐயனே அகத்தொளியை அருளுவாயே.

7. அருள் பொழியுங் கண்களொரு மூன்றுங் கொண்டு
அகிலாண்ட கோடியெலா மாளுகின்றாய்
மருளுடைய அரக்கரொரு மூவராண்ட
மாபெரு முப்புரமதனை மடியச்செய்து
திருவருளா லொருவர் நந்தி தேவராயும்
திருக்கோவிற் காவலாய் மற்றிருவர் தன்னைக்
கருமநெறிக் கருள் புரிந்த கடவுளேயென்
இருவிழிக்கும் ஒளிதந்து காக்க வேண்டும்.

8. காத்தருளுங் கண்ணுதலே கயிலை நாதா
கலங்குகின்றேன் உன்கருணைப் பிச்சைக்காக
வேர்த்தாலும் புரண்டாலும் விழுந்தாலும் நான்
விடையவனே யுன்னடியே தஞ்சமென்பேன்
ஆர்த்தாடு மிராவணன்தன் னகந்தை வீய
அணிவிரலா லடர்த்தவனை யாண்ட கோவே
தீர்த்தனே தென்கயிலைக் கோணை நாதா
திருக்கண்ணா வகக்கண்ணைத் திறப்பாய்
நீயே.

9. திறவாத திருக்கதவந் திறப்பித்தாய் நீ
திருமறைக்கா டுறைகின்ற தெய்வமும் நீ
பெருவான முகடதனைப் பிளந் துயர்ந்த
பெருங்கயிலை காளத்தி சீராப்பள்ளி
குறையாத வளம் பொழியுங் கோணைவெற்புங்
கோயிலாக் கொண்ட திருக் கோணைநாதா
பெருவாழ்வை அருணகிரிக் களித்த வள்ளற்
பெருமானே யென்கண்ணைத் திறப்பாய் நீயே

10. பார்புரந்த திருவடியும் பவளவாயும்
பாவையரைக் கிறிசெய்யும் பசியதுடியிடையும்
கார்புரந்த கருங்குழலுங் கமலக் கண்ணுங்
கடைவிழியிற் கனிகின்ற கருணைப் பார்வைச்
சீர்புரக்கு மபயமொடு வரதக் கையுஞ்
சிறந்திலங்கு மாதுமையைப் பாகங் கொண்டு
பார்புரக்குந் தென்கயிலைக் கோணமூர்த்தி
பரிந்தெனதுள் விழிக் கொளியை ஈய
வேண்டும்.

11. ஈராறு கரமுடைய குமரன் தன்னை
ஈன்றனையுன் நெற்றி யொற்றைக்
கண்ணினாலே
ஓராறு முகங்களிலு முலக முய்ய
ஒன்பதொடு மூன்று விழி தந்த நாதா
ஆறாடு சடைமுடியெம் மண்ணலே யென்
அருவிழிக்கு மொளிதந்து அருளாயாசில்
ஆரோடு நானுரைப்பேன் கோணை நாதா
அடியேனுக் கருள்சுரந்து ரட்சிப்பாயே.

12. இரக்கமே பெரிதுடையா யிமவான் பெற்ற
ஏந்திளையாள் பிடியாக அவளைக் காதல்
புரக்கவே களிறாகிப் புணர்ந்து பிள்ளைக்
கஜமுகவக் கடவுளை நீ தந்தா யன்பு
சுரக்கவே தாயாகி வந்த கோணைத்
தலைவரே யுன்னடிக்கே தஞ்சமானேன்
அரக்கனுக்கு மருள்செய்தா யடியேன் மீதும்
அருளிலையேல் என்செய்வே னேழையேனே

13. செய்வதொன் றறியாமல் திகைக்கின்றேன் யான்
செய்தபிழை யத்தனையும் பொறுப்பா யப்பா
வெய்யவினைக் காளாகி வெம்புகின்றேன்
வித்தகனே புத்தி தடுமாறிப் போனேன்
ஐயனே யுன்கருத்தை யறிந்திடாமல்
அலட்சியமாய் வாழ்பவனு மல்லேனல்லேன்
செய்யனே தென்கயிலைக் கோணை வாழும்
சிற்பரனே யற்புதனே காப்பாய் நீயே.

14. காக்கின்ற கடவுளேயெங் கருணா மூர்த்தி
காளியொடு மாலங்கா டதனி லாடி
ஆர்க்கின்ற வேதவொலி நாளு மோங்கும்
அம்பலத்தே சிவகாமி யுடனே யாடிப்
பார்க்கின்ற இடமெல்லாம் பஞ்ச பூதப்
படையாகி யாடுகின்ற பரனே காலன்
ஈர்க்கின்ற போதென்னுட் புகுந்து நின்று
இதயமணி மன்றினிலே யாடுவாயே.

15. ஆடுகின்ற சிவக்கொழுந்தே யம்மை யப்பா
அயனொடுமா லறியாத அருண ஜோதி
கூடுகின்ற மெய்யடியார் கூட்டமுய்யக்
கொய்மலர்ச்சே வடியிணையே குறுகி நின்று
பாடுகின்றேன் பணிகின்றேன் பரவுகின்றேன்
பரஞ்சுடரே தென்கயிலைப் பரனே நாளும்
தேடுகின்றேன் திருவடிக்கென் தலை
வைக்கின்றேன்
திருக்கண்ணால் அகக் கண்ணைத் திறப்பாய்
தேவா.

ஆக்கம்
ஞானசிரோன்மணி,
சைவப்புலவர், பண்டிதர்
இ. வடிவேல்

உ

# நிறைவுரை

திருக்கோணேஸ்வரத்தின் தொன்மையையும், வண்மையையும் இச்சிறு நூலிலே முழுமையாகக் கூறப்பட்டுள்ளதென்று யாரும் கருதவேண்டாம். என்னிடமிருப்பனவும், எனக்குக் கிடைத்தனவுமாகிய கோணேஸ்வரம் பற்றிய பழைய நூல்களும், வேறு நூல்களின் அகச்சான்றுகளும், கல்வெட்டுக்களும் பிற்காலத்தில் எழுதப்பட்ட நூல்களும், பிரபந்தங்களும், பதிகங்களும், பிறநாட்டவர்களின் சரித்திரக் குறிப்புக்களும் வருங் காலச் சந்ததியினரின் அறிவுக்கு விருந்தாக்கப்படவேண்டும் என்னும் நோக்கத்தினால் இந்நூலில் எல்லாவற்றையும் திரட்டிச் சுருக்கமாக விளக்கியுள்ளேன். இந்நூலில் தரப்பட்டுள்ள தரவுகளை வைத்துப் பேராசிரியர்கள் மேலும் மேலும் நன்கு ஆராய்வார்களாக. கோணேஸ்வரம் பற்றிய நூல்களையோ, வரலாற்றுச் சம்பவங்களையோ வைத்திருப்பவர்கள் அவற்றை வெளிக் கொணர்வார்களாக.

ஈழ நாட்டில் பன்னெடுங்காலமாகத் தமிழும், தமிழர் வரலாறுகளும் இந்துமதக் கோட்பாடுகளும் பின்தள்ளப்பட்டு வந்ததையும், வரலாற்றுண்மைகள் திரிபுபடுத்தப்பட்டு வந்ததையும், வாசகர்கள் அறிந்திருப்பீர்கள். காலத்துக்குக் காலம் நாளேடுகளும், சஞ்சிகைகளும் இதற்குக் குரல்கொடுத்துக் கொண்டு வந்ததையும் அறிந்திருப்பீர்கள். சிந்தித்துச் செயல்பட வருங்காலமக்கள் முன்வரவேண்டும்.


கோணேஸ்வரத்தில் மூன்று மாபெருங்கோவில்கள் இருந்த கோணமாமலைப் பிரதேசம் முழுவதும் சிவபூமி, புனிதபூமியென்பதை இந்நூலிலுள்ள ஆதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன. இதனை வலியுறுத்தவே இந்நூலை எழுதியுள்ளேன். மீண்டும் இது புனித பூமியாக்கப்பட வேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோள். திருக்கோணேஸ்வரத்தின் தொன்மையும், வண்மையும் பேணப்படுவதில் தான் ஈழத்தின் அமைதியும் சாந்தியும், சமாதானமும் தங்கியிருக்கின்றது. இதனைத் தத்துவ கலாநிதி - ராதாகிருஷ்ணன் அவர்கள் கூறிய

''நம்பிக்கை ஏற்படுவது கஷ்டமாக இருக்கலாம் ஆனால் நம்பிக்கையின் அவசியத்திலிருந்து மட்டும் நாம் தப்ப முடியாது''

என்னும் தத்துவச் சிந்தனையை உங்கள் முன் வைத்து கோண மாமலையமர்ந்த கோணேசப் பெருமானின் பாதாரவிந்தங்களில் என்னிதயச் சிந்தனைகளைச் சமர்ப்பணம் செய்து அமைகி றேன்.

''நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகம்''.

ஞானசிரோன்மணி
சைவப்புலவர் - பண்டிதர்
இ. வடிவேல்



# சைவப்புலவர், பண்டிதர் இ. வடிவேல் அவர்கள்.....

பண்டிதர் இ. வடிவேல் அவர்கள் மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும், திருக் கோணமலையை வதிவிடமாகவும் கொண்டவர். ஸ்ரீ இராமக் கிருஷ்ண சங்கப் பாடசாலைகளில் கல்வி பயின்று சங்கப் பாடசாலைகளிலேயே 35 வருடங்கள் ஆசிரியசேவையாற்றி அப்பணியிலிருந்து இளைப்பாறினாலும் தாளாண்மையில் இளைப்பின்றி நூலாய்வே நுகர்வாகவும் ஆய்ந்து கண்டவற்றைப் படைப்பதே பணியாகவும் கொண்டவர்.

★ திருக்கோணமலை மாவட்டத் திருத்தலங்கள்.
★ திருக்கோணமலை கோணேசர் கோவில் வரலாறு
★ சண்முகா சரணம்
★ திருமுறைப் பண்ணிசைத் திறனாய்வு என்பவற்றை ஆக்கிப் படைத்தும்
★ கோணமலை அந்தாதி
★ கோணேசர் கல்வெட்டு

ஆகியவற்றினை அரிதின் முயன்று வெளியிட்டும் சைவம் தழுவிய தமிழ் வளர்க்கும் முகத்தால் "வாழ்வாவது தொண்டு" என்னும் பேருண்மை கண்டு அதன் பொருட்டுப் பிரமசாரிய நெறி நின்று கோணமலைப் பிரானுக்கே ஆளாகி பன்னிரண்டு வருடங்கள் கோணேசர் ஆலய பரிபாலன சபையின் செயலாளராகப் பணியாற்றியவர்.

இத்தகைய வாழ்வியலுக்குரிய பக்குவத்தினை சைவசிகாமணி ஸ்ரீ. கா அருணாசல தேசிகமணியை வித்தியா குருவாகவும், திருக்கோலக்கா ஸ்ரீ இராமநாத சிவாச்சாரியாரை தீட்சா குருவாகவும் திருப்பனந்தாள் ஸ்ரீ முத்துக் கந்தசாமி தேசிகரை திருமுறைக் குருவாகவும் பெறும் பேறு பெற்றவர்.

ஞானசிரோன்மணி சைவ சித்தாந்த சிகாமணி, கலைமாமணி, கதாப் பிரசங்கவாரிதி திருமுறைச் செல்வர் முதலாம் பட்டங்கள் அவர் ஆற்றிய சேவையைப் பிரதிபலிக்கும் அணிகள்.

"இருந்தமிழே உன்னால் இருந்தேன்" என்று வாழும் பண்டிதர் வடிவேல் அவர்களின் "திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும்" என்ற நூல் அவரின் ஆய்வுத் திறனுக்கு சான்றாகி வரும் ஏழாவது படைப்பாகும்.

திருக்கோணமலையின் வடிவேலனார் அவர்கள் தம் வாழ்வும், வளமும், மனமும், நினைவும், வாக்கும், செயலும் திருமலையின் மலர்ச்சிக்காக்கி வாழ்ந்து வருகிறார்.

*ஜீ. பு. 14. குணசிங்கபுரம்*
*கொழும்பு - 12.*

சிவ சிவ
**பிள்ளைக்கவி வே. சிவராசசிங்கம்**

Jeyshan Print, 98-B Ratnam Road, Colombo-13.